# சமூக மாற்ற பாதையில் தடம் பதித்தவர்கள்

## CSIM - முன்னாள் மாணவர்களின் கதைகள்



CSIM பப்பிளிகேஷன்

# சமூக மாற்ற பாதையில் தடம் பதித்தவர்கள்

**CSIM** - முன்னாள் மாணவர்களின் கதைகள்

**Conversations Today** பத்திரிக்கையில் இடம்பெற்றவை

**CSIM பப்பிளிகேஷன்**

**First Edition: May 2023**

©Copyright: Centre for Social Initiative and Management
Chennai - 600116

**Price:** Rs. 200/-

*Published by:*

**CSIM Publications**
391/1, Venkatachalapathi Nagar
Alapakkam, Chennai 600116
Phone: 044 42805365
Email: chennai@csim.in
Web: www.csim.in

*Designed and Printed by:*

**Blink Research and Services**
Email: creative@blinkgen.com
Web: www.blinkgen.com

# முன்னுரை



எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற கவிஞரின் உன்னதமான கனவை நனவாக்க பாடுபட்டு வரும் உண்மையான கர்மவீரர்களின் கள சரித்திரம் இது. விளிம்பு நிலை மாந்தரின் கண்ணீரை துடைத்து விடும் கருணை உள்ளங்களின் மூச்சு இத்தொகுப்பு. அரசியல் சித்தாந்தங்கள் அகற்ற முடியாத ஏற்றத் தாழ்வுகளை எளிய மக்கள் தகர்த்தெறிய புறப்பட்ட வரலாறு இத்தொகுப்பு. பணபலமும், வலுவான பின்புலமும் அற்ற சாதாரணமானவர்களின் போராட்டத்தின் எதிரொலி இங்கே ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. தெளிவான இலக்கும், அடைந்தே தீர வேண்டுமென்ற தளராத மனத் திறமையும் பெற்ற வீரர்களின் வாழ்க்கை பதிவுகள் இங்கே அரங்கேறியிருக்கிறது. தடைகளை தகர்த்தெறிந்த வீரர்களின் அனுபவங்கள் இங்கே அச்சில் ஏறியிருக்கிறது. இந்த ஆக்கபூர்வ போராளிகளின் பாசறையாம் CSIM இன் பங்களிப்பை இச் சமூகத்திற்கு தெரியப்படுத்தும் கையேடு இது.

நம் கண் முன்னே தோன்றத் தொடங்கியிருக்கும் தன்னிகரில்லா பாரத தேசத்தின் எதிர்கால சிற்பிகளாம் இளைஞர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமையப் போகும் ஒரு தொகுப்பு இது.

இவர்கள் கை தூக்கிவிட்ட மனிதர்களைப் பாருங்கள்: இளம் வயதில் புற்று நோயால் தாக்கப்பட்டவர்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், போதைக்கு அடிமையானவர்கள், தெருவாழ், குடிசைவாழ், காட்டுவாழ் மற்றும் மலைவாழ் மக்கள், இயற்கை

விவசாயம் செய்யும் சிறு விவசாயிகள், சாலை விபத்தில் சிக்கியவர்கள், நாடோடிகள், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், கேட்கும் திறன் குறைந்தவர்கள், HIV ஆல் பாதிக்கப்பட்ட குழந்தைகள் என இப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவர்கள் பயணம் சொகுசானதல்ல. பல இடையூறுகளை சந்தித்து, போராடி தாண்டி வந்த பயணம். அன்று கவிஞர் சொன்னார்: "முயல் கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதோ" என்று. அதை மெய்படுத்தி காட்டினர் இந்த இளம் சிங்கங்கள்.

எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும் விளிம்பு நிலை மக்கள் இருந்துக்கொண்டுதான் இருக்கிறார்கள், அரசாங்கங்கள் மட்டுமே இவர்களை காப்பாற்ற முடியாது. சமுதாய அக்கறை கொண்ட நல்ல உள்ளங்களும் சேர்ந்து தான் இதை சரி செய்ய முடியும். அதற்கு வழிகாட்டும் CSIM நிறுவனம் உருவாக்கிய இந்த சமுதாய உதவியாளர்கள் இன்னும் அதிகமாக உருவாகி கொண்டு வருகிறார்கள். "நல்லவர் வாழும் புதிய சமுதாயம் நிச்சயம் ஒரு நாள் உருவாகும்" என்ற பாடல் வரிகளின் நம்பிக்கையின் விடிவெள்ளியே இத்தொகுப்பு.

**Dr. C. குமார் பாபு MD; DPM; Ph.D; FIPS**

முன்னாள் மனநலத் துறைத் தலைவர்

அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி

மற்றும் மருத்துவமனை, சென்னை

# பதிப்புரை



இந்நூலைத் தொகுக்க
வழிவகுத்த நமது
எழுத்தாளர்களுடன் தங்கள்

கதைகளையும்
நுண்ணறிவுகளையும்
தாராளமாகப் பகிர்ந்து

கொண்ட CSIM முன்னாள் மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பு இல்லாமல், இந்த புத்தகத்தை தொகுத்திருக்க முடியாது

அவர்களின் அர்ப்பணிப்பும் தைரியமும் நம் அனைவருக்கும் ஒரு உத்வேகத்தை அளிக்கிறது. இப்புத்தகம் சமூக மாற்றத் துறையில் அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்யும் என்று நான் நம்புகிறேன். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

ஆங்கிலத்தில் மூலக் கட்டுரைகளை எழுதிய திருமதி. சண்முகப்ரியா. T அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கட்டுரைகளை தன்னார்வத்துடன் முழு அர்ப்பணிப்போடு தமிழில் மொழி பெயர்த்த விஷ்ராந்தியின் முன்னாள் அறங்காவலர் திருமதி ராஜி கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு எனது சிறப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பிற்கு உறுதுணையாக இருந்த திரு. சுந்தர் ஜோதி, திருமிகு லோகம்மாள் மற்றும் திரு.கார்த்திகேயன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்தை வடிவமைக்க இவர்களின் நிபுணத்துவம் உதவியது.

மொழிபெயர்ப்பு செயல்முறையின் மூலம் எனது குழுவை பொறுமையாக வழிநடத்தி எங்கள் கருத்துக்களை தெளிவுபடுத்தியதற்காக டாக்டர் குமார்பாபுமற்றும்திருமதிலதாசுரேஷ்ஆகியோருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களின் நுண்ணறிவுள்ள கருத்துக்கள் கையெழுத்துப் பிரதியின் தரத்தை பெரிதும் மேம்படுத்தின.

இந்தப் புத்தகத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்காக, பிளிங்க் அறக்கட்டளையின் குழுவினருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாரி பானு**

**தலைமை பதிப்பாசிரியர்**

# பொருளடக்கம்

1. திரு.டி.பி.கே பாபு ....8
2. டாக்டர் வாசுதேவ் சதுர்வேதி ....14
3. திரு. S செழியன் ....21
4. திருமிகு ஹரிப்பிரியா பாதுல ....26
5. திரு. ஐயப்பன் சுப்ரமணியம் ....31
6. திருமிகு. கலா பழனியப்பன் ....35
7. திரு. K குமார் ....40
8. திரு. லூயிஸ் செல்வகுமார் ....45
9. திருமிகு. மல்லிகா வல்லூறு ....50
10. திரு. M மணிவண்ணன் ....55
11. திரு. மன்னா ஏகாம்பரம் ....61
12. திருமிகு K மானு ....66
13. டாக்டர் முகமத் ரப்லுடின் ....71
14. திரு. மொரார்ஜி தேசாய் ....76
15. திரு. பிரபாகர் ....81
16. திரு. ராதாகிருஷ்ணன் ....88
17. திரு. ரஹீம் சாயிக் ....93
18. திரு. சங்கர் மாட்டம் ....98
19. திருமிகு. சீதா தேவி .... 103
20. திருமிகு. செந்தமிழ் செல்வி .... 109
21. திரு. செந்தில் .... 114
22. திருமிகு. விஜி .... 121

# 1. திரு. டி.பி.கே பாபு

## நாம் கேட்கிறோமா?



CSIM அமைப்பில் பயின்றதன் மூலம் எனக்கான லட்சியங்களைப் பற்றிய சிந்தனை தோன்றியது. காது கேளாதோர்களின் சிரமங்களையும் தடைகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது என்ற திரு. டி.பி.கே பாபு தெரிவிக்கிறார்.

செவி வழி கேட்பது ஒரு கலை. ஒரு வரமும் கூட. நம்முடைய எல்லா உணர்வுகளையும் சேர்ந்து அனுபவிக்கச் செய்வது செவி வழி கேட்டல் என்பதால் கட்டமைக்கப்பட்டது. காதுகேளாதவரின் நிலை எவ்வாறு இருக்கும்? இந்த கேள்வி எனக்குள் தோன்றிக் கொண்டே இருந்தது. அவர்களால் சாதாரண மனிதனாக வாழ்வது சாத்தியமா?

காதுகேளாமை குறைபாடுள்ள என் உறவினர் ஒருவரைக் கூர்ந்து கவனித்ததில் அவர்களுடைய பார்வையில் இந்தக் குறைகளிலிருந்து எவ்வாறு மீண்டு வருகிறார்கள்

என்பது புரிந்தது. சிறிய வழிகளின் மூலம் அவர்களுக்கு உதவி செய்து அவர்களுடைய தடைகளைக் குறைக்க எண்ணி இது போன்ற காது கேளாத மற்ற சிறார்களுக்கும் உதவிகளைச் செய்ய முயன்றேன் என்று ஹைதராபாத்தில் உள்ள Ashrayakrut யின் நிறுவனரான டி.பி.கேபாபு தெரிவிக்கிறார்.

Aliyavar Jung National Institute கல்லூரியில் காதுகேளாதோருக்கான டிப்ளமா (Diploma) படிப்பை முடித்து அடிப்படை அறிவை வளர்த்து கொண்டதில் அது போன்ற குறைபாடுள்ள சிறுவர்களுக்கான வழிகாட்டும் தொண்டினைச் செய்ய ஆர்வம் கொண்டார். பட்டப்படிப்பு முடித்ததும் என்னும் காதுகேளாதோருக்கான லாப நோக்கம் இல்லாத நிறுவனத்தை உடனடியாகக் கட்டமைத்தார்.

1996 ஆம் வருடம் சமூகப் பணிகளின் விவரங்களைப் பற்றிய அனுபவம் இல்லாத நிலைமை இருந்து வந்தது. அதனால் இந்த சமூக செயல்பாடு பற்றிய திட்டங்களை இதில் பங்கு கொள்பவர்களிடம் எடுத்துக் கூறி இதன் நம்பகத் தன்மையை உறுதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அடிப்படையான பணிகளில் அதிகமான முயற்சி எடுத்ததின் மூலம் இன்று சிறந்து விளங்கி நம்பகத் தன்மையுடன் முன்னேறி இருக்கிறது என்று உருக்கமாகக் கூறுகிறார். இந்தக் குறைபாட்டினால் இச்சிறுவர்களின் ஏழ்மை நிலையிலிருக்கும் பெற்றோர் இக்குழந்தைகளைக் கைவிடுவதைப் பார்த்துக் கொண்டு இருக்கும் நிலைமையைத் தவிர்த்தார்.

முதலில் 5 குழந்தைகளுடன் ஆரம்பித்த சிறப்புப் பள்ளி இன்று ஹைதராபாத்தில் 4 சிறப்பு பள்ளிகளுடனும், ஆந்திரமாநிலத்தில் ஒரு பள்ளியுமாக வளர்ந்து 550 சிறார்களைப் பேணும் தொண்டு நிறுவனமாக பரிமளிக்கிறது.

"அமைப்பின் வலிமையானது இந்த குறைபாடுள்ள சிறார்களுக்கான தனிப்பயனாகக் கருதப்பட்ட திட்டமிடப்பட்ட பாடப்பகுதிகளும் மற்றுமே அவர்கள் பயன்பெறத்தக்க வகையில் உதவிகரமான கருவிகளும் ஒவ்வொரு பயனாளியையும் கவனித்து செயல்படுத்துவதில் தான் அமைந்துள்ளது. நாம் பார்க்கும் பார்வையில் தான் எல்லாமே உருவாகிறது. கல்வியும் அதில் ஒன்றாகும் என்னும் கூற்றை நான் நம்புகிறேன்."

"அதேசமயம் ஆசிரியர், மாணவர்களின் இடைப்பட்ட விகிதம் (1:8) என்ற அடிப்படையில் கல்வி அளிப்பதால் சிறுவர்களின் முன்னேற்றத்தையும் கவனிக்க முடிகிறது. இவற்றுடன் பெற்றோர்களின் பய்களிப்பும் சேருவதால் எங்கள் குழுவினரின் செயல்பாடுகளில் மேம்பட்டநிலையை அடைய முடிகிறது. ஒவ்வொரு சிறுவனின் நம்பிக்கையுடன் கூடிய புன்னகை முகத்தைப் பார்க்கும் பொழுது மேலும் ஆர்வத்துடன் தொண்டு செய்யத் தூண்டுகிறது" என்று கூறுகிறார்.

சிறார்களுக்கு தகுந்த முறையில் பள்ளிக் கல்வி அளிக்கும் செயல்பாடுகள் வெற்றி அடைந்ததால் அவர்களை சுயமாகத் தனித்து இயங்கும்படி அவர்களுக்கான வாழ்வாதாரத்துடன் கூடிய வாழ்க்கை முறைக்கான கைவேலைத் திறன்களைக் கற்றுக் கொடுத்து சுதந்தரமாக வளர்ச்சியடைய உதவிகளைச் செய்யத் தீர்மானித்தார்கள்.

2010 ஆம் ஆண்டு ஊடகம் மற்றும் வரைப்படப் பயிற்சிகளைச் செயல்படுத்த எண்ணி 600 சிறுவர்களுக்கு பயிற்சி அளித்தனர். மேலும் 270 சிறார்களை (காட்சி விளைவுகள் மற்றும் கணிணியில் வரைபடம் வரையும் கலை) என்னும் திறன் பயிற்சி அளித்து நல்ல திரைப்படம் எடுக்கும் குழுமப் பணிகளில் அமர்த்தியுள்ளனர்.

2015 ஆம் வருடம் காது கேளாதோருக்கான நடமாடும் ஊர்தி மருந்து மையம் ஏற்படுத்தி ஆரம்பத்திலேயே காதுகேளாமைக் குறைபாட்டைக் கண்டுபடிக்கும் எண்ணத்தில் முதல் முதலாகச் செயல்படுத்தினார். அதன் மூலம் வறுமைக்கோட்டில் இடர்படும் காதுகேளாத சிறார்களை அரசுப்பள்ளிகளிலும் அங்கன்வாடி மையங்களிலும் கண்டு, குறைகளைச் சீர்படுத்தும் பணிகளிலும் ஈடுபட்டார். இதுவரை 1.2 இலட்சம் சிறார்களைச் சென்றடைந்து, காதுகேளாமைக் குறைபாட்டை எளிதில் சீர் செய்ய முடியும் என்று செயல் மூலம் வெளிப்படுத்தினார். இந்த புரிதல் தொலைதூர கிராமங்களில் உள்ளவர்களுக்கு ஒரு மாபெரும் முன்னேற்றமாகும். அவர்களை நேரில் சென்று கவனித்து சிகிச்சை மேற்கொள்வதுதான் சிறந்த வழி என்றும் தொடர்ந்தார். நகர் காலனியிலுள்ள காதுகேளாமை குறைபாடுகளுக்கான மருத்துவமனைகளில் ஆரம்பநிலையில் குறைபாட்டைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கும் வசதிகளை ஏற்படுத்தும்படி செய்தார். அச்சிறார்களுக்கான தேவைப்படும் அனைத்து உபகரணங்களை வரையறுத்து சிகிச்சை செய்யும் பணிகளுக்குக் கிடைக்குமாறு செய்தார்.

அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் ஒலியியல் வல்லுநர்கள் காது மூக்குதொண்டை மருத்துவக் குழு சிறந்த முறையில் பயிற்றுவிக்கும் கல்வியாளர்கள் கவனத்துடன் கூடிய பேச்சுதிறன் கொண்ட மொழி வல்லுனர்கள் தன்னார்வலர்கள் ஆகியோர்கள் அடங்கிய பன்முகத் தன்மையுடைய குழுவினர் அமைப்பின் முதுகெலும்பாக இருந்து வந்திருக்கிறார்கள். மேற்கூறிய அனைவரின் பங்களிப்பையும் ஊக்கத்துடன் கூடிய தொண்டினையும் வாய்ப்புக் கிடைக்கும்போது மதித்து போற்றியிருக்கிறார்.

மேலும் இந்தக் குழுவினரின் முயற்சிகளை வாய்மொழி மற்றும் காணொலி காட்சிகள் கேட்டுஅறியும் வழிமுறைகள் ஆகிய அனைத்துப் பயிற்சிகளின் மூலமே கேட்கும் திறனை கையகப்படுத்த முடிந்தது. ஒவ்வொரு சிறுவனுடைய பேசுவதைப் புரிந்துகொள்ளும் தன்மை சூழலுக்குக் கேற்றவாறு புரிந்து விடையளிக்கும் திறமை ஆகிய செயல்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் நிறைய சவால்கள் உள்ளன. எங்களுடைய ஒட்டுமொத்த முயற்சிகளின் மூலமாக அவர்கள் அனைவரும் முன்னேறிச் செல்வதைக் காண முடிந்தது என்ற பாபு உருக்கமாக் கூறுகிறார். இந்த நெடிய நீண்ட பயணத்தில் ஒவ்வொரு சிறிய முன்னேற்றம் மூலம் அதிகமானஆற்றலைக் கற்றுக் கொண்டதாகவும் கூறுகிறார்.

ஆரம்பித்து 6 வருடங்களுக்குப் பின்னர் அமைப்பு அவருக்குச் சரியான பாதையைக் காட்டியதாகக் குறிப்பிடுகிறார். என்னுடைய லட்சியங்களுக்கு உறுதுணையாக அமைப்பு உதவிகரமாகவும் என்னுடைய பார்வையை விசாலமாக்கி நீண்டகாலத் திட்டங்களை வரையறுக்கவும் ஊக்கப்படுத்தியது. காதுகேளாதோரின் உண்மையான குறைபாடுகளையும் தேவைகளையும் புரிந்துக் கொள்ள உதவிகரமாக இருந்தது.

அமைப்பின் அடிபட்ட நிறுவனரான என்னால் கற்றுக் கொடுத்த பாடங்களின் பலதரப்பட்ட பன்முகத்தன்மை கொண்ட அனுபவங்களை நன்கு உணர முடிந்தது. மேலும் ஊக்கமும் ஆர்வமும் எனக்குள் தோன்றி என்னை என்னுடைய நோக்கத்தைப் பற்றிய மதிப்பை உயர்த்தச் செய்தது என்று பாபு தெரிவிக்கிறார்.

ஒரு மனிதனின் முயற்சியால் விளைந்த கனவின் மூலம் அமைப்பு முழுமையான வடிவத்தைக் கட்டமைத்து,

காதுகேளாதோர் அமைப்புகள் இருப்பிடங்களுக்கு நேரில் சென்று சிகிச்சை செய்தல், சிறப்புப் பயிற்சி அளிக்கும் பள்ளிகள், குறைபாடுகளை கண்டு பிடித்து சிகிச்சை அளிக்கும் முறைகள், சிறப்புப் பயிற்சி அளிக்கும் கல்வியாளர்களைத் தயார்படுத்தும் கல்லூரி அமைத்தல் ஆகிய அனைத்தையும் ஒன்று சேரும்படி, சமூகத்தில் பணிகளைச் செய்து வருகிறது. இவ்வாறு செய்வதன் மூலம் மக்களையும் குழுவினரையும் ஊக்கப்படுத்தியது. உலக காதுகேளாதோர் அமைப்பில் உறுப்பினராகவும் மதிப்புமிக்க அமைப்புகளில் கடந்த 25 வருடங்களாகப் பயணித்து வருகிறது. காதுகேளாதோர், அவர்களுடைய வாழ்க்கையில் அனைத்துத் தடைகளையும் கடந்து முன்னேறி வருவதில் அதிகமான ஆர்வம் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வுடன் தொண்டாற்ற பாபு விரும்புகிறார்.

# 2. டாக்டர் வாசுதேவ் சதுர்வேதி

## திறன்கள் மற்றும் உரிமைகள்




புற்றுநோயை குணப்படுத்தும், முன்னெடுப்பில் ஸ்வஸ்தவா புற்றுநோய் ஆய்வுகள் (Swastava Cancer Care) என்னும் அமைப்பு முயற்சி எடுத்துவருகிறது. பலவிதமான நோய்கள்ஆக்கிரமிக்கும் தற்காலத்தில் மக்களுக்கு நோயின் தன்மையும், அதைப்பற்றிய புரிதலும்,அதைக் கையாளுவதில் விழிப்புணர்வும் தேவைப்படுகிறது. "நாம் நம்முடைய மனநிலையில், மற்றும் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்."

குடும்பச் சூழலிலிருந்து, சமூகம் வரை, நடைமுறைப் பழக்கவழக்கங்கள், ஆரோக்யமான வாழ்வுக்கு அடிப்படையான அஸ்திவாரமாகக் காணப்படுகிறது." ஸ்வஸ்தவா புற்றுநோய் ஆய்வுமையத்தின் நிறுவனர் டாக்டர். வாசுதேவ் சதுர்வேதி, கீழ்வருமாறு கூறுகிறார்.

"சமுதாயத்தை மிரட்டும் இந்த கொடிய புற்றுநோய் பற்றிய தெளிவான புரிதலும், அதிலிருந்து மீண்டுவரும் நிலையும், விழிப்புணர்வும், ஒவ்வொருவருக்கும் தெரிந்திருப்பது அவசியமாகிறது".

ஹைதராபாத் என்னும் ஊரிலுள்ள இந்த அமைப்பு புற்றுநோயால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, பாதிக்கப்பட்ட நபர்களால் ஆரம்பிக்கப்பட்டது. புற்றுநோயால் அவதிப்பட்டு, தங்கள் வாழ்வை இழந்தவர்களுடைய அனுபவத்திலிருந்து, தெரிந்துக் கொண்ட பாடம்," புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து குணப்படுத்தி அதைக் கட்டுக்குள் கொண்டுவரலாம்" என்று டாக்டர் வாசுதேவ் சதுர்வேதி கூறுகிறார்.

மேற்சொன்ன உரையை, நாம் நமக்குள்ளேயே உரக்கச் சொல்லிக் கொள்வது நன்மை பயக்கும். மற்றவர் கூறி கேட்பதைவிட, நாம் உறுதியாக இருப்பது நம்மால் முடியும் என்று Dr.சதுர்வேதி நெகிழ்ச்சியுடன் கூறுகிறார். அவருடைய மனைவி கருப்பை புற்றுநோயால் அவதிப்பட்டுக் காலமானதைக் கூறி அவரே பெருங்குடல் புற்றுநோயிலிருந்து மீண்டு வந்திருப்பதை சாட்சியாகக் கூறி இந்த நோயிலிருந்து மீளமுடியும் என்று நம்பிக்கையூட்டுகிறார்.

புற்றுநோய் பற்றி விழிப்புணர்வால் அவர் மனைவி இறந்த சோகத்தை ஈடுகட்டும் விதத்தில் எந்நேரமும் ஏதாவது ஒருபணியில் ஈடுபட்டு மனதைத் தளர்ச்சியடையாமல் வைத்திருப்பதாகக் கூறுகிறார். அதிகமான ஈடுபாட்டுடனும் பொறுப்புணர்வுடனும் மற்ற பணிகளில் ஈடுபட்டதால் அவை தன்னை முழுமையான மனிதாக வாழ்வதற்கு ஏற்ற மனநிலையை அடையும்படி செய்ததாகவும் கூறுகிறார், இந்த 60 வயதைக் கடந்த டாக்டர் வாசுதேவ் சதுர்வேதி.

கிராமப்புற குடும்பங்களில் முக்கியமாக 30 வயதைக் கடந்த பெண்களின் உடல்நிலை பற்றிய சிந்தனை எழவில்லை என்பதால் 2016 ஆம் ஆண்டு அவர் ஒரு குழு அமைத்து ஸ்வஸ்தவா care மூலம் ஆய்வு மேற்கொண்டதில் தெலுங்கானா மாவட்டத்தில் அதிகமான பெண்கள் இந்தகொடிய நோய்க்கு ஆட்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கு உரிய சிகிச்சை முறைகளை சரியான முறையில் செய்யாமல் இருப்பதையும் வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகிறார். முக்கியமாகக் குடும்பங்களில் பெண்களின் உடல்நிலை பற்றிய சிந்தனை மறுக்கப்பட்டு வந்ததாகவும் சொல்கிறார்.

இந்நோய் பற்றிய விழிப்புணர்வு மிகவும் தேவை என்று உணர்ந்த ஸ்வஸ்தா குழு தொலைதூர கிராமங்களில் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை உடனடியாகச் செய்ய ஆரம்பித்தது. மக்கள் நோய் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் நோய் மிகவும் முற்றிய நிலையில் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து விடுவதாகவும் அவர்களின் அறியாமையால் இறந்து விடுவதையும் பார்த்து தங்கள் ஸ்வஸ்தவா குழுவுக்கு முக்கியமான பொறுப்பு இருப்பதாகக் கூறுகிறார்.

மேலும் டாக்டர் வாசுதேவ் தெலுங்கானா மாவட்டத்தில் கருப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் வாய் புற்றுநோய் ஆகிய மூவகைக் கொடிய புற்றுநோய் அதிகமாக பெண்களுக்கு பரவி இருப்பதைக் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவது படித்த கல்வி கற்ற பெண்களே ஆரம்பத்தில் மார்பக புற்றுநோயக்கான சுய பரிசோதனை செய்து கொள்ளாமல் இருக்கும் பொழுது கிராம மகளிரிடம் சுய பரிசோதனை பற்றிய விவரங்கள் தெரிந்திருக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?ஆகையால் தங்களுக்கு அதிகமான பொறுப்பு இருப்பதாகவும் கூறுகிறார்.

ஸ்வஸ்தவா Cancer Care குழு தங்களுடைய தொடர்பில் இருக்கும் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றின் துணையுடன் மக்களுக்கும், நோய்வாய்பட்டவர்களுக்கும் ஒரு பாலமாக இருந்து உரிய சிகிச்சை முறைகளையும் ஏற்படுத்தியது. மேலும் கிராமங்களில் இந்நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த ஏதுவாக ஒரு சமூக ஆர்வலர்கள் அடங்கிய குழுவினருடன் சென்று பரிசோதனைகள் அதிகமாக செய்து அதற்குண்டாக சிகிச்சை முறைகளையும் அக்கிராமபுற பெண்களுக்குக் கற்றுத் தர ஆரம்பித்தது.

ஒவ்வொரு பரிசோதனை (Screening Camp) முறையிலும் 6 முதல் 7 சதவிகிதம் வரை சோதித்ததில் 2 சதவிகிதம் ஏதாவது ஒருவகைப் புற்றுநோயால் அவதியுறுவதாகத் தெரிந்தது என்று வாசுதேவ் கூறுகிறார். சரியான நேரத்தில் நோய் பற்றிய விவரத்தைத் தெரிந்துக் கொள்வது அவசியமானது என்றாலும் அதுவே முடிவாகாது.

அடுத்ததாக இந்த ஸ்வஸ்தவா குழுவினர் இளம் வயதினரையும் அவர்களை சரியானபடி வழிநடத்தும் முறைமையையும் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கத் தொடங்கினர். இளைஞர்கள் சரியான பாதையில் செல்ல அவர்களுடைய பழக்கவழக்கங்கள் ஆகார வகைகள் மற்றும் பெண்களின் மாதவிடாய் பிரச்சனைகள் தன்சுத்தம் சுகாதாரமான முறையில் உடலைப் பேணுவது உடல் அவயங்களின் சுத்தம் ஆகியவை பற்றி அவர்களுக்கு மிகச் சிறிய வயதிலேயே கற்றுக் கொடுப்பது அவசியமாகிறது. மேலும் இளம் வயதினரை நல்லமுறையில் வழி நடத்துவதும் அவர்களுடைக் குறிக்கோள்களையும் சரியான பாதையில் செலுத்துவதும் தேவையாகிறது.

ஸ்வஸ்தவா அமைப்பு தற்சயம் பள்ளிகளில் புகையிலை உட்கொள்வதை ஒழிப்போம் என்னும் கூற்றுப்படி பள்ளியின் நிர்வாகத்துடன் இணைந்து புகையிலை உட்கொள்வதைத் தவிர்க்க போதுமான முயற்சிகளை எடுத்துவருகிறது. மேலும் தெலுங்கானா அரசாங்கமும் ஸ்வஸ்தா cancer அமைப்புடன் உரியமுறையில் இணைந்து அரசுப் பள்ளிகளில் புகையிலை போடுவதால் உண்டாகும் தீமைகளை பள்ளிக்குவரும் மாணவ மாணவர்களிடம் கொண்டு செல்ல உறுதுணையாயிருக்கிறது.

எங்களுடைய இந்த செயலுக்கு இந்த உதவி மிகவும் பக்கபலமாக இருக்கிறது. புற்றுநோய் தடுப்பு காவலர்களை (Ambassador)ஒவ்வொரு பள்ளியிலும் நியமித்து அங்குள்ள இளைஞர்களையும் மாணவர்களையும் வழி நடத்துவதால் இந்த முயற்சியானது மேலும் அதிகமானவர்களைச் சென்றடைகிறது. இம்முறை ஸ்வஸ்தவா அமைப்புக்கு மேலும் உத்வேகமும் பொறுப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது.

மேலும் ஸ்வஸ்தவா குழு முக்கியமான கட்டங்களை SAARC மற்றும் புற்றுநோய் ஒழிப்பு மருத்துவர்களின் கூட்டமைப்பு (Bhutan) மற்றும் தெலுங்கானா, ஆந்திரபிரதேசம் ஆகிய இடங்களில் நடக்கும் NCC Camps ஆகிய மேடைகளில் புற்றுநோய் தடுப்புமற்றும் ஆரம்பத்திலேயே இந்த நோயைக் கண்டுபிடித்து தடுக்கும் முறையையும் குணப்படுத்தும் முறையையும் கொண்டுசெல்கிறது.

இந்த அமைப்பு இதுவரை தெலுங்கானா மாநிலத்தில் 95 கிராமங்கள் (12 ஜில்லாக்கள்) மற்றும் 2042 விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி இருக்கிறது. இதில் மொத்தம் 14962 சிறார்கள், இளைஞர்கள், பெண்கள் கலந்துக்

கொண்டு மேலும் 21 கிராமங்களில் 400 பேருக்குமேல் பயனடைந்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

டாக்டர் வாசுதேவ் சதுர்வேதி மேலும் கூறுகிறார். ஆரம்பத்தில் நான் இது விவரம் பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தேன். ஆனால் கடந்த ஒரு வருடமாக சமூகஆர்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் முக்கியமாக CSIM என்னும் அமைப்பில் சேர்ந்து நிறைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மேலாண்மை பற்றி அறிந்துக் கொண்டேன். தற்சமயம் எனக்கு உத்வேகமும் நம்பிக்கைத் தன்மையும் கூடி ஒரு சரியான இடத்தில் சரியான காரணங்கள் மற்றும் அதிகமானவர்களுக்கு நல்வழிப்படுத்தும் முறைகளையும் அதற்கான நிதி திரட்டும் வழிமுறைகளையும் அறிந்திருக்கிறேன். என்னை பொதுப் பணியாற்றும் மருத்துவர்களையும் தன்னார்வலர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து ஒரு நல்ல நோக்கத்துக்காக உழைப்பதைப் பெருமையாக எண்ணுகிறேன்.

எல்லா முயற்சிகளும் தனி ஒருவனால் கட்டுக்குள் கொண்டுவர முடியாமல் இருக்கிறது. மாநில அல்லது மத்திய அரசும் இந்த நோயைக் குணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் அவசியம். இந்த நோயைத் தடுக்க முக்கியமாகக் கருப்பைப் புற்றுநோய் பரவாமல் தடுக்க மகளிருக்கும் 18 வயதிற்குள் 2 மாதங்களுக்கு 2 முறைதடுப்பூசி போடுவது அவசியமாகிறது. அதிகமான மக்கள் தொகை இருப்பதால் அரசாங்கங்கள் இதில் தலையிட்டு அடுத்தத் தலைமுறை வளரிளம் பருவத்தினருக்கு இந்நோயைக் கட்டுப்படுத்தும் மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தான் நன்றாக இருக்கும். இக்கொடியநோயைப் பற்றிய புரிதலும் குணப்படுத்த முடியும் என்ற விவரமும் நமக்குத்

தெரிகிறது. நம்மால் என்ன முடியுமோஅந்த நல்லதை நாம் செய்ய வேண்டாமா?. என்று கூறி நம் எல்லோருக்கும் மிகப்பெரிய பொறுப்பு இந்த உயரிய நோக்கத்திற்காகக் காத்திருக்கிறது. எல்லோருக்கும் இதில் கவனமும் பங்கும் இருக்கிறது என்று கூறுகிறார்.

# 3. திரு. S செழியன்

## திறமைகளும் உரிமைகளும்




நீதிமன்றமும் உரிமைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஒரு நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு இரண்டு அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இந்தியாவில் அதிகமான வழக்குகளில் அடிப்படை உரிமைகளும் அதிகாரப் பகிர்வுகளும் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்டிருகின்றன. ஒவ்வொரு வழக்கும் முறையான ஆவணப்படுத்துதலும் மக்களின் நியாயமான முறையீடுகளைக் கண்டறிவதிலும் ஈடுப்பட்டுவருகிறது. நீதிமன்றத்தின் துணையுடன் மக்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்டுப் பெறுகிறார்கள்.

எஸ். செழியன் (Founder of We can Social Trust) என்ற அமைப்பின் நிறுவனர் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அடிப்படைத் திறமைகளுடனான சமூகக் குழுவினர். ரொம்ப சுலபமாக சரியானபடி வாய்ப்புகள்

கிடைக்காத காரணத்தால் சமூகத்தில் அடிமட்ட நிலையிலிருந்து சமூக மேம்பாட்டு நிலையை அடைய சிரமத்துடன் இருந்ததை செழியன் கவனித்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் கடலாடி என்னும் குக்கிராமத்தில் சரியான விழிப்புணர்வு இல்லாததால், செழியனே இந்த சிரமத்திற்கு ஆளானதைக் கூறுகிறார்.

மிகச்சிறிய இளமைகாலத்தில் க்ளாக்கோமா (Glaucoma) என்னும் கண் நோயால் பாதிக்கப்பட்டு கண்பார்வை பறிபோய் பார்வையற்றோர் பள்ளியில் படிக்கும்படி நேரிட்டது என்றும் கூறுகிறார். கண்நோய் பற்றிய விழிப்புணர்வும்,சிகிச்சை முறையும் இவருக்கு அக்கால சூழ்நிலையில் எட்டாமல் இருந்ததால் மிகவும் சிரமத்துடன் பள்ளிப் படிப்பு முடித்துப் பின்னர் முதுநிலைபட்டம் மற்றும் ஆசிரியப் பயிற்சியான B,Ed எனப்படும் பல படிகளைக் கடந்து பரீட்சைகளிலும் தேறி பட்டங்களைப் பெற்றார். அரசாங்க உத்தியோக முறையில் போட்டித் தேர்வுகளையும் எழுதி மேலே வருவதற்கு அதிக முயற்சிகளை எடுத்து வந்தார். மாற்றுத் திறனாளிகளுக்கான 3 % ஒதுக்கீடு சரிவர நடைமுறைப் படுத்தப்படாததால் செழியனுக்கு உண்டான வாய்ப்பு கிட்டாமல் போய்விட்டது.

10 வருடங்களுக்கு முன்பு எந்த ஒரு மாற்றுத் திறனாளியும் கல்வி மூலம் முன்னேற முடியாமல் லாட்ரி டிக்கட் விற்பவராக மட்டும் இருக்கும் நிலை இருந்தது. மாற்றுத் திறனாளிகளுக்கு சிவில் சர்வீஸ் போட்டித் தேர்வுகளுக்கு ஒதுக்கீடு சரிவர நடைமுறைப் படுத்தாமல் இருந்ததால் மேற்கண்ட நிலை இருந்தது என்று வருத்தத்துடன் கூறுகிறார் செழியன். உதவித் திட்டங்களை அலட்சிய மனோபாவத்துடன் அணுகி நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தபடியால், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம்

கேள்விக்குறியாக இருந்தது. அதேசமயம் வேறு மாற்றங்களுக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் அடிப்படை உரிமைகளைக் கேட்டுப் பெறுவதே மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடைய செய்யும் ஒரே வழி என்று செழியன் தீர்மானித்தார்.

தகவல் அறியும் சட்டம் (Right to Information Act) மூலம் விவரங்களைச் சேகரித்து நீதிமன்றத்தில் பொது நலவழக்கைத் தொடருவதன் மூலம், இது நாள் வரை வாய்ப்பு கிடைக்காத காரணங்களைப் பற்றிய குறிப்புகளுடன் நீதிமன்றத்தை நாடினார்.

2007 ஆம் வருடம் முதன் முதலாக பொதுநல வழக்கைத் தொடர்ந்தார். TNPSC (Tamil Nadu Public Service Commission) மூலம் நடத்தப்படும் குரூப் 1 தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒதுக்கீட்டை சரிவர நடைமுறைப்படுத்தும் படி வழக்கில் கோரினார். இன்று வரை தீர்வு கிடைக்காமல் வழக்கு நடைபெற்று வருகிறது.

2012 ஆம் வருடம் நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு மாற்றுத்திறனாளிகளுக்குச் சாதகமான முறையில் கிடைத்தது. இந்த தீர்ப்பின் மூலம் (குரூப் 4) தேர்வில் 6000 மாற்றுத்திறனாளிகளுக்குப் பணிகள் கிடைக்கும் வாய்ப்பு அமைந்தது. குரூப் 1 பகுதியில் உயர்நீதிமன்றத்தின் மூலம் வழக்கில்தான் வெற்றி பெற்றேன். ஆனால் தமிழகஅரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறது. கண்டிப்பாக வெற்றிகிட்டும் என்ற செழியன் கூறுகிறார். மேலும் வழக்கு விவரங்களைச் சேகரித்து நல்ல முடிவு கிட்டும் என்று நம்பிக்கையுடன் இருப்பதாகக் கூறுகிறார்.

2006 ஆம் ஆண்டு நம்மால் முடியும் சமூக அறக்கட்டளை என்ற (We can Social Trust) அமைப்பை இந்த மேற்சொன்ன உரிமைகளை மீட்டு எடுப்பதற்கான நடவடிக்கைகளுக்காக நிறுவினார். மற்றும் திறமை மிக்க கைவேலைகளான தையல், நெசவு, சைக்கிள் ரிப்பேர் செய்தல் மற்றும் கணிணி இயல் கல்வி ஆகியவற்றில், மாற்றுத்திறனாளிகளை ஈடுபடச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி ஓரளவு மேம்படச் செய்தார். தையல் கலையும், நெசவுத் தொழிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. சுய வேலை வாய்ப்புகளின் மூலம் தன் காலில் நிற்கும் தைரியமும் ஊக்கமும் அவர்களுக்கு ஏற்பட்டது.

தொழிற்சாலைகளில் சாதாரண வேலை செய்வதிலிருந்து சுயமாக கைத்தறியிலிருந்து விசைத்தறிகளுக்கு மாறியது "செழியனுக்கு நம்பிக்கையும் புத்துணர்வும் அளித்தது." சமூகத்தில் மேலானநிலையில் மாற்றுத்திறனாளிகள் நல்ல வாய்ப்புகள் மூலம் முன்னேறிவருதால் மற்றவர்களின் பார்வையில் மதிப்புடன் கூடிய நிலையை அடைந்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்.

லயோலா கல்லூரியில் அவருக்கிருந்த நெருக்கத்தாலும் சமூக சேவை செய்யும் ஆர்வம் இருந்தாலும் அவருக்கு CSIM ன் அறிமுகம் சரியான தருணத்தில் கிடைத்ததாகக் கூறுகிறார். இதனால் நிறுவனம் நடத்துவது தொடர்பான விவரங்கள் மட்டுமல்லாமல் சமூகத்தில் வித்தியாசமான நல்ல எண்ணம் கொண்ட தன்னார்வலர்கள் மூலமாகவும் சமூக அமைப்பில், அடித்தளத்திலிருந்து முன்னேறிமேல் நிலையை அடைந்தது எளிதாக இருந்தது என்றும் கூறுகிறார். "நாம் செய்யும் பணி எங்களுக்கு முக்கியமாகப்பட்டது". நல்ல எண்ணங்கள் மற்றவர்களுக்கு உதவும் நல்ல பண்பு ஆகியவை CSIM உள்ளஅனைவருக்கும் இருந்தது. இந்த

கூட்டுமுயற்சியில் நானும் ஒருவனாக இருந்தது எனக்கு பெருமையையும் அதேசமயம் பணிவான நடத்தையையும் ஏற்படுத்தியது. மாணவ சேவா தர்ம சம்வர்த்தினி என்ற அமைப்பின் மூலம் (Sadguru Gnananandha National Fellowship) என்ற பரிசு பட்டயமும் திரு.செழியனுக்குக் கிடைத்தது.

ஆசிரியர் வேலை பார்க்கும் செழியன் தற்சமயம் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு எல்.ஐ.சி மற்றும் வங்கிகள் ஆகியவற்றில் கிடைப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார். மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கிகள் கடன் கொடுப்பதில் தயக்கம் காட்டுவதாகவும் கூறுகிறார். ஆகையால் இட ஒதுக்கீடு மூலம் கிடைக்கும் வாய்ப்புகள் என்னுடைய சமூகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நடைமுறைகள் முழுவேகத்துடன் நடைபெற்றால் எல்லா மாற்றுத்திறனாளிகளும் கல்வியிலும் வேலை பணிகளிலும் சிறந்து விளங்கமுடியும். இந்த முறைதான் மற்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் புது வாழ்வு கிட்டி ஊக்கம் அளித்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்யும் என்றும் குறிப்பிடுகிறார்.

# 4. திருமிகு ஹரிப்பிரியா பாதுல

## உரக்க வாசித்தல் அதன் நன்மைகள்



2016 அம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் சிறுவர்கள் மற்றும் இளம் வயதினருக்குமான THE BOOK SELF என்னும் நூலகம் முதலில் 1500 புத்தகத் தொகுப்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகளின் படிபடியான வளர்ச்சி ஒவ்வொரு நிலையிலும் அவர்கள் முன்னேறி வருவதையும் ஒரு பார்வையாளாரகப் பார்ப்பது மிகவும் ஆச்சரியமானது.

சிறுவர்கள் தங்களைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் மற்றும் விதவிதமான செயல்பாடுகள் அவற்றைப் பற்றிய வர்ணனைகள் அதனைச் சார்ந்த விவரங்கள் அவர்களை மேலும் முன்னேறிச் செல்ல உதவியாகவும் மற்றும் அவர்களுடைய அடிப்படை குணாதிசயங்களிலும் வளர்ச்சி காண உதவுகிறது. இளவயது முடியுமுன்னர் நாம் முறையான நடைமுறைப் பழக்கவழக்கங்களை வயது முதிர்ந்தவர்களாகிய நாம் சீக்கரமாகவே கண்டுபிடித்து அச்சிறுவர்களை நாம் முன்னேறும்படி செய்ய வேண்டும்.

Ms. Haripriyabathula நான் அவர்களுக்காக வாசிக்கும் பழக்கத்தை முதலிடமாகக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார்.இந்த பழக்கத்தை ஏற்படுத்தும் எண்ணத்துடன் BOOK SELF நூலகம் மற்றும் கற்றுக் கொடுக்கும் மையம் ஆகியவற்றின் நிறுவனராகவும் ஹைதராபாத் நகரில் இயங்கி வருகிறார். Ms. Haripriyabathula உயர்கல்வியான எம்.எஸ் உயிரியல் பட்டப்படிப்பை சிங்கப்பூரில் உள்ள தேசியப் பல்கலைக் கழகத்தில் படித்து வெற்றிகரமாக முடித்துப் பின்னர் பட்டப்படிப்புக்கும் தம் மனதில் தோன்றும் சிந்தனைகளுக்கும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்தார். முதுகலை படிக்கும் சமயம் அதிகமாக நூலகங்களுக்கு சென்று தேர்ந்த புத்தகங்களைப் படித்து புத்தக வாசிப்பில் உண்டாகும் அனுபவத்தினால் இலக்கியத்தின் மாண்பும் சிந்தனைகளும் கருத்துக்களின் தாக்கமும் அவருக்குள் உயரிய சிந்தனைகளை எழுப்பிவிட்டன. ஆதலால் Ms. Haripriyabathula சிறுவர்கள் இளைஞர்களை புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினால் அவர்கள் முன்னேற்றம் அடைவார்கள் என்று உறுதியாக நம்பினார்.

படிப்பு முடித்து வீடு திரும்பியதும் அவருடைய தமக்கையின் 3 வயது மகள் வீடியோவை வைத்து விளையாடி (Games) பொழுதைக் கழிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு புத்தகங்கள் படிப்பதில்லையா? என்று கேட்டு அதற்கான பதிலாக என்னால் வீட்டிலுள்ள புத்தகங்களைப் படிக்க முடியுமா? என்றுத் தெரியவில்லை என்பதைக் கேட்டு வியப்படைந்தார்.

இந்த பதிலினால் ஆழ்ந்த வருத்தமடைந்த ஹரிப்பிரியா அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அந்த சிறுமிக்காக புத்தகங்கள் வாசிக்க ஆரம்பித்தார். எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் புத்தகம் வாசிக்கத் தொடங்கியதும்

அவருடைய சிந்தனையில் ஒரு புதிய எண்ணம் தோன்றியது. சிறுவர்கள் வாசிப்பதை விரும்புகிறார்கள் ஆனால் எதைப் படிக்கவேண்டும் எப்படி சாதிக்கமுடியும் என்று அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்ற தெளிவு பிறந்தது.

2 வருடங்கள் அந்த சிறுமி ஒழுங்காகப் படிக்க ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னேறினாள். இந்த சம்பவம் ஹரிபிரியாவுக்கு மிகுந்த உத்வேகத்தையும் மனமகிழ்ச்சியையும் கொடுத்தது. ஹரிபிரியா சிறுவர்களுக்கான நூலகத்தை ஆரம்பிக்க முடிவெடுத்தார். இந்த நோக்கத்தில் அவர் நூலகத்தை நிறுவி புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஒவ்வொரு சிறுவருக்குமான ஒழுக்கமாக கொண்டுவந்தார். மிகவும் பொறுப்புடன் செய்தார். இந்த முயற்சியில் அவர் அதிகமான புத்தகங்களின் பரிச்சயமும் ஒவ்வொரு சிறுவருக்கும் ஏற்ற புத்தகத்தை தேர்ந்தெடுக்கும் பழக்கமும் ஹரிபிரியாவுக்கு ஏற்பட்டது.

வெறுமனே புத்தகங்களை சேகரிப்பது மட்டுமல்லாது BOOK SELF நூலகத்தின் மூலம் ஒவ்வொரு சிறுவனும் இந்த உலகத்தைப் பற்றிய அறிவும் இலக்கியத்தின் சிறப்பையும் அறிவுசார்ந்த கலை இலக்கியம் பற்றியும் விரிவான சிந்தனைகள் ஏற்படும்படி செய்யவும் முயற்சிகள் மேற்கொண்டார். சிறுவர்களுக்கான நூலகம் நடத்துவது மிகக் கடினமான சவால் என்று அவர் ஏற்றுக் கொள்கிறார்

விடா முயற்சியுடன் முயன்று தான் நினைத்த எண்ணமான ஒவ்வொரு குழந்தையும் புத்தக வாசிப்பை ஒரு ஒழுங்குடன் கடைபிடிக்க வேண்டும் என்று மிகுந்த பொறுப்புணர்வுடன்

அக்கறை எடுத்துவந்தார். இரண்டு முக்கியமான காரணிகளை, (factors) அதாவது அதிகமான புத்தகங்களின் பரிச்சயம் மற்றும் ஒவ்வொரு சிறுவருக்கும் குறிப்பிடும்படி சரியான புத்தகத் தேர்வும் அவசியம். புத்தகங்களின் எண்ணிக்கை மட்டுமல்ல அதைவிட இலக்கிய உலகில் விரிவான பரிச்சயமும் ஏற்படும்படி அடிப்படைத் தேவையான BOOK SELF என்ற நூலகத்தை 2016ம் ஆண்டில் நிறுவினார்.

இதன்மூலம் சிறுவர்களுக்கு உரக்க வாசிப்பின் கவனம் கதைகள் சொல்லுதல் மற்றும் பொம்மலாட்ட கலையின் மூலம் அறிவைவளர்த்தல் மற்றும் சொந்தமாக எழுதுவது பொதுமேடையில் பேசுவது போன்ற காரியங்களைப் புத்தக சங்கங்கள் மூலம் வளர்த்தெடுத்தார். இந்நூலகங்களின் வளர்ச்சியின் மூலம் ஹரிபிரியா கதைகள் சொல்லும் திறனுள்ளவராக நிறைய நிறுவனங்களில் பங்கேற்று சிறப்புற விளங்கினார்.

விடுமுறை காலத்தில் இலக்கிய கூட்டங்கள் மற்றும் கதை சொல்லுவதன் மூலம் பிரசித்தி பெற்ற The Gruffalo என்னும் குணச்சித்திரக் கதைகளைச் சொல்லுவதால் சிறுவர்கள் மனதளவில் தெளிவு பெறுகிறார்கள். அதேசமயம் அவர்களின் சிந்தனைகளும் விரிவுப்படுத்தப்படுகிறது. ஹரிபிரியாவின் நூலகத்தில் தற்சமயம் 8000 புத்தகங்கள் வரை இருப்பதாகக்கூறுகிறார்.குழந்தைகளும்சிறுவர்களும் புத்தங்கள் படிப்பது பற்றி என்னுடன் கலந்து உரையாடும் பொழுது எனக்கு நான் சந்தித்த சவால்களெல்லாம் மறைந்து போய்விடுகிறது. அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் சந்தேகம் மற்றும் கேள்விகள் மூலம் அவர்களின் அறிவு கூர்மையடைவதைப் பார்த்து நான் இது நாள் வரை எடுத்து வந்த முயற்சியின் பயனாகக் கருதுகிறேன்.

மிகவும் பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் சிறுவர்களுக்கு புத்தகங்கள் பற்றிவிவரம் கிடைப்பதில்லை. இதனால் ஹரிபிரியா பெருமுயற்சி எடுத்து அரசுப்பள்ளிகள் தொலைதூர கிராமங்களுக்குச் சென்று கதை சொல்லும் பட்டறைகளை தொண்டு நிறுவனங்களின் மூலம் நடத்தி வந்தார். நெடிய வலிமைமிக்க திட்டங்கள் தேவையானதால் நூலகத்தை மட்டும் நம்பியிராமல் அதிகமான சிறுவர்களுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் தனிப்பட்டக் கருத்துகளை மற்றவர்களுடன் கலந்துபேசுவது மூலமும் சிந்திக்கும் மனிதர்களாக மாற்றுவதும் அவசியம் என்று கருதினார்.

சரியான நேரத்தில் CSIM ல் சேர்ந்து அந்த நிறுவனத்தின் ஆலோசனைப்படி விரிவான திட்டங்களுடன் தன்னுடைய செயற்பாடுகளை சரியாகத் திட்டமிட்டு தன் பார்வையை விசாலமாக ஆக்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைந்தனர்.

அதிகம் படிப்பறிவில்லாத பெற்றோர்களுக்கும் சமூக நூலகங்களை அமைப்பதின் மூலம் உரக்க வாசித்தலின் நன்மையையும் கதைகள் சொல்லுவதன் முக்கியவத்துவத்தையும் உணர்ந்தார். மொழிக்கும் இலக்கியத்துக்குமான மந்திரம் இதுதான் என்றும் ஹரிபிரியா கூறுகிறார்

# 5. திரு. ஐயப்பன் சுப்ரமணியம்

## ஆதரவு அற்ற சிறார்களை அரவணைத்தல்



நம் சமூகத்தில் தெருக்கள் முக்கியமான வாழ்விடமாகக் கருதப்படுகின்றன. சமூகத்தில் அதிகமான மனிதர்களுக்கு சிறுவயதினர், முதியோர், உடல்நலமுள்ளவர்கள், ஆரோக்கியம் அற்றவர்கள், ஆதரவற்றவர்கள் மற்றும் திக்கற்றவர்கள் அடங்கிய கூட்டத்தினருக்கு புகலிடமாக இருந்து வருகிறது. இவர்கள் அனைவருக்கும் மற்றவர்களால் அதிகமான துன்புறுத்தலுக்கும், பாதிப்புகளுக்கும், சுரண்டப்படுவதற்கும் ஆளாகிறார்கள். முக்கியமாக சிறார்கள் அதிக ஆபத்துக்கு உட்படுகிறார்கள். குடும்பச் சூழலில் வளரும் சிறுவருக்குக் கிடைக்கும் பாதுகாப்பான வாழ்க்கை முறை இவர்களுக்குக் கிடைப்பது அரிது என்பதால் கெட்டப்பழக்கங்களுக்கு அடிமையாய் அவதிப்பட நேரிடுகிறது. சமூகத்தின் கைவிடப்பட்ட நிலையில் இவர்களுக்கு வாழ்வதற்குக் கிடைக்கும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறது.

மனநலம் சரியில்லாத கைவிடப்பட்ட சிறுவர்களின் நிலைமை மிகமிக மோசமானது. அவர்களுக்கு முறையாக வாழ்வதற்கு பாதுகாப்பு கிடைப்பதில்லை. ஆதலால் இம்மாதிரியான சிறுவர்களை சரியான முறையில் சிகிச்சை செய்து அவர்களை எப்பாடு பட்டாவது வாழ வைக்க வேண்டும், அவர்களும் மனிதர்கள் தான் என்று ஐயப்பன் கூறுகிறார்.

அருணோதயம் என்றும் அமைப்பின் நிறுவனரான ஐயப்பன் சுப்ரமணியம் சமூகத்தில் வாழும் வகை தெரியாத இயலாமையுடன் கூடிய மனிதர்களை ஏதாவது ஒருவகையில் வாழவைக்க வேண்டும் என்ற உறுதியுடன் தீர்மானித்து பள்ளி படிப்பு முடித்த பின்னர் இதற்கான டிப்ளமா படிப்பை பிரத்தோயக கவனத்துடன் ஆர்வமாகப் படித்து முடித்தார். இந்த பயிற்சி படிப்பினால் என் அகக்கண் திறந்தது. இம்மாதிரி சிறுவர்களுக்கு ஏற்ற நிறுவனம் ஏதும் அர்ப்பணிப்பு உணர்வுடன் நடத்தப்படவில்லை என்று அறிந்து 2003 ஆம் ஆண்டு சென்னைக்கருகில் உள்ள கொளத்தூர் என்னும் சிற்றூரில் ஒரு வாடகை வீட்டில் ஒரே ஒரு சிறுவனை வைத்து ஆதரிக்கத் தொடங்கினார்.

இந்த அமைப்பை நடத்தும் சமயம் ஏற்படும் சவால்களைப் பற்றி சிந்திக்கவில்லை. என்னுடைய உள்ளுணர்வு மூலம் இந்த சாதனையை செய்யும் முயற்சி எடுக்கப்பட்டது என்று உருக்கமாகக் கூறுகிறார். இந்த அனுபவத்தில் கிடைத்த விஷயங்களும் சாராம்சங்களும் ஒரு நிறுவனமாக அமைத்து தொடர்ந்து செயலாற்றும்படி இந்த நற்காரியத்தை நடத்த தைரியத்துடன் முயற்சித்தார். இந்த தருணத்தில் எனக்கு CSIM பற்றிய செய்தி ஒரு நண்பன் மூலம் கிடைத்தது. CSIM நிறுவனம், என்னை பயிற்றுவித்து இந்த நிலையில் உள்ள சிறார்களை அரவணைத்துச் செல்ல என்னைத் தயார்படுத்தியது.

எந்த ஒரு நிறுவனத்திற்கும் சரியான திட்டமிடுதலும் முன்னேறுவதற்குண்டான பார்வையும் அவசியமானவை. அனுபவமும், நிபுணத்துவமும் கூடிய திறமை வாய்ந்தவர்களின் வழிகாட்டுதலாலும் கலந்தாய்வுகளாலும் அதிகமான உதவிகள் கிடைக்கப் பெற்று என்னை மேலும் இந்தத் தொண்டில் ஈடுபடவைத்தன. ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது. அதாவது முன்வைத்த காலை பின்வைக்க வேண்டாம் என்பது தான். நம்மால் ஏற்படும் தடைகளையும் குறைகளையும் கவனித்துச் சென்றால், அந்த தடைகளை நாம் சுலபமாகக் கடந்துவிடலாம். எல்லா விதமான படிப்பினைகளும் என்னுள் ஆழந்து இயங்கி இந்தச் சிறார்களின் வாழ்வை மேம்படுத்தத் தேவையான ஒரு நீண்டகால தீர்வாக ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பையும் நிர்பந்தத்தையும் ஏற்படுத்தியது என்று விவரிக்கிறார்.

இவர் ஏற்படுத்திய அருணோதயம் என்ற அமைப்பில் 115 சிறார்களும் 50 முழு நேர பணியாளர்களும் இருக்கின்றனர். தொடக்கத்தில் சிறார் இல்லம் 2011 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் 80 சிறுவர்கள் இருந்தனர்.பெண் குழந்தைகளுக்கான இல்லம் தனியாக கொரட்டூருக்கு அருகாமையில் கள்ளிக்குப்பம் என்னும் கிராமத்தில் கட்டப்பட்டு வருகிறது.

எங்களுடைய 10வது ஆண்டில் ஆண் சிறுவர்களுக்கான இல்லம் அமைக்கப்பட்டது. சிறுமிகளுக்கான இல்லம் எங்களது 20 வது ஆண்டுக்குள் நிறுவப்படும். நாங்கள் திட்டமிட்ட நடைமுறைகளின்படி எங்களுடைய சேவை பற்றிய மதிப்பீடுகளையும் சாதனைகளையும் அவ்வப்பொழுது கணக்கிட்டுக் கொள்வோம். தொண்டு நிறுவனங்களை நிர்வகிப்பதில் உள்ள முக்கியத்துவத்தையும் திட்டமிட்டுதலில் உள்ள நெளிவு சுளிவுகளையும் CSIM மூலம் தெரிந்துக்

கொண்டோம். CSIM அமைப்புக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். மேலும் நன்கொடையாளர்களின் துணையும், உதவியும் தொண்டு நிறுவனங்களுக்கு முதுகெலும்பு போன்றது. நன்கொடையாளர்களை அணுகுவதும் தக்கவைத்துக் கொள்வதும் திறமையான சவால்கள் நிறைந்தது. CSIM அமைப்பின் பயிற்சி எனக்கு உதவிகரமாக இருந்தது. ஆரம்பம் முதல் எல்லாவகை உதவிகளையும் CSIM மூலம் பெற்றதால் தற்போது அருணோதயம் குழுவினர் திறமையாகச் செயல்படுவதைப் பார்க்க முடிகிறது என்று பெருமையுடன் கூறுகிறார்.

இத்துடன் ஐயப்பன் திருப்தி அடைந்துவிடுகிறரா? இல்லை என்பது தான் பதில். எத்தனை விழிப்புணர்வு இருந்தாலும் சமூகத்தில் எல்லா நிலைகளிலும் கையாளப்படுபவர்கள் அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர். வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு பாதுகாப்பாக நிறுவனங்கள் உதவும் என்று கூற முடியாது. அவர்களுக்கு உண்டான வேலைவாய்ப்புகள் பாதுகாப்பு மற்றும் தொண்டு நிறுவன உதவிகள் கிடைத்தாலும் சமூகத்தை ஒருங்கிணைப்பது மிகவும் கடினமான காரியம் என்று ஐயப்பன் வருத்தத்துடன் கூறுகிறார்.

சிறார்களுக்கு தனிப்பட்ட கவனம் மற்றும் கைவேலைகளில் திறமையும் கற்றுக் கொடுக்கப்பட்டாலும் அவர்களுக்கான பொறுப்பாக மட்டுமே செயல்பட முடிகிறது. மனநிலை சரியில்லாத சிறார்களுக்கு மேலும் கடினமாகிறது.

கடைசியாக ஐயப்பன் ஒட்டு மொத்த சமூகமும் விழிப்புணர்வு பெற்று ஒதுக்கப்பட்ட சிறார்களின் தேவைகளைப புரிந்துகொண்டு செயல்படுகின்ற நன்நாளை எதிர்பார்க்கிறேன் என்று கூறுகிறார்.

# 6. திருமிகு. கலா பழனியப்பன்

## சமூக முன்னேற்றத்துக்கான பெண்களின் அதிகாரப்பங்கு



கூர்நோக்கும் பகுத்தறிவும் ஆழ்ந்து கவனித்தலும் சேர்ந்து இருப்பது எந்த ஒரு நிகழ்விற்கும் இன்றியமையாதது ஆகும். அதுவும் குழந்தை வளர்க்கும் பணியில் அது மிக மிக முக்கியமானத் தேவையாகும். சரதுபட்டி என்னும் கிராமத்தில் தமிழ்நாட்டிலுள்ள தேனி மாவட்டத்தில் 1998 ஆம் வருடம் தொடங்கப்பட்ட Mahasakthi Welfare Society என்னும் தொண்டு நிறுவனத்தின் அமைப்பாளரான கலா பழனியப்பன் கூற்றுபடி மேற்சொன்ன இரண்டு வழிமுறைகளும் அவர்களால் கடைபிடிக்கப்பட்டதால் தனிபட்ட முறையிலும் செயல்படுத்தும் திறமையிலும் மேம்பட்டு விளங்க முடிந்தது என்று உறுதிபட சொல்லுகிறார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த கலா பெண்களின் நிலைமையையும் குழந்தைகளின் நிலைமையையும்

கூர்ந்து கவனித்து வந்தார். பெண்களும் சிறுவர்களும் அவர்களுடைய வாழ்வில் குடும்பத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்திருக்கிறார்கள் என்று வியப்புடன் கூறுகிறார்.

வளர்ந்த பின்பு கலாவினுடைய தாய் தந்தையின் நல்ல செயல்களின் மூலம் குடும்ப சூழலில் ஏற்படும் பிரச்சனைகள் சிக்கல்களை சரியான முறையில் புரிந்துக் கொள்ளமுடிந்தது என்று நினைவு கூறுகிறார். கலாவின் தகப்பனார் ராணுவத்தில் பணிசெய்து 1962 ஆம் வருடம் நடந்த சைனாவுடனான போர்முனையில் காயம் ஏற்பட்டு மறுபடி கிராமத்திற்கே திரும்பிவந்தார். அவருடைய முயற்சியால் கிராம மக்களிடம் மாற்றங்களைக் கொண்டுவர முடிந்தது. மேலும் கலாவின் தகப்பனார் அந்த கிராமத்தில் வசித்த மக்களுக்கு அடிப்படை சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வையும் முதலுதவி பற்றிய விவரத்தையும் எடுத்துரைத்தார். அவருடைய சமூக மக்களுக்கான செயல்பாடுகளின் பங்களிப்பின் மூலம் ஒரு சமூகக் கட்டமைப்புக்கான தேவைகள் மற்றும் வளங்கள் பற்றிய நுணுக்கமான விஷயங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளமுடிந்தது.

அடுத்த கட்டமாக கலா தனிப்பட்ட முறையில் சொந்தமாக Mahasakthi Welfare Society என்னும் நிறுவனத்தை பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்துக்காகத் தொடங்கினார். சிறு வயதிலேயே இதைப் பற்றிய சிந்தனை இருந்தபடியால் திட்டமிட்ட அணுகுமுறையுடன் இந்த பணியில் ஈடுபட்டதின் மூலம் நல்ல முடிவுகளைத் தொடர்ந்து செய்து வந்தார். இந்த பணியில் மிக முக்கியமான தருணத்தைத் தவற விட்டால் திரும்பவும் ஈடுபடுவது சிரமமான காரியம் என்றும் குறிப்பிடுகிறார்.

பெண்கள் பொருளாதார மேம்பாட்டினால் அதிக நன்மைகள் கிடைத்திருப்பதாகக் கூறும் கலா அதனால் குடும்பங்களும் சமூகத்தினரும் பயனடைந்ததாகக் கூறுகிறார். இந்த நிகழ்வு பல புதுமையான வழிமுறைகளுக்கு வித்திட்டது. இதைத் தெரிந்துக்கொண்ட கலா சுய உதவிக்குழுக்களை நிர்மானித்துச் செயல்பட ஆரம்பித்தார். தொடக்கத்தில் 500 சுய உதவிக் குழுக்களை நிர்மானித்து அவர்களுக்கான கணக்கு வழக்குகளை வைத்துக் கொள்ள பயிற்சி அளித்தார். மேலும் பெண்களுக்கான கைவேலையாக சணலில் செய்யப்படும் பைகள், இயற்கை உரம் மற்றும் பொம்மைகள் செய்தல், தையற்கலை, பூக்கள் தைக்கும் நுணுக்கமான பயிற்சிகள், பால் பண்ணைஅமைத்தல் ஆகிய தொழில்முறைப் பயிற்சிகளைப் பயிற்றுவித்தார்.

30 பெண்களுக்கு பயிற்சி அளித்து அதில் 2 நபர் சொந்தமாகத் தொழில் தொடங்கும்படி செயல்பட்டார். இந்த முயற்சியில் வெற்றிபெறும் விதமாக அவர்களுக்கான வங்கிக்கடன் மற்றும் மேற்பார்வையிடுதல் ஆகியவற்றில் பக்கபலமாக விளங்கினார். இரண்டு நபர் என்பது சிறிய எண்ணிக்கை தான் ஆனால் அதன் மூலம் நம்பிக்கையை பெற முடிந்தது. இந்த நிலைமைக்கு பெண்களை உயர்த்தும் முயற்சிகளில் நிரம்ப காலம் பிடித்தாலும் சம்பாதிக்கும் நிலைமைக்கு அவர்களை முன்னேற்ற முடிந்தது. அதே சமயம் சுதந்திரமான மனப்போக்குடன் அவர்கள் இருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியான நிகழ்வாக இருந்தது. இந்த மாற்றத்திற்குப் பழகிவிட்ட பெண்கள் அவர்களுடைய குழந்தைகளை வாழ்க்கையில் முன்னேற்றமடையச் செய்வதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டனர். குழந்தைகளின் கல்விஅறிவு முக்கியமாக அப்பெண்களால் கருதப்பட்டது என்று கலா கூறுகிறார்.

பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் சரிவர இல்லாதக் காரணத்தினால் பெண் குழந்தைகளின் இடைநிற்றல், உடல் நலம் கெடுதல் ஆகிய நிலைமையை சீர் செய்ய 4 சுய உதவிக் குழுவினர் ஒன்று சேர்ந்து தண்ணீர் நிரப்பும் தொட்டியை நிர்மானித்து கழிப்பறைகளையும் பயன்படுத்து விதமாகப் பணிகளைச் செய்தனர். முக்கியமானக் கட்டங்களில் முடிவு எடுக்கும் தீர்மானங்களைப் பெண்களே தேவையானவற்றை செயல்படுத்த ஆரம்பித்தனர். கலா பழனியப்பன் இதை ஊக்கப்படுத்தி ஆதரவு அளித்து வந்தார். இதுதான் கலாவைப் பொறுத்தவரை உண்மையான அதிகாரப் பரவலாகும்.

கிராமத்திலுள்ள பள்ளிகளும், பால்வாடிகளும் மேம்படுத்தப்பட்டன. மேலும் பலவிதமான வழிமுறைகளான பள்ளிச்சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்தல், ஓவியங்கள் வரைதல் புத்தகங்கள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் தேவையான மரச் சாமான்கள் மற்றும் மரங்கள்,செடிகள் நடுதல் ஆகிய அனைத்தும் பெண்களால் முயற்சியுடன் செயல்படுத்தப்பட்டன.

சுய உதவிக் குழுக்களின் விடா முயற்சியுடன் கூடிய செயல்களால் கல்வி கற்பது மிகவும் சுலபமாகவும் ஈடுபாட்டுடன் கூடியதாக இருந்தது. இதனால் திறமையான சிறார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கலாவும் குழுவினரும் அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளில் கல்வி கற்கும்படி செய்தனர். மாவட்ட ஆட்சியர் மூலம் 3 முறை விருதுகள் கலாவின் அமைப்புக்குக் கிடைத்தன.

இந்த சாதனை சுலபமாக கிடைக்கவில்லை. மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த கிராமம் கலாவின் அமைப்பின் பணிகளின் மூலம் மேன்மையான நிலைமையை

அடைந்திருக்கிறது என்றுக் குறிப்பிடுகிறார். சுய உதவிக் குழுக்கள் மாவட்ட அளவிலும்,மாநில அளவிலும் அவர்கள் செய்து வந்த தொண்டுக்கான விருதுகளைஅதிகமாகப் பெற்றது.

இதுவரை 700 பெண்கள் சுயமாகத் தொழில் செய்து வருகின்றனர். 876 பெண்கள் ஒருங்கிணைந்து Sakthi Farmers Producer company என்னும் அமைப்பின் மூலம் மேலாண்மைக்கான விவசாயப் பணிகளை மேற்பார்வை இடுகின்றனர். வங்கிகடன், விளையாட்டுப் பொருட்களை சந்தைப்படுத்துவது, உரங்களுக்கான தேவைகளை கலாவின் அமைப்பு பக்கபலமாக இருந்து உதவியது.

# 7. திரு. K குமார்

## கிராம மக்களின் நலம் பேணும் நிறுவனம்



இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 70 வருடங்களில் ஒவ்வொரு அம்சத்திலும் தனது பாதையில் கடந்து வந்திருக்கிறது. அதே சமயம் நாட்டிலுள்ள ஜனத்தொகையில் ஒரு பகுதியினர், தொடர்புகள் இல்லாமல் இருப்பதும் தெரிய வருகிறது. பழங்குடி மக்கள் தான் அவ்வாறு அறியப்படாமலும் முன்னேறி வர முடியாதவர்கள் ஆகவும் இருக்கிறார்கள். மாறிவரும் அரசியல் சூழலில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் மெல்ல மெல்ல வெளியே தெரிய ஆரம்பித்திருக்கிறது என்று திரு. குமார் Rural People Welfare Organisation என்னும் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் கூறுகிறார்.

நடுத்தர குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்ட குமாருக்கு சமூகத்தில் விளிம்பு நிலையிலுள்ள மக்களைப் பற்றித் தெரியாமல் இருந்தது. குமார் வளர்ந்த பின்னர் சில திட்டமிட்ட காரணங்களால் மக்களிடையே தொடர்ந்து

சமநிலை இல்லாமல் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதைத் தெரிந்துக் கொண்டார். மேற்கொண்டு கல்வியைத் தொடர முடியாமல் போனதால் பணிகளின் வேலைச் சுமை இவருக்கு உண்மை நிலையை அறிவித்தது. மிகவும் சிரமத்துடன் வேலைகளில் ஈடுபட்டார். இவர் வேலை செய்த நிறுவனத்தின் மூலமாக பழங்குடியினரின் நிலைமைப்பற்றி ஆய்வில் தமிழ்நாட்டிலுள்ள இரண்டு இடங்களில் ஆய்வுபணிகளை மேற்கொண்டார்.

இம்மக்கள் காடுகளைச் சார்ந்த வனத்திலுள்ள வளங்களையே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். காடுகளுக்குச் செல்வதற்கு மலைகளில் சரியான பாதைகள், சாலைகள் போன்ற வசதிகள் இல்லாமல் இருந்தது. இவர்களின் இருப்பிடங்களைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமான காரியமாக இருந்தது. நிறைய சவால்களை அம்மக்கள் எதிர்கொண்ட போதிலும் கிடைப்பதைக் கொண்டு வாழப் பழகியிருந்தார்கள். அவர்களின் நிலைமையை நேரில் கண்டபின் எனக்குள் இந்த மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது. அந்த மக்களுக்கு வாழ்வுக்கு உண்டான உரிமைகளைப் பற்றிய எதுவும் தெரியாமல் இருந்தது. வெளியிலிருந்து யார் மூலமாகவும் உதவிகள் வருவது பற்றிய சிந்தனையும் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது என்று குமார் நம்முடன் பகிர்ந்துக் கொள்கிறார்.

அந்த இருளர் பழங்குடி மக்களுக்காக கடந்த 30 வருடங்களாக அவர்கள் நலனில் அக்கறை கொண்ட குமார் 1986 ஆம் வருடம் Rural People Welfare Organisation (RPWO) என்னும் தொண்டு நிறுவனத்தைக் குறிப்பிட்ட சில நண்பர்களுடன் இணைந்து இந்த கடினமான பணியைமேற்கொண்டார். இருளர் இனமக்கள் வழக்கமான

பணிகளுக்காக வனங்களுக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் வரை காத்திருந்து அந்த குடும்பத்தினருடன் கலந்து உறவாடிப் பழகிவந்தார். முதலில் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதன் மூலம் ஒருங்கிணைக்க விரும்பி செயல்பட எண்ணி ஆரம்பத்தில் அதிகமான தடைகளையும் சிரமங்களையும் எதிர்கொண்டார். சுமார் ஒருவருடம் சென்ற பின்பு அம்மக்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய முடிவு செய்தார்.

இருளர் மக்களின் முழு நம்பிக்கையையும் பெற்றதும் எங்களுடைய பொறுப்புணர்வு அதிகமாயிற்று. குமாருடைய குழுவினரின் முயற்சிகளால் தங்கள் வாழ்வு வளம் பெறும் என்று எண்ணி தங்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருந்ததாகக் கூறினார். 300 குடும்பங்களுக்கான விவசாய நிலப் பட்டாக்களைப் பதிவு செய்வதில் RPWO ஈடுபட்டது.

அம்மக்கள் பட்டாக்களுடன் கூடிய நிலத்திற்கு சொந்தக்காரர்களாக மாறியதும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கான குரலும் மெள்ள எழும்ப ஆரம்பித்தது. அவர்களுக்கு சாதிச்சான்றிழ் கிடைப்பதற்கு குமார் குழுவினர் முயற்சிகள் மேற்கொண்டார். முக்கியமாக சட்டப்படி அவர்களுக்கான அடையாளஅட்டை அங்கீகாரம் கிடைப்பதில் பெருமுயற்சியும் எடுத்தனர். அரசுத்துறை அதிகாரிகள் முதலில் பழங்குடி மக்களை, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சேர்க்காமல் விடப்பட்டிருந்த நிலையை தற்சமயம் மாறி சென்ஸஸ் (Census) கணக்கெடுப்பில் பதிவிடப்பட்டனர்.

மேலும் குமாரின் RPWO அமைப்பு இருளர் இனப்பழங்குடியினர் மலைகளில் மட்டுமல்லாமல்

சமவெளிகளிலும் வசித்து வருகின்றனர் என்பதை அரசுத்துறை அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை சம்மதிக்கவைத்து முயற்சிகள் மூலம் சாதித்துவிட்டனர். அத்துடன் குறிப்பட்ட பழங்குடியினர் வழக்கமான அளவுகோல்படி கணக்கெடுக்கப்பட்டுப் பொருத்த முடியாமல் இருப்பதையும் அதிகாரிகளுக்குத் தெளிவுப்படுத்தினார்.

RPWO கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டு 200 குடும்பங்களை மீட்டு அவர்கள் வாழ்க்கைத்தரம் முன்னேற முயற்சியும் எடுக்க ஆரம்பித்தது. இவர்களின் வாழ்வாதாரத்துக்கான நிதியைப் பெற வங்கிகளை அணுகியதில் பழங்குடியினரின் வாழ்க்கை முறையே தடையாக இருந்தது என்று குமார் கூறுகிறார். வங்கிகளையும் பழங்குடி இனமக்களின் பிரதிநிதிகளும் கலந்து ஆலோசித்து நிதி ஆதாரங்களின் வசதிகள் மூலம் பட்டாக்களின் உதவியால் அவர்களுக்கான வீடு கட்டிகொடுக்கும் ஏற்பாட்டினையும் உறுதி செய்தது. 4 வருடங்களுக்கு முன்பு 35 குடும்பங்கள் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தனர்.

சிறுவர்கள் எல்லோரையும் போல் பள்ளிக்குச் சென்றுவந்தனர். அதேசமயம் அவர்களுக்கான தொழில்முறை பயிற்சி வகுப்புகளும் கல்விக் கற்றுக் கொடுப்பதைத் தவிர ஆரம்பிக்கப்பட்டது என்று குமார் கூறுகிறார். கொத்தடிமை கூலிகளான உழைப்பாளிகளை கண்டுபிடித்து அந்த சிக்கலிருந்து அவர்களை விடுவிப்பது குமாருடைய குழுவினருக்கு மிகவும் சவாலான பணியாக இருந்தது. உள்ளூர் வாசிகளான மக்களின் மூலம் கொத்தடிமையாக இருக்கும் கூலிகளைக் கண்டறிவது மிகவும் சிரமமான ஆபத்தான பணியாக இருந்தது என்று விவரிக்கிறார். தொடர்புகளைத் தவற விட்டால் மறுபடி

அவர்களைக் கண்டுபிடிப்பது என்பது நடவாதக் காரியம் என்றும் சுட்டிக் காட்டுகிறார்.

விளிம்பு நிலை மக்களை எவ்வளவு காலம் அமைப்பால் தக்கவைக்க முடியும்? குமார் ஆழ்ந்து சிந்தித்து,"விளிம்பு நிலை மக்களை வழி நடத்துதல் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்ப்பது போலாகும்" என்கிறார். CSIM அமைப்பின் அறிவுரைகளால் நீண்ட நாட்கள் களப்பணி ஆற்றுவதன் தேவையை அறிந்துக் கொண்டு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பால் செயல்பட முடியும் என்று நம்பினேன். பழங்குடியினர் அவர்களின் உரிமைகளை எந்தவிதத் தயக்கமும் பயமும் இல்லாமல் கேட்டுப் பெறுதல் அவசியம். அதைப்பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள ஏற்ற வகையில் அவர்களைத் தயார் படுத்துவதும் அவசியமாகிறது. முடிவாக நாம் அவர்களுக்கு என்ன உதவிகள் செய்தோம் என்பது முக்கியமல்ல, அவர்களாகவே முனைப்புடன் தங்கள் தேவைகளை சீர்செய்து வாழ்க்கையில் மேம்பட்டுத் திகழ்வதுதான் அவசியமான செயல்பாடு ஆகும். இந்த பொறுப்புமிக்க செயல்பாடுகளில், வழிகாட்டியாகவும் வழிமுறைகளை அறிவுறுத்தவும் CSIM அமைப்பினர் உதவியதில் பெரும்பங்கு வகித்தனர் என்று விவரிக்கிறார்.

# 8. திரு. லூயிஸ் செல்வகுமார்

## பொறுமையின் அறம்



"பொறுமை" (Patience) யுடன் இருப்பதன் மதிப்பு நான் CSIM என்னும் அமைப்பில் பங்கெடுத்ததன் மூலம் தெரியவந்தது. பொறுமையுடன் இல்லாமல் இருந்ததால் தான் போதைக்கு அடிமையானேன்.

ஒரு தனி மனிதனின் மனநிலை, தொடர்ந்து வரும் தூற்றுததல்களும், துன்புறுத்தும் சொற்களாலும் அதிகமான சிரமத்துக்குள்ளாகிறது. போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு தொடர்ந்து உதவி தேவைப்படுகிறது. அந்த உதவிகளின் மூலம் தான் அவர்கள் உடல்நிலையிலிருந்தும், மனநிலையிலிருந்தும் மீண்டு வரமுடியும். இது போன்ற போராட்டங்களிலிருந்து மீண்டு வருவது நடக்கும் என்ற திடமான நம்பிக்கை. போதைக்கு அடிமையான ஒருவருக்கு தீர்மானமான வெற்றியைக் கொடுக்கும். திரு.லூயிஸ் செல்வகுமார் V Can Foundation என்னும் அமைப்பின் நிறுவனர். 13

வருடங்களுக்கும் மேலாக குடிபழக்கத்திற்கும், போதை பழக்கத்திற்கும் அடிமையானவர்களை மீட்டெடுக்கவும், தனிப்பட்ட முறையில் அதிலிருந்து விடுபடுவதற்கும் போராடி வந்திருக்கிறார். இந்த பழக்கத்திலிருந்து விடுபட்ட மீட்சியும், மறுபிறப்பும் லூயிஸ் செல்வகுமாருக்கு இரண்டு பாடங்களாகக் கற்பித்ததாகக் கூறுகிறார். முதலாவதாக குடும்பச் சூழலில் ஒருமித்துக் கலந்து வாழும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மற்றும் போதைபழக்கம் ஒருவனுடைய தனித் தன்மையிலிருந்தும் விலகி வரும்படி செய்து, தன்னம்பிக்கையையும் இழக்க நேரும் நிலையையும் உண்டாக்கிவிடுகிறது. இதிலிருந்து மீண்டு வந்த பின்னர் நாம் எவற்றையெல்லாம் இழந்திருக்கிறோம் என்பது மிகவும் வருத்தம் தரும் நிலைமைக்கு நம்மைத் தள்ளிவிடும். ஆதலால் நான் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களை மீட்டெடுக்கும் பணியையும் உதவிகளையும் செய்வதென்று உறுதிபடத் தீர்மானித்தேன் என்று கூறுகிறார்.

குமார் சிறுவயதில் ஓரளவு பள்ளிப் படிப்பிலும் மற்றும் தொழில்முறைக்கல்வியாக கைவேலை வெல்டிங் பணிகளில் ஈடுபட்டார். தொலைப்பேசித்துறையிலும் ஈடுபட்டு சிறு வியாபாரங்களையும் செய்து வந்தார். அச்சமயம் இவருக்கு ஏற்பட்ட குடிபழக்கத்தினால் எல்லா முயற்சிகளும் வீணாகின. முதல் முறை குடிபழக்கத்திலிருந்து விடுபட்ட பின்னர் இவருடைய மனைவி இறந்ததால் அந்த வருத்தத்தில் மறுபடியும் குடிபழக்கத்திற்கு அடிமையானர். இரண்டாவது முறையாக இந்த பழக்கத்திலிருந்து விடுபடுவது சவால்கள் நிறைந்ததாகவும் இவருடைய உடல்நிலை ஒத்துழைக்காமல் இருந்ததாலும் இதிலிருந்து மீண்டு வரமுடியாத நிலைமை ஏற்பட்டது.

ஆனால் நண்பர்களுடைய ஆதரவினாலும் சரியான மருத்துவசிகிச்சையினாலும் குமார் இந்தபழக்கத்திலிருந்து மறுபடி மீண்டு வந்ததைத் தன்னுடைய அதிர்ஷ்டம் என்றும் கூறுகிறார். தனக்கு நேர்ந்த மாறுதல் போல அனைத்து போதைஅடிமைக்கும் நேருவது கடினம் என்பதை உணர்ந்த குமார் போதை பழக்கத்திலிருந்து மீளுவதற்கு ஏற்ற மாதிரி (De- Addiction Centre) மறுவாழ்வு மையம் என்ற அமைப்பை நிறுவ வேண்டும் என்ற தீர்மானித்தார். இந்த பழக்கத்திலிருந்து மீளும் வகையில் எல்லாவிதமான உதவிகளையும் சேவைகளையும் செய்து போதைக்கு அடிமைப்பட்டவர்களை மீட்டெடுக்க எண்ணி 2012 ஆம் வருடம் V Can Foundation என்னும் நிறுவனத்தை ஆரம்பித்து 45 அங்கத்தினர்களை ஒருங்கிணைத்து (De-Addiction Centre) என்ற மையத்தை அர்ப்பணிப்புடன் கூடிய மருத்துவ தன்னார்வலர்களுடன் ஆரம்பித்தார். முதலில் 3 மாதங்கள் திட்டமிட்ட பயிற்சிகளின் மூலம் ஒவ்வொரு நோயாளிக்கும் உடலளவிலும், மனதளவிலும் நல்ல சிந்தனை அளவிலும் மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்தார். உடல்நிலை சரியில்லாமல் இருந்தவர்களுக்கு குணமடைவதும், இந்த பழக்கத்திலிருந்து விடுபடுவதும் சிரமமாயிற்று. மேலும் குடும்பத்திலுள்ளவர்களாலும் இவர்களை வைத்து சரியான முறையில் சிகிச்சை முறை அளிப்பதற்கு இயலாத நிலைமை இருந்தது.

இந்த நிலையிலுள்ளவர்களுக்கு விடுபடும்படி குணமாக்கவது சிறிதும் இயலாத நிலையில் சிலவகை உதவிகளும் செய்யப்பட்டது. எந்த நிலையிலும் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்து இப்பழக்கத்தால் உள்ளவர்களை மீட்டெடுக்கும் முயற்சிகளைக் குமார் கைவிடவில்லை.

CSIM என்னும் அமைப்பைப் பற்றி அனுபவம் வாய்ந்த ஒருவர் கூறக் கேட்ட பின்னர் அதில் சேர்ந்து சில பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் தன்னுடைய பணிகளை மேன்மையுறச் செய்யலாம் என்ற எண்ணினார். இந்த அமைப்பின் மூலம் வாழ்க்கையில் பொறுமையுடனும், சகிப்பு தன்மையுடனுடன் இருப்பதன் அவசியத்தை உணர்ந்தார். சமூக தன்னார்வலர்கள் பொறுமையுடன் இருப்பதை உறுதிசெய்துக் கொள்வது நல்லது என்றும் கூறினார். அப்பொழுதுதான் எந்த விதமான சிரமங்களையும் சவால்களையும் உறுதியுடன் எதிர்கொள்ள முடியும் என்றும் நம்பினார்.

V Can Centre மூலம் 1000 போதைபழக்கம் உடையவர்களைக் கண்காணித்ததில் 4 பேர் மட்டும் உயிரிழந்ததாக் கூறுகிறார். இறந்தவரின் குடும்பத்தினர் இதை ஏற்றுக் கொள்ள முதலில் மறுத்தனர். பின்பு பிரேத பரிசோதனை மூலும் உண்மை நிலையை உணர்ந்து கொண்டனர். குமார் எங்கள் அமைப்பின் மீது நம்பக தன்மை இல்லாதது காரணம் அல்ல, இந்த பழக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வும் சரியான புரிதலும் இல்லாமல் இருப்பது தான் என்றும் கூறுகிறார். போதை பழக்கத்திலுள்ளவர்களை வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு சாதாரணமாகத் தோன்றினாலும் அவர்களுடைய ஆழ்மன ஓட்டங்களைப் பரிந்துக் கொள்வது கடினம் என்றும் விவரிக்கிறார்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. நிறுவனம் ஆரம்பித்து 9 வருடங்கள் கழிந்தன. CSIM அமைப்பு எனக்கு இந்த முயற்சிகளில் உதவிகரமாகவும் பொறுமையின் முக்கியத்துவத்தையும் தெரியப்படுத்தி என்னுடைய நோக்கங்களுக்கும் வாழ்வின் முழுமையான அர்த்தத்தையும் அளித்து என்னை உயர்நிலைக்கு

இட்டுச் சென்றது. என்னை மேலும் பொறுப்புள்ள குடிமகனாக முன்னேற்றி என்னுடைய பணிகளில் தொய்வு ஏற்படாமல் காத்து உத்வேகமும் அளித்தது CSIM என்று ஆணித்தனமாகக் கூறுவேன்.

லூயிஸ் செல்வகுமார் செய்த இந்த சமூகப் பணிக்கான அங்கீகாரம் Globe International மூலம் பரிசாகக் கிடைக்கப் பெற்றது. ஒரு தனிமனிதனால் ஆரம்பிக்கப்பட்டு எல்லாவிதமான தடைகளையும் சவால்களையும் சந்தித்து முயற்சிகளை ஊக்கப்படுத்தி முன்னேற முடியும் என்ற நம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தியது என்றும் கூறுகிறார்.

# 9. திருமிகு. மல்லிகா வல்லூறு

## கணிணிமய கட்டமைப்புகளின் சாத்தியம்




நாகரீக அடைதலுக்குக் கல்வி கற்றலே சிறந்த ஆதாரம். ஆசிரியர்களும், மாணவர்களும் அதிகமாகக் கல்வி கற்பதனால் தங்கள் சிந்தனைகளைளும்,நோக்கங்களையும் மேலும் ஊக்கப்படுத்தி சிறந்த அடிப்படையுடன் அறிவு பூர்வமாகவும் செயல்படுத்த முடியும். கற்பிக்கும் முறையில் அதிகமான உபகரணங்களும், வழிமுறைகளும் உபயோகப்படுத்துவதன் மூலம் கல்வி கற்பதை சுலபமாகக் கடக்க முடிகிறது. அதிலும் விஞ்ஞான பூர்வமான செயல்பாடுகளின் மூலம் மேலும் ஊக்கத்துடன் ஈடுபட முடிகிறது.

ஒவ்வொரு ஆசிரியரும் வித்தியாசமானவரே. அதேபோன்று ஒவ்வொரு மாணவனும் வித்தியாசப்படுகிறான். ஒழுங்கான சீரான முறையில் சிலபல இடைவெளிகளும் இடர்பாடுகளும் உள்ளன என்பதை மாணவர்களான நம்மால் உணர முடிகிறது. கல்வி கற்றலை, சுவாரஸ்யமாகவும்

சுலபமாகவும் வரைமுறை செய்வதற்கு சில மாற்றங்களைக் கொண்டுவருதல் அவசியமாகிறது. விஞ்ஞான பூர்வமான செயல்பாட்டினால் சிறிய மற்றும் குறிப்பிட்ட மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்கிறது.

Ms.Mallikavallura, Radius Edutech என்னும் அமைப்பின், நிறுவனர்களுள் ஒருவராக இருக்கிறார். கணிணியியல் கற்றுத் தேர்ந்த மல்லிகா, கணிப்பியல் திட்டம் சார்ந்த (Logistics) செயல்பாடுகளின் மூலம் சிறிய அளவில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் ஆர்வத்துடன் இருந்தார்.

மல்லிகா பெனிசில்வேனியா பல்கலைக்கழகத்தில் சிறப்புப் படிப்பாக (Social Impact Strategy) செயல்திட்டங்களில் சமூகத்தின் தாக்கம் படித்ததின் விளைவாக அறிவுசார்ந்த கருத்தாக்கங்களை, தன்னுடைய செயல்திட்டங்களில் படிப்படியாக புகுத்த விரும்பினார். கருத்தாக்கங்களை மாணவர்களுக்கு வயது வாரியாக, குழுக்களை அமைத்து விவரிக்கவும் தொடங்கினார்.

விஞ்ஞான அறிவுசார்ந்த பரிசோதனை ஆய்வகம் ஒன்றை மாணவர்களுக்காக நிறுவி அதன் மூலம் விஞ்ஞானக் கருத்தாக்கங்களைக் கற்பிக்கவும் எண்ணினார். பரிசோதனை நிலையத்திற்கு மாணவர்கள் வருவது குறைவான நேரமே என்பதால் வகுப்பறைகளுக்கு செல்வதுபோல அதிகமாகச் சென்று கற்றுக் கொள்வதுபோல் அமையாது என்று எண்ணி வேறுவிதமான மாற்று வழிகளை சிந்திக்க ஆரம்பித்தார். சிறுவர்களால் சுலபமாகக் கற்றுக் கொள்ள கூடிய வழிமுறைகளைக் கையாளவேண்டியது அவசியம் என்று எண்ணினார்.

குழந்தைகளும், சிறுவர்களும் தாங்களாகவே சில வழிமுறைகள் மற்றும் கருவிகள் மூலம் கருத்தாக்கங்கள் பற்றிய வழி விவரங்களைத் தெரிந்துக் கொள்ளலாமே? என்று உணர்ச்சியுடன் குறிப்பிட்டார்.

தற்போதைய ஊடாடி உருவாக்கப்படுவதன் மூலமே தகவல்களையும் நோக்கங்களையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நம்பினார். ஆதலால் சிறுவர்களே அவர்களுக்குத் தோன்றிய கருத்து பற்றிய விளக்கங்களை (Animated Experience) மூலம் அவர்களாகவே வரைமுறையுடன் வித்தியாசமான சூழலுக்கேற்ப சிறுசிறு பரிசோதனைகள் செய்வதன் மூலமே புரிந்துகொள்வது நன்மை பயக்கும் என்று தீர்மானத்தார். இதனால் ஆசிரியர்களின் வேலைப்பளுவும் குறைய வாய்ப்பு இருப்பதாகவும் எண்ணினார். கலந்து உரையாடி கருத்துக்களை உருவகப்படுத்துவதின் மூலம் (Interactive Simulation) சிறுவர்களின் முன்னேற்றத்தை கணிக்க முடிகிறது. எனவே, சிறார்கள் தேவைக்கேற்ப இந்த வழிமுறைகளையே பின்பற்றுவது நலம் என்றும் மல்லிகா கூறுகிறார்.

2018 ஆம் ஆண்டில் Radius Edutech தெலுங்கானா அரசின் பெண்களுக்கான We Hub என்ற அமைப்பின் துணையோடு ஆரம்பிக்கப்பட்டது. இதில் உற்பத்தி செய்யப்படும் (Touch Board) தொடுபலகை தொலைகாட்சிகள் (Television) நிழற்படக் கருவிகள் (Projectors) மூலம் கற்றுக் கொள்வது மிகவும் சுலபம் என்றும் கண்டறியப்பட்டது. கற்றல் மேலாண்மைத் திட்டம் (Learning management system) மூலம் கல்வி கற்பதனால் அறிவுபூர்வமாக சிறந்து விளங்கமுடியும் என்று நம்பினார். வாரமொருமுறை STEM என்னும் விஞ்ஞானமும் தொழிற்பயிற்சியும் இணைந்த

ஒருங்கிணைந்து கற்கும் முறையில் எதிர்பார்த்த பலனும் கிடைத்தது. Radius Edutech ல் பணிபுரியும் தொழில்முறை பயிற்சியாளர்கள் மேற்சொன்ன கருவிகளைத் தயாரித்து அளிப்பதால் சிற்றூரில் உள்ள மக்களுக்கும் பணிபுரியும் வாய்ப்பும் கிடைத்தது.

சமீபகாலமாக OCTA எனப்படும் காணொலி காட்சி மேடை மிகவும் வெற்றிகரமாக நடந்தது. கொரோனா ஊரடங்கு காலத்தில் இந்த காணொலிகாட்சிகள் மூலம் கலந்துரையாடியது மிகவும் உபயோகமாக இருந்தது.

தற்சமயம் கிடைக்கக்கூடிய கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் உள்ள சுலபமான தீர்வாக OCTA - மறை குறியாக்கப்பட்ட பாதுகாப்பான மாற்றகாவும் இருக்கிறது. நாங்கள் ஆசிரியர்கள் மேம்பாட்டுக்கும் இந்த OCTA முறையை உபயோகிக்கிறோம். மேலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த குழுவினர் சேவை செய்வதால் இதை உபயோகிப்பவர்களும் அதிகமாக இருப்பதும் தெரியவந்தது. இணையதளத்தின் மூலம் செயல்திறன்களை மேற்கொள்வதால் தனிப்பட்ட கவனத்துடன் செயல்பாடுகளைத் தீர்மானிக்கவும் முடிந்தது. எங்களைப் பொறுத்தவரை கொரோனா காலத்தில் ஊரடங்கு ஒரு விதத்தில் மறைமுகமாக உதவியது என்றும் மல்லிகா கூறுகிறார்.

இந்தக் குழுவினர் மற்ற நடைமுறைகள் போலல்லாமல், பொதுவாக Hosting செய்யாமல் தனிப்பட்ட முறையில் நேரில் சென்று திட்டங்களை எடுத்துக் கூற ஆரம்பித்தனர். Radius Edutech ஹைதராபாத் மாவட்டத்தில் 14 பள்ளிகளை அணுகிய பிறகு உலகிலுள்ள 10 நாடுகளுக்கும் இதே முறையில் செயல்படுத்தியது.

இந்த முறை எங்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையையும் பெருமையையும் ஏற்படுத்தியது என்றாலும் நிறைய சவால்கள் நிறைந்ததாகவும் இருந்தது. இருந்தாலும் ஆசிரியர்கள் வகுப்பறையில் தொழில்முறை கருவிகள் மற்றும் கணிணியில் ஆகியவைகளில் அதிகமான பரிச்சயம் இல்லாமல் இருந்தது ஒரு பிரச்சனையாகவும் இருந்தது. தொடர் பயிற்சி முறைகளால் ஆசிரியர்கள் இவற்றை சாதித்தனர். கணிணி கட்டமைப்பும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாய் இருந்தது என்று மல்லிகா மேலும் தெரிவித்தார்.

கல்வி கற்பித்தலில் தொழில்முறை (கணிணியியல்) கட்டமைப்புகளும் உற்ற துணையாயிருந்ததால் மல்லிகா பெண்களுக்காகத் தொழில் முறைப் பயிற்சிக் கருவிகளை உபயோகப்படுத்தும் முறைகளையும் பழக்கிவிட்டார்.

ஒரு கணிணி பொறியாளரான மல்லிகா ஒரு தொழில்முறை பயிற்சியாளராக மாறியதில் CSIM க்கு முக்கிய பங்குண்டு. மேலும் அவர் ஆசைப்பட்டதும் நிறைவேறியதில் மகிழ்ச்சி அடைந்தார். மேலும் CSIM ல் இணைந்தவர்கள் அனைவரும் அவர்கள் விரும்பியதை செயலாற்றும் தைரியத்தையும் ஊக்கத்தையும் அவர்களின் குறிக்கோள்களில் வெற்றியையும் கண்டிருக்கிறார்கள். முன்னேற்றத்துக்கான மாற்றங்களை அவர்களால் எட்டிபிடிக்க முடிந்தது. அவர்களுடன் இருந்ததால் தன்னம்பிக்கையும் ஏற்பட்டு (Social Impact Strategy) சமூகத் தாக்கத்தின் செயல்திட்டம் பற்றிய விரிவான விளக்கம் கிடைத்தாகக் கூறுகிறார் ஆர்வத்துக்கும் விடாமுயற்சிக்கும் வயது தடையாகாது என்பதை CSIM தான் எனக்கு உணர்த்தியது என்று பெருமையுடன் கூறுகிறார்.

# 10. திரு. M மணிவண்ணன்

## கற்றலுக்கு ஊக்கம்



கல்வியின் பரிமாணம் புதிர்கள் நிறைந்ததாகவும் சவால்களுடனும் பலவித குழப்பங்கள் மிக்கதாகவும் இருந்தாலும் அதன் சிறப்பும் ஆழமான சிந்னைகளும் அறிவாற்றலும் அவற்றில் ஈடுபட்டவர்களுக்கு ஏற்படும் அங்கீகாரம் தான் தீர்மானிக்கிறது. எனக்கு மட்டுமல்ல கிராமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பட்டபடிப்பு முடித்தமுதல் தலைமுறை மாணவனும் கவனித்து தன்னுடைய வாழ்வைச் சீர்படுத்துகிறான். இதை மேற்கொள்ளவிட்டால் நாம் புறப்பட்ட இடத்திலேயே தங்க நேரிடும் என்று திரு. மணிவண்ணன் சுட்டிக் காட்டுகிறார். தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மைலம் பகுதிக்கு அருகாமையில்உள்ள "வீடூர்" என்னும்குக்கிராமத்தில்பிறந்து வளர்ந்த மணிவண்ணன் திசைகள் அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார். பள்ளியில் 10 ஆம் வகுப்பிலும் 12 ஆம் வகுப்பிலும் முதலாவதாகத் தேறினார். பள்ளிப்படிப்பை

வெற்றிகரமாக முடித்த பின்னர் அடுத்தபடியாக முன்னேற சரியான வழிகாட்டுதல் தேவைப்படுகிறது.

மணிவண்ணனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் நுழைவுத் தேர்வு பற்றிய விவரங்கள் அதற்கான பதிவு செய்யும் முறைகள் ஆகியவற்றைப் பற்றிய முறைகள் தெளிவாகத் தெரியாது போயிற்று. அதனால் மேல்படிப்பில் கவனம் செலுத்த 1 வருடம் முழுதும் காத்திருக்க நேரிட்டது. நகரத்தில் கல்வி பயிலும் இளைஞர்களுக்கு பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் நடைமுறைகள் இயற்கையாக அமைந்து விடுகிறது. ஆனால் கிராமபுறத்தில் பள்ளிபடிப்பு முடித்த இளைஞர்களுக்கு நடைமுறைகள் சுலபமாக அமைவதில்லை. எனக்கும் சாத்தியமில்லாமல் இருந்தது. ஆனால் நான் உள்ளூரில் கூலிவேலைகள் செய்வதற்கு விருப்பமில்லை. மேற்கொண்டு கல்வி கற்று முன்னேறுவது என்று உறுதியாகத் தீர்மானித்தேன். அனைத்து சவால்களையும் கடந்து பொறியியல் கல்லூரியில் தகவல் தொடர்பு சாதனங்கள் (Electronic and communication engineering) பற்றிய தொழில் முறைக்கல்வியில் பயிற்சி பெற்று கிராமத்திலும் குடும்பத்திலும் முதலாவது மாணவனாக பட்டம் பெற்று தேர்ச்சி அடைந்தேன் என்று பெருமையுடன் கூறுகிறார்.

மிகுந்த எதிர்பார்ப்பும் குழப்பமான நிலைமையும் இருந்த சூழலில் ஒவ்வொரு அடி எடுத்து முன்னேறிச் சென்ற நிலைமை அவனுக்குள் மற்ற மாணவர்களுக்கும் இவ்வாறு இன்னல்படக் கூடாது என்று எண்ணி அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

முதலில் வாய்ப்புகள் கிடைப்பதற்காக சென்னையிலும் பாண்டிச்சேரியிலும் அலைந்து ஒருவருடம் கழிந்த பின்பு சென்னையில் பணிசெய்யும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றார்.

சென்னயில் இருந்துக் கொண்டு கிராமத்திலுள்ள பெற்றோருக்கும் மற்ற இளைஞர்களுக்கும் உதவிகரமாக இருக்க முடியாது என்பதால் அவருடைய கிராமத்திற்கே திரும்பி பணிகளைச் செயல்படுத்த ஆரம்பித்தார். வங்கி நுழைவுத் தேர்வு எழுதி வங்கிப் பணியில் ஈடுபட்டதால் கிராமங்களில் வங்கிப் பணியின் மூலம் வாய்ப்புகள் கிடைப்பது தெளிவாயிற்று என்று கூறுகிறார். மணிவண்ணன் உடனடியாக முடிவெடுப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து வங்கிப்பணியில் இருந்துக் கொண்டு காலம் தாழ்த்தாமல் திசைகள் அறகட்டளை என்னும் தொண்டு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். 2007 ஆம் ஆண்டு மணிவண்ணன் தன் நண்பர்களுடன் சேர்ந்து ஆண்களுக்கான சுய உதவிக் குழுக்களைத் தோற்றுவித்து கிராமத்திலுள்ள விவசாயிகள் அவர்களுடைய குழந்தைகள் ஆகியோருக்கு உதவிகள் செய்ய முயற்சிகளை மேற்கொண்டார். இந்த அமைப்பு சிறுவர்கள் பள்ளியிலிருந்து வெளியேறும் இடைநிற்றலை முயன்ற வரையில் தடுக்கும் பணியில் ஈடுபட்டார். குடும்பத்தைப் பெற்றோர்கள் சரியான முறையில் நிர்வகித்து நடத்துவதால் சிறுவர்கள் வாழ்வாதாரத்துக்காகக் கூலி வேலை செய்யும்படியான நிர்பந்தம் ஏற்படுவதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டு Veedur Hope Society என்னும் அமைப்பைப் பதிவு செய்து பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் செயல்பாடுகளை விரிவுபடுத்தினார். இந்த பெயரில் இந்த அமைப்பு பணிகளில் ஈடுபடும் பொழுது அதிகமான தடங்கல்களைச் சந்தித்தார். வெள்ளந்தியான எதிர்நேர்க்க வேண்டியிருந்தது என்று சிரித்தபடி கூறுகிறார்.

2011 ஆம் வருடம் இந்த தொண்டு நிறுவனத்தின் பெயரை மாற்றி திசைகள் அறக்கட்டளை என்ற பெயரிலேயே பதிவு செய்தார். கிராமத்திலுள்ள சிறுவர்கள் பெண்கள் ஆகியோருக்கு சிறப்பான கல்விகற்கும் சூழலைச் செயல்படுத்தி அச்சிறுவர்கள் உயர்கல்வி கற்பதற்குண்டான வழிமுறைகளை ஏற்படுத்துவதைத் தான் நோக்கமாகக் கொண்டது இந்த திசைகள் அமைப்பு.

மேலும் ஒரு குழுவை ஒருங்கிணைத்து ஒவ்வொரு கிராமத்திலும் 20 சிறுவர்களுக்கான (Child Protection Committee) கூட்டமைப்பின் மூலம் உதவிகரமாக செயல்பட ஆரம்பித்தது. இந்த சிறுவர்களுக்கு அவர்களுடைய நண்பர்களை கண்காணித்து அவர்களுடைய செயல்களால் தாங்கள் கல்வி கற்பதற்கான சூழலில் தடைகள் ஏற்படுகிறதா? ஏன்பதைக் கண்டறியும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இதனால் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் திறமைகளையும் இந்தசிறுவர்கள் தெரிந்துக் கொள்ளமுடிந்தது.

இத்தனை ஆண்டு காலமாக பெற்றோர்களும் சிறார்களும் தங்களுக்கானத் தகவல்களைத் தைரியமாக ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள முடியாத நிலைமை இருந்தது. தேவையான கணிப்பொறி பயிற்சி விளையாடுவதற்குண்டான கருவிகள் ஆய்வகங்கள் போதுமான கழிப்பறைகள் ஆகியவற்றை தயார்படுத்தும் பணியில் இந்தக் குழு ஈடுபட்டு வந்தது. விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் Child Protection Committee பணிகளைச் செய்த பின்னர் தற்பொழுது கடலூர் மாவட்டத்தின் சிறுவர்களும் அணுகி இருக்கிறார்கள்.

சமீபகாலமாக இரவு நேரப் பள்ளிகள் திட்டமிடப்பட்டு சிறுவர்கள் தங்கள் பாடச்சம்மந்தமான தகவல்களை பரிமாறிக்

கொள்ள ஏதுவாக அமைந்தது. மேலும் ஆங்கிலத்தில் பேசவும் இதன் நீட்சியாகக் கற்று கொடுத்து வந்தது. வெறும் லட்சியம் மட்டும் ஒருவருக்கு இருந்தால் போதாது,அதில் நம்பிக்கையும் சரியான தருணத்தில் செயல்படுத்தும் ஊக்கமும் மிகவும் அவசியம் என்று மணிவண்ணன் தன்னுடைய அனுபவங்களின் மூலம் உணர்ந்து கொண்டதாகக் கூறுகிறார். அன்றாட நடப்புகள் நடைமுறைச் செய்திகள் ஆகியவற்றிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுவந்தன.

பெண்கள் சுய உதவிக் குழு, ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அனைவரும் திசைகள் நிறுவனத்தை ஊக்கத்துடன் நடத்திவந்தனர். மணிவண்ணனின் குழுவினர் சிறுவர்களை கல்விகற்கச் சொல்வது மட்டுமல்லாமல் அவர்கள் மேலே முன்னேறி தடைகளையும் சவால்களையும் கடந்து அவர்களின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மேலும் இந்த அமைப்பு சிறுவர்களுக்கான புத்தகம் வாசிப்பது வாசிப்பபைப் பழக்கமாக்குதல் மற்றும் மாநிலமத்திய Service Commission தேர்வுக்கான வழிமுறைகளைத் தயார்படுத்தும் பணியிலும் ஈடுபட்டது. சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் வங்கியிலும் கூட்டுறவு சங்கங்களிலும் தேவைக்கேற்ப கடன் பெற்று அதை திருப்பி அடைக்க முடியாமல் சிரமத்தில் இருப்பதையும் கண்டுக் கொண்டனர். கடனைத் திருப்பி முடியாமல் அவதிப்பட்டதனால் சிறுவர்களின் படிப்பும், கல்வியும் தடைப்பட்டுப் போயிற்று.

இந்த நிலைமையில் தொடர்ந்து வழிகாட்டுவது தான் அவர்களுக்கான முக்கியப் பணியாகக் கருதினார் மணிவண்ணன். அந்த மகளிருக்கான வாழ்வாதாரத் திறன்களை (கைவேலை) வளர்த்து தொழில்முறை

பயிற்சியும் அளிக்க விரும்பினார். அரசாங்கத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கான பயன்தரும் திட்டங்களைப் பற்றிய விவரங்களை அந்த மகளிருக்கு மணிவண்ணன் எடுத்துரைத்தார். தற்சமயம் 100 சுய உதவிக் குழுக்களிலுள்ள பெண்களுக்கு உதவி செய்வதற்கு cycle and ITC brands என்னும் தனியார் நிறுவனத்துடன் கூட்டுமுயற்சி மூலம் திறன்கள் வளரும்படி செய்தார்.

அவர்களால் உண்டாக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப் படுத்துவதிலும் முயற்சிகளை மேற்கொண்டு அந்த மகளிர் குழுக்களுக்கு தன்னம்பிக்கையை மணிவண்ணன் ஏற்படுத்தினார்.

CSIM அமைப்பு எனக்கு சமூகப் பொறுப்பு உணர்வுகள் பணிகள் செய்வதற்குச் காலம் ஒரு அளவுகோல் அல்ல என்பதை உணர்த்தியது. என்னுடைய ஆர்வமும் நோக்கமும் CSIM அமைப்பினால் மேலும் பட்டைத் தீட்டப்பட்டது. அந்த அமைப்பிலுள்ளோர் மாணாக்கருக்கு கூறும் அறிவுரைகளால் அனைவரும் உத்வேகம் அடைந்தனர் என்றும் CSIM மூலம் ஒவ்வொருவரிடமும் நேர்மறைத்தன்மை உண்டானதாகவும் கூறுகிறார். லாபநோக்கமில்லாத தொண்டு நிறுவனத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது எவ்வாறு என்பதையும் அறிந்துக் கொண்டேன். மேலும் பலதரப்பட்ட செயல்பாடுகள் மூலம் அவர்களின் தேவைகளைக் கண்டுபிடித்து ஒரு முன் மாதிரியான தொண்டு நிறுவனமாக அமைக்கும் லட்சியத்தில் இருப்பதாகவும் அதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளதாகவும் கூறுகிறார்.

# 11. திரு. மன்னா ஏகாம்பரம்

## வேளாண் வாழ்க்கை



இயற்கையின் மீதுள்ள விருப்பத்தினால், வித்தியாசமான சூழலில் உள்ள சிலர் ஒன்று கூடி, இயற்கை வேளாண்மையில் ஆர்வத்துடன் செயல்பட்டனர். இவர்கள் அனைவரும் சரியான முறையில் இயற்கை விவசாயத்தின் நடைமுறைகளைக் கொண்டு வர முயற்சித்தனர். வசதியான இடம், சிறிது தெளிந்த சிந்தனை, சிந்தித்து செயல்படுதல் ஆகியவை தேவை. இயற்கை அதன் வழியே சரியாகச் செயல்படும். தடைகளை நீக்கி கடப்பதுதான் நம் வேலை என்று மன்னா ஏகாம்பரம் என்னும் ஒரு விவசாயி பெருமையுடன் கூறுகிறார்.

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள செஞ்சி என்னும் ஊரில் ஒரு விவசாயினுடைய மகனாகப் பிறந்த ஏகாம்புரம் விவசாயம் செய்வதன் சிரமங்களையும், கடன்களை அடைக்க அலைந்ததையும், விவசாயிகளின் தற்கொலைகளையும் கண்டு மனதில் மிகவும் வேதனைப்பட்டதாகக் கூறினார்.

மேலும் இயற்கையோடு இணைந்த விவசாயத்தில் ஏன் இந்த சிரமமான நிலைமை? விவசாயத் தொழிலை ஏன் தொடரமுடியாமல் கைவிடுகிறார்கள்? சரியான வழியில் ஏன் செல்ல முடியவில்லை? என்ற கேள்விகள் ஏகாம்பரம் மனதில் ஆழ்ந்த கவலைகளையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியது. நகர வாழ்க்கை ஏகாம்பரத்துக்கு ஒத்து வரவில்லையாதலால் கல்லூரிப் படிப்பிலிருந்து விடுபட்டு, வேளாண்தொழிலில் ஆர்வம் மிகுந்ததால் விவசாயியாக வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்று விரும்பினார்.

என்னுடைய இதயம் விவசாயம் செய்து உயர வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்ததால், நான் நம்மாழ்வாரின் உயிர் சுழல் நாடுவோம் என்னும் அமைப்பில் (Uyirsuzhal Naaduvom Trust) சேர்ந்து 16 வருடங்கள் இயற்கை விவசாயத்தின் தலைசிறந்த திறமையாளரான நம்மாழ்வாருடன் கூடவே இருந்து மாணவனாக இருந்து வந்தேன். அவருடன் இருந்ததால் மேலும் ஊக்கம் பெற்று பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்ற தீர்மானித்தேன்.

இயற்கை விவசாயம் பற்றி நம்மாழ்வரிடம் பயிற்சி எடுத்த ஏகாம்பரம் அதிகமான விவசாயிகளுக்கும் மற்ற மாநிலங்களிலுள்ள விவசாயம் சார்ந்தவர்களுக்கும் இயற்கை வேளாண்மை பற்றிய பயிற்சிகளை அளித்தார். மேலும் இவர் மாதிரிப் பண்ணைகள் (Model farms) அமைத்து அவற்றோடு தொடர்பு கொண்டு நம்பத்தகுந்த அணுகுமுறைகளைக் கற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்தினார். கிடைக்கும் மூலிகைளையும் தாவரத்திற்கு ஏற்ற உள்ளூரில் முறையில் மண் சார்ந்த உரங்களையும் வகைப்படுத்தினார். மண்ணிலுள்ள நுண்ணுயிர்களுக்கு வேண்டிய சத்தான ஆகாரத்தையும்

கிருமி நாசினிகளையும் தயாரித்து விவசாயம் செய்ய ஏற்ற முறையில் நடைமுறைப் படுத்தினார்.

மேலும் அரசு சார்ந்த வேளாண் துறையில் பங்கெடுத்து, அதிகமான விவசாயிகளை இயற்கை வேளாண்மையில் ஈடுப்படுத்தினார். தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்திலுள்ள (Arulanandar Arts college) அருளானந்தா கலைக்கல்லூ ரியில் Rural Development Science என்னும் பாடப்பிரிவில் ஏகாம்பரத்தின் தலைமையிலான குழுவினர், அங்குள்ளவர்களுக்கு செய்முறைப் பயிற்சியும் அளித்தார்.

இவருடைய இயற்கை விவசாயப் பணியில் வெற்றிகரமாக முன்னேறி வேளாண்துறை அதிகாரிகள் அவரின் திறமையைக் கண்டுணர்ந்து போற்றும்படி செய்தார். இயற்கை விவசாயம் செய்வதை வாழ்க்கையில் முக்கியமான அம்சமாக, எல்லோருக்கும் பயிற்றுவிக்க ஆரம்பித்தார்.

இளவயதில் ஒரு நண்பரின் மூலமாக CSIM அமைப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு அதில் சேர்ந்ததில் மகிழ்ச்சி அடைந்தார். தொழிற்கல்வியில் கல்வி கற்பதை இடையில் நிறுத்தி விவசாயியாக முன்னேற வேண்டும் என்ற விரும்பினேன். ஏன்னுடைய தவறான அனுமானங்களால் (Assumption) நகர வாழ்க்கையின் தொடர்பை துண்டிக்க விரும்பினேன். ஆனால் CSIM கிராமங்கள் மூலம்தான் நகரங்கள் வளர்கிறது என்ற உண்மையையும் உணர்ந்தேன். என்னைப் போன்ற விவசாயிகளுக்கு கிராம நகரத் தொடர்புகள் அதிகமான வாய்ப்புகளை வழங்க முடியும் என்ற நல்லதொரு பார்வையுடன் முன்னேறத் தொடங்கினேன் என்று கூறினார்.

விவசாயத்தில் தொன்று தொட்டு வரும் பயிர் வகைகளை சாகுபடி செய்யும் முறையையும் என்னில் வளர்த்துக்

கொண்டேன். மேலும் உரவகைகள், இயற்கை முறையில் பூச்சி கொல்லி மருந்துகள் மூலமாக மண் வளத்தை மேன்மையுறச் செய்யும் வழி வகைகளை செயல்படுத்த ஆரம்பித்தேன். வேளாண் பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் CSIM அமைப்பு சமூகக் கண்ணோட்டத்துடன் உதவிகள் செய்து வந்ததாகவும் கூறினார்.

தொன்றுதொட்டு நடைபெற்று வரும் விவசாயமும் வேளாண்மையும், மற்றும் நிலமும் நிலம் சார்ந்த இடமும், நீராதாரமும் உபயோகிக்கும் முறையும் பற்றிய விளக்கக் கூட்டங்களில் பயிற்சிகளும் ஏகாம்பரம் மேற்கொண்டார். இயற்கையோடு இணைந்த விவசாயம், வேளாண் துறையில் ஈடுபட்டுபவர்களுக்கு எளிமையானது என்றும் முக்கியப்படுத்தினார். பயிற்சியாக உள்ளூரில் நன்கு விளையும் பயிர் வகைகளை, அதன் தனிப்பட்ட குணாம்சங்களுடன் வேளாண் செய்ய பயிற்சிகளை மேற்கொண்டார்.

புற்றுநோயைக் குணப்படுத்த உதவும் "Tahabrichan" தகபிருக்ஷான் என்றும் நெல்வகை, மணிப்பூர் மாநிலத்தில் கிடைப்பதை அறிந்து, தன்னுடைய பண்ணையில் 80 விவசாயிகளுக்கு இந்த வகையைப் பயிரிடும் முறையைப் பயிற்று வந்தார். இப்படி தான் பயிராக்கும் முறையை தொடர்பு கொண்டு முன்னேறும் என்றும் கூறினார். தமிழ்நாட்டில் ராமாநாதபுரம் மாவட்டதில் சண்டிகர் (Sandikar) என்னும் நெல்வகை வறண்ட நீர்வளம் குறைவான நிலத்தில் விளைகிறது. இது மனிதருக்கு உடல் வலிமையையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் அளிக்க வல்லது. பழமையான நெல்வகைகள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் விளங்குகிறது. இரண்டும்

ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவை. தாவர வகைகளின் மூலம் நாம் பொறுமையையும் மாற்றங்களால் வரும் நன்மைகளையும் கற்றுக் கொள்ளலாம். சரியான பார்வை மட்டுமே நமக்குத் தேவை என்றும் கூறுகிறார்.

ஏகாம்பரத்தின் ஊக்கமும் ஆர்வமும் மற்ற விவசாயிகளையும் ஈர்க்க செய்து ஊக்குவிக்கிறது. வரும் காலங்களில் இயற்கை வேளாண்மை மட்டுமே பொதுவாகச் செயல்படும். அதற்காக நான் என் திறமையும் உழைப்பையும் அதிகமாகச் செயல்படுத்தி மாற்றத்தைக் கொண்டு வர முடிந்தவரை முயற்சி செய்வதாகச் சூளுரைக்கிறார்.

தற்காலத்தில் மொட்டை மாடி மற்றும் வீட்டுத் தோட்டம் ஆகியவைகளில் சிறார்களும் பெண்களும் அதிகமாக ஈடுபடுவதைக் காண முடிகிறது. காய்கறி, கனிவகை உணவுக் கழிவுகள் ஆகியவற்றை வீட்டிலேயே உரக்குழிகளின் மூலம் உரமாக்கிவரும் பயன்பாடும் அதிகமாகக் காணப்படுகிறது.

ஏகாம்பரம் ஆரம்பித்த பசுமை இயற்கை விவசாய இயக்கம் இவருடைய 34 ஏக்கர் விவசாய நிலத்தில் இயற்கை விவசாயத்தை இயற்கை முறையில் உள்நாட்டில் செய்யும் விவசாயக் கருவிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. எவ்வாறு இயற்கை சூழலில் ஒன்றுக்கொன்று தொடர்புடன் ஒன்றையொன்று சார்ந்து இருக்கிறது என்பது விளங்கும். நாம் செய்வதெல்லாம் பயிருக்கும் விளை நிலங்களையும் மதித்து தேவைகளைப் பூர்த்தி செய்வது தான். ஒன்றோடொன்று இணைந்த இந்த வேளாண்மை தொடர்ந்தால் வளங்களைச் சுரண்டும் கொடிய காரியம் நடக்காது என்றும், விளைநிலமும் பயிரும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு என்றும் ஆதாரம் என்று ஆணித்தனமாகக் கூறுகிறார்.

# 12. திருமிகு K மானு

## திருநங்கைகளின் அடையாளம்



வானவில் பௌண்டேஷன் பாலின (Vanavil Foundation) அடையாளத்தைக் கடத்தல் திருநங்கையின் அடையாளங்களும் தேவைகளும் இந்த சமூகத்தில் நிலவிவரும் விமர்சனங்களும் தேவையில்லாத கேலிபேச்சுகளும் அவர்கள் சாதாரணமாக வாழ்வதற்கு சொல்ல முடியாத சிரமங்களுக்கு ஆளாகிறார்கள். திருநங்கைகள் வாழ்க்கையில் ஒருநிலைக்கு வர கடுமையான துயரங்களுக்கும் மனவேதனைக்கும் ஆட்படுகிறார்கள்.

நான் ஒரு பெண் என்று சொல்வது மட்டும் போதாது. கே. மானு கூறுவது என்னிடமுள்ள ஆவணங்கள் உதவி செய்யாது. மற்றவர் பார்வையில் என்னை பற்றிய புரிதல் மிகவும் கீழ்தரமானதாக இருக்கிறது என்றும் உருக்கமாகக் கூறுகிறார். சென்னையிலுள்ள வானவில் அமைப்பு நிறுவனத்தின் நிறுவனராகவும் தலைவராகவும் இருக்கும் கே.மானு இந்த நிலைக்கு வருவதற்குள் அவர் எதிர்பட்ட

துயரங்களும் கேலிப் பேச்சுகளும் அளவில்லாத சவால்கள் நிறைந்ததாக இருந்தன.

மானுவின் தற்போதைய நிலைக்கு வந்ததில் சிறிது பெருமைப்பட்டுக் கொள்கிறார். வருங்காலத்திலும் இந்த சிரமத்தைக் கடக்கமிகவும் ஊக்கத்துடன் பணியாற்றுகிறார்.

இந்த 39 வயதில் மானு தன் பாலின அடையாளங்களுக்காகவும் அவர்களின் உரிமைகளுக் காகவும் மிக நீண்ட பயணப்பட்டு கடந்து வந்திருக்கிறார். நான் 7 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது என்னையொத்த சிறுவர்களுடன் பழக விளையாடும் சமயங்களில் எனக்குள் தோன்றும் ஒரு உணர்வு நான் எந்த பாலினத்தைச் சார்ந்தவன்? என்ற கேள்வி எனக்குள் அதிகமாக எழும்பும். மிகவும் சிரமபப்பட்டு அவற்றைக் கடந்துநான் 12 ஆம் வகுப்பு படித்து முடித்தேன் என்றுகூறுகிறார். இதற்கு பின்னர் தான் ஒரு திருநங்கை என்பதும் தெளிவாக ஏற்பட்டு அவரையொத்த சமூகத்தினருடன் பழகுவதற்குத் தீர்மானம் செய்தார்.

என் குடும்பத்தினர் என்னை ஏற்றுக்கொள்வார்களா? அவர்களால் நான் ஒதுக்கப்படும் முன்பே வீட்டைத் துறந்து வெளியே செல்லாமா?என்னுடைய குடும்பத்தினராலேயே வெறுத்து ஒதுக்கப்பட நேரிடுமோ என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தாகக் கூறிப்பிடுகிறார். குடும்பத்தினரால் வெறுத்து ஒதுக்கப்படுவதால் ஏற்படும் கடுமையான வசவுகள் மற்றும் தடைகள் எல்லாம் ஒன்றுபடச் சேர்ந்து எங்களை மேற்கொண்டு எதுவும் செய்ய முடியாமல் குடும்பத்தை விட்டுவிட்டு வெளியில் சென்றுவிடலாம் என்று முடிவுக்குத் தள்ளுகிறது. அதிகமான திருநங்கையர் இதைத்தான் பின்பற்றுகிறார்கள்.

வெறும் விழிப்புணர்வு இருந்தால் மட்டும் போதாது. மற்ற மனிதர்களின் நோக்கில் பாலின அடையாளம் பற்றிய புரிதல் தான் முக்கியமானது. மற்ற திருநங்கையரின் தூ ண்டுதலாலும் அவர்களின் துணை தந்த தைரியத்தினாலும் மானு உயர்படிப்பு படித்து ஊடகங்களைப் பற்றியும் பத்திரிக்கைத் துறை பற்றிய கல்வியிலும் ஈடுபட்டு தன்னை தயார்ப்படுத்திக் கொண்டார்.

10 வருடங்களாகக் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்ற பின்னர் ஒருநாள் என்னுடைய அம்மாவுக்கு போன்ல பேசினேன். எங்கள் குழுவினருடன் இருந்ததால் மிகவும் தைரியத்துடன் முதல் முறையாக அம்மாவிடம் பேசினேன். ஆனால் ஆச்சரியப்படும்படியாக என்னுடைய அம்மா என் நிலைமையைத் தெளிவாகப் புரிந்துக் கொண்டு என்னை ஏற்றுக் கொண்டார். என் குடும்பத்தினரின் சம்மதமும் ஒத்துழைப்பும் கிடைத்ததால் என்னால் நல்ல முடிவுகளை எடுக்க முடிந்தது. குடும்பம் என்பதுதான் முதலும் முக்கியமானதுமான சமூக அமைப்பு. அவர்கள் பாலின அடையாளத்தைப் புரிந்துக் கொண்டால் திருநங்கையரின் வாழ்க்கை சிரமங்கள் இல்லாமல் இருக்கும்.

2011 ஆம் ஆண்டு மானு வானவில் அமைப்பை நிறுவி திருநங்கைகள் கல்வியில் தேறி தனித்து வாழும் தைரியத்துடன் தன் காலில் நிற்கும்படியான நிலைமையை ஏற்படுத்தினார். விழிப்புணர்வு பிரச்சாரம் எழுத்துப்பட்டறை மற்றும் கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடத்தி சமூகத்தினருக்கும் திருநங்கையருக்குமான இடைவெளியும் குறைத்து சமூகத்திலுள்ள மற்றவர்கள் பார்வையில் அத்திருநங்கையரின் சிரமங்கள் அவர்கள் கடந்து வந்த கடிமானபாதை அவர்களின் தேவைகள் முதலியனவற்றைப்

பற்றிய தெளிவான புரிதலை ஏற்படுத்தினார். 2019 ல் அமைக்கப்பட்ட Trans bill மேலும் ஊக்கம் அளித்து மிகுந்த நம்பிக்கையும் அளித்ததாகக் கூறுகிறார். வானவில் அமைப்பு நடத்துவதுன் மட்டுமல்லாமல் மானு சத்தியம் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவராகவும் பணியாற்றினார். இதைத் தவிர நான்கு ஆவணப் படங்களும் எடுத்து திருநங்கையரின் விரிவான கடினமான பாதைகளைக் கடந்து வந்த நிலைபாடு பற்றி கலந்துரையாடி அவர்களின் உரிமைகளைத் தெளிவுப்படுத்தினார்.

மேலும் திருநங்கையரின் உரிமைகளைத் திட்ட மேலாளராக இருந்து, சீர்த்திருத்தவாதிகள், சமூகஆர்வலர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் மாற்றங்களை நோக்கிச் செல்லும் ஆர்வலர்கள் ஆகியோரின் தொடர்பு கிடைத்தது. இதன் மூலம் ஜீவாஅம்மா என்பவரை சந்தித்து அவர் மூலமாக CSIM மூலம் எனக்குக் கிடைத்த அனுபவத்தை ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகிறேன். திருநங்கையரின் தேவைகளைப் பற்றி எவ்வாறு மற்றவருடன் கலந்துபேசி திருநங்கைக் குழுவினருக்கு ஏற்ப முடிவுகளையும் எண்ணங்களையும் செயல்படுத்த முடியும் என்று தெளிவாகப் புரிந்துக் கொண்டதாகக் கூறுகிறார். தமிழ்நாடு, Tamilnadu State Aids Control Society யிலும் பணிபுரிந்திருக்கிறார்.

தற்சமயம் திருநங்கையருக்கு பணிகளில் சேர்ந்து கல்விக் கூடங்களிலும் தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. அவர் மேலும் என் குடும்பம் என்னைப் புரிந்துக்கொண்டது மிகப்பெரிய வரப்பிராசாதமாகும். இது பாலின அடையாளத்தைக் கடக்கும் எல்லோருக்கும் மற்ற குடும்பத்தினருக்கும் ஏற்றுக்கொள்வது மிகச்சிறப்பாகும் என்றும் கூறுகிறார்.

மானு மேலும் கூறுவது, திருநங்கையர் தங்கள் உடல் நிலையில் பிரத்யோக கவனம் செலுத்த வேண்டும் என்றும் பாலின உறவுக்கு கொடுமையாக அடிமைப்படுத்தப்படுவதாகவும் ஆதங்கத்ததுடன் வெளிப்படுத்துகிறார். சிறிது சிறிதாக மக்கள் மற்றும் சமூகத்தை சார்ந்தவர்களுக்கு மேலே கூறியவைப் பற்றிய புரிதலும் தெளிவும் ஏற்பட்டு வருவதாகக் கூறுகிறார். மேலும் அரசு மற்றும் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குரலும் இவை பற்றிய சிந்தனைகளைத் தெளிவாகப் புரிந்துக் கொண்டு ஒருமித்த குரல் கொடுப்பதுதான் சிறந்த தீர்வு என்று உறுதியாக கூறுகிறார்.

# 13. டாக்டர் முகமத் ரப்லுடின்

## வெற்றிக்கான வழிமுறைகள்




நிறுவனத்தில் பங்குகொள்ளும் குழுவினால் அந்த நிறுவனம் மதிப்புடன் கூடிய கவுரவத்தைக் பெறுவது மிகவும் முக்கியமானதும் கடினமானதும் ஆகும்.

இதில் அமைப்புகாட்டி வழிமுறைகள் எனக்கு நல்ல பாடத்தையும் அனுபவத்தையும் பெற்றுத் தந்தது. கனவுகளும் நடைமுறைகளும் ஒன்றையொன்று குறுக்கிட்டுக் கடந்தாலும் என்னைப் பொறுத்தவரை அவை நல்ல செயல்பாட்டிற்குதான் உதவியிருக்கிறது என்று புன்சிரிப்புடன் டாக்டர் முகமத் ரப்லுடின் கூறுகிறார். இவர் ஹைதராபாத்திலுள்ள மனிதவளம் பற்றிய குழுமத்தின் நிறுவனர் ஆவார்.

தெலுங்கான மாவட்டத்திலுள்ள ஹைதராபாத் நகரைச் சார்ந்த முகமத் ரப்லுடின் இளம் பருவத்தில் ஒரு மருத்துவராக வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்ததாகவும் அந்த நிலைபாட்டுக்காக காத்திருக்க நேர்ந்ததாகவும்

கூறினார். மாணவர் சேர்க்கை அந்த ஆண்டு நடைபெறாமல் இருந்ததால், மறுதேர்வு எழுதிய பின்னர் மருத்துவப் படிப்பில் சேருவுதற்குக் காத்திருக்கும்படி இருந்ததாகக் கூறுகிறார். குடும்பத்தினரின் வற்புறுத்தலால் பட்டபடிப்பில் சேர நேர்ந்தது. அந்தசமயம் இவருடைய உறவினர் இவரை சமூக சேவை பற்றிய தொழில்முறை கல்வி பயிலும்படி அறிவுறுத்தினார். முதலில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சமூகத்திற்கு ஏதாவது தொண்டு செய்யலாம் என்ற எண்ணத்தில் மருத்துவராகும் முடிவை அந்த ஆண்டில் கைவிட்டு உறவினரின் வற்புறுத்தலின் மூலம் கல்விமுறைப் பயிற்சியில் இணைந்ததாக முகமது கூறுகிறார்.

பல்கலைகழகத்தில் முதல் மாணவராகத் தேறிமுடிந்த பின்னர் முகமது நகரத்தின் நடைமுறைகளையும் பிரச்சனைகளையும், சூழலையும் கவனிக்க ஆரம்பித்தார். உண்மையில் இவை முழுமை இல்லாமல் ஒரு பகுதியாகத் தெரிந்தது. இப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதில் தடைகளும் இருந்து வந்தமையால் ஒரு சமூகப் பணியில் ஈடுபடும் சமூகச் சேவகர்களுக்கு திட்டமிட்ட வரையறைகளதைத் தீர்மானித்து அணுகுவது எவ்வாறு? என்ற கேள்வியும் எழுந்தது. தொழில்முறை பயிற்சியுடன் கூடிய சமூக சேவகரை அரசு சாராத தொண்டுநிறுவனங்கள் கூடுமானவரை விலக்கியே வருகிறதென்ற நிலைபாட்டினால் முகமது தனக்குண்டான அனுபவங்களின் மூலம் சுயமாக ஒரு நிறுவனத்தை நடத்தி வழிமுறைகளைக் கண்டறிவதுதான் சுதந்திரமாக செயல்படுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் தீர்மானித்தார். மற்றவர்கள் செயல்படுவதை நான் குறைவாக எண்ணுவதில்லை. அதேசமயம் சூழலுக்கேற்றபடி தனிப்பட்டமுறையில் சில தீர்மானங்களை நாமே செய்வதுதான் சிறந்த வழிமுறையாக இருக்கும் என்று யோசித்து HCWH என்னும் நிறுவத்தை முதுநிலைப் படிப்பு

முடிவதற்கு முன்பே ஆரம்பித்து செயல்படுத்தினார். அவர் சமூகப்பணி பட்டபடிப்பில் தங்கப்பதக்கம் பெற்றிருக்கிறார்.

முகமது நிறுவனத்தை பொறுப்புடன் நிர்வகித்து செயல்படத் தொடங்கினார். கல்லூரியில் படிக்கும் நாட்களில் தெருவோரச் சிறார்களின் நலத்துக்கான பயிற்சித் திட்டத்தின் அனுபவம் இவருக்கு கைகொடுத்தது. அந்த சிறார்களின் திறமைகள் பொறுப்புணர்வு எந்த சவாலையும் சமாளிக்கும் திறமை ஆகியவற்றை அறிந்திருந்தாலும் சரியான வழிகாட்டுதல் இல்லாமல் அவர்கள் தடுமாறி வருவதாக முகமது உணர்ந்தார். இந்த நிலைமையைச் சீர்செய்யும் நோக்கத்துடன் HCWH என்னும் தொண்டு நிறுவனத்தை 1990 ஆம் வருடம் தொடங்கினார்.

சிறுவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க எண்ணினார். ஆரம்பத்தில் சவால்கள் அதிகமாக இருந்தாலும் இவரின் விடா முயற்சியும் பொறுமையும் மற்றும் இவருடன் கூட இருந்த குழுவினரும் ஒன்றாக இணைந்து தொண்டாற்றியது. ஒவ்வொரு தடைக்கற்களையும் கடந்து வர உதவியது.

சமூகப் பணியில் பயிற்சி பெற்ற ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தனிப்பட்டதிறமையும் லட்சியமும் இருந்திருக்கிறது. ஒவ்வொரு சூழலும் வித்தியாசமானதாகத் தெரிந்தது. தொடர்ந்து 30 வருடங்களாக இந்த நிலைமையை கடந்து வந்திருக்கிறோம் என்று முகமது கூறுகிறார். வளர்ச்சி அடைந்த நிலையில் வளர்ந்த சிறுவர்களுக்கு சுதந்திரமான வாழ்வை அளிக்க ஏதேனும் ஒருவகையில் உதவிகளைச் செய்யத் தீர்மானித்தது. இதைச்சீர் செய்வதற்கு அதிக முயற்சி தேவைப்பட்டது. தெருவோரச் சிறார்களின் ஒரேமாதிரியான வாழ்க்கை மற்றும் ஒன்றைச் சார்ந்து இருப்பது ஆகிய

நிலைகளை எல்லாம் எதிர்த்து வாழமுடியும் என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் அமைப்பு இந்தவகையில் பல உதவிகளும் வழிமுறைகளையும் கற்பித்து, அச்சிறார்களை நல்ல குறிக்கோள்களும் லட்சியங்களும் இணைந்த குடிமக்களாக வாழ தன்னால் இயன்றவரை முயற்சி செய்து வந்ததாகவும் குறிப்பிட்டார்.

முதலில் 40000 சிறுவர்களை பள்ளிகளில் கல்வி கற்க ஏற்பாடு செய்தனர். மேலும் 20000 சிறார்களை அவர்களுடைய குடும்பத்தினருடன் சேர்த்து வாழும்படி செய்தனர். கைவேலைத் திறன்கள் மூலம் வழிமுறைகளை ஏற்படுத்தி எளிமையான ஏழ்மை மிகுந்த சூழலிலிருந்து அவர்களை விடுவிக்கும் செயல்பாடுகளும் நடந்துவந்தன.

இதற்கு நடுவே சிறார்கள் மறுபடி வீதிகளுக்கு வருவது தடுக்கப்பட்டு வந்தன. விளிம்பு நிலை மனிதர்கள் யாருமில்லாத ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் ஊர்விட்டு ஊர் வரும் சிறுவர்கள் ஆகியோரையும் கண்காணிக்க நேர்ந்தது. DMR International School எனப்படும் சர்வதேசப் பள்ளியை அமைப்பின் மூலம் தோற்றுவித்து கல்வி கற்க வைத்தனர். தரமான கல்வியும் இளைஞர்களின் கைவேலைத்திறனும் முன்னேறும்படி வங்கி வேலைகளிலும் ஆயுள்காப்பீட்டு நிறுவனத்திலும் ஈடுபடும்படி பயிற்சி அளிக்கப்பட்டது.

சிறுவர்களும், இளைஞர்களும் செய்முறைப் பயிற்சி மூலம் தங்கள் திறமையை வளர்க்கும் பயிற்சியைக் கற்றுக் கொடுத்து மேலும் பெண்களையும் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழி செய்தனர். வீதியோரச் சிறுவர்களின் சிரமங்களை உணர்ந்து அந்த நிலையை அறவே ஒழிக்கப் பாடுபட்டனர். ஒருமுறை வீதிக்கு வர

நேரிட்டால் மீண்டு வருவது கடினம் என்று முகமது விவரிக்கிறார்.

ஆரம்பத்தில் 20 சிறுவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையிலிருந்து இன்று பன்முகத்தன்மை தொண்டு நிறுவனமாக முன்னேறியுள்ளது என எல்லோராலும் பாராட்டப்படும் நிலைமையை அடைந்துள்ளது. இதனால் பயன் அடைந்தவர்களால் பாராட்டப்படுகின்றது. மேலும் இவர்களுடைய பங்களிப்பு தான் வெற்றிக்கு வலிமையான அடையாளமாகத் திகழ்கிறது.

ஒரு மறுவாழ்வு இல்லம், நடமாடும் மருத்துவ ஊர்தி, கைத்திறன் பயிற்சிக்கான 2 மையங்கள் விளிம்புநிலைச் சிறார்களுக்கான பள்ளிக்கூடம் ஆகியவை தவிர மற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் இந்த வளர்ச்சி சாத்தியமாயிற்று. வளங்கள் நிறைந்த மையமாகவும் திகழ்கிறது.

CSIM அமைப்பு முகமது என்ற தனிமனிதருக்கு இந்த பயிற்சியில் மேலாண்மை பற்றி பாடங்களில் உதவிகரமாக இருந்தது. மனிதவளங்களை மேற்பார்வையிடுவது மிகவும் சவாலான செயல்பாடு ஆகும். குழுவினரைத் தக்க வைத்துக் கொள்வது மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. தகுதி வாய்ந்த குழுவினரின் மூலம் ஒரு தொண்டு நிறுவனம் வளர்ச்சி அடைய முடியும். குழுவினர் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு திட்டங்களை செயல்படுத்தும் வழிமுறையை அமைப்பு எனக்கு பாடமாக் கற்றுக் கொடுத்தது. மொத்தக் குழுவினரையும் ஒருங்கிணைப்பது என்பது ஒரு கலை. இதன் மூலம் தகவல்களை மற்றும் அதன் முக்கிய சாராம்சங்களை அறிந்துக் கொள்ள அமைப்பு பெரிதும் உதவியதாக முகமது தெரிவிக்கிறார்.

# 14. திரு. மொரார்ஜி தேசாய்

## குடிசை பகுதி மக்களின் சிறார்களுக்கான நாளைய விடிவு



சமூகத்தில் கீழ்நிலை மக்களின் குறிப்பிட்ட பகுதியினர் அரசுப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் தருணத்திலேயே பள்ளிப் படிப்பை முழுவதும் முடிக்காமல் இடையிலேயே விலகிவிடுவது நடைபெறுகிறது. அவ்வாறு இடையில் விலகுவதற்கான காரணங்களாவன. பொருளாதாரத் தடைகள், படிப்பறிவில்லாத பெற்றோர், பெண் குழந்தைகள் பருவநிலை அடைவது, திருமணங்கள் மற்றும் நண்பர்கள் மூலம் வரும் மாற்றங்கள் ஆகும்.

இதில் மாற்றங்களைக் கொண்டுவர தன்னார்வ நிறு-வனங்கள் முயற்சிகளை எடுத்து வந்தாலும் பள்ளியிலிருந்து இடைநிற்றலைத் தடுப்பது பெரும் சவாலாகவே இருக்கிறது. இருந்தாலும் சில தொண்டு நிறுவனங்கள் இந்த முயற்சியில் வெற்றி அடைந்து மற்ற நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக (Role Model) திகழ்கின்றன.

2008 ஆம் ஆண்டு Turning Point Educational Trust என்ற அமைப்பை நிறுவிய மொரார்ஜிதேசாய் என்பவர் குடிசை வாழ் மக்களின் சிறார்களுக்குத் தரமான கல்வி கிடைக்கும் முயற்சியை மேற்கொண்டார். எதனால் இந்த தொண்டில் குறிப்பிட்ட கவனம் ஏற்பட்டது என்ற வினாவுக்கு அவர் கூறிய பதில் "நான் 1995 - 1998 சென்னையிலுள்ள லயோலா கல்லூரியில் படிக்கும் சமயம் (AICUF) All India Catholic University Federation என்னும் அமைப்பில் சேர்ந்தேன். அந்த அமைப்பின் உதவியால் குடிசைப்பகுதி சிறார்களுக்கு கல்வியின் அவசியத்தை காவல்துறை உதவியுடன் நடத்திவரும் "நேசக்கரம்" என்னும் தன்னார்வத் தொண்டுநிறுவனத்தில் பகுதிநேர ஊழியனாகச் சேரும் வாய்ப்பு கிட்டியது.

பின்னர் சிறிது காலம் திருவான்மியூர் பக்கமுள்ள சோலை என்னும் அமைப்பில் பணியாற்றினேன். இதுவே என் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது என்று கூறுகிறார். குடிசைப் பகுதியில் வசிக்கும் சிறார்களின் நலம் குறித்த சிந்தனையில் ஆர்வம் கொண்டு பணிகள் செய்து வந்தேன். 2004 ஆம் ஆண்டு சென்னையில் சுனாமி தாக்கியதில் குடிசைவாழ் மக்களின் ஏழ்மை நிலை மிகவும் மோசமடைந்தது. இதனால் இந்த சிறார்களைப் பற்றிய நிலைமை, அவர்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனை எனக்கு அதிகமான வருத்தத்தை அளித்து, அவர்களுக்கு என்னால் முடிந்ததைச் செய்யவேண்டும் என்ற எண்ணமும், ஆர்வமும் உண்டாயிற்று".

ஆரம்ப நிலையில் வெவ்வேறு பின்புலங்களிலிருந்து வரும் சிறார்களின் வாழ்வில் நேர்மறையான மாற்றங்களை நடைமுறைப்படுத்த மிகவும் சிரமப்பட்டார். இந்த சமயத்தில் CSIM அமைப்பில் 4 மாதப் பயிற்சியாக சமூக மேலாண்மை

என்னும் பட்டயபடிப்பில் சேரும் வாய்ப்பைப் பெற்றார். ஒரு தொண்டு நிறுவனத்தை நடத்துவது, நிர்வாகத்தில் அதிக சிரமங்களைக் கொண்டது. சிறார்களுக்கு சரியான முறையில் பயிற்சி கொடுப்பது, குடும்பச் சூழலின் மூலம் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள், பள்ளிப்படிப்பை தொடரும்படி செய்தல் ஆகியவற்றை சவால்களாக ஏற்று நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால் அந்தசமயம் சரியான வழிகாட்டுதல் போன்ற உதவிகள் தேவைப்பட்டது என்று கூறுகிறார்.

CSIM நிறுவனத்தில் பயிற்சி எடுத்ததன் மூலம் தொண்டு நிறுவனம் நடத்துவதிலுண்டான முக்கியமான பாடங்களை நான் அறிந்துகொண்டேன். நிறுவனத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்துவதற்குண்டான வழிமுறைகளைக் கற்றுக் கொண்டேன். சிறார்களுக்கானக் கல்வி பணிகளில் தொண்டு செய்து வரும் முனைப்புள்ள நிறுவனங்களின் அறிமுகமும் CSIM மூலம் எனக்குக் கிடைக்கப் பெற்றேன் என்று மொரார்ஜி மேலும் கூறுகிறார்.

Turning Point Educational Trust மூலமாக சிறார்களுக்கு சரியான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தியது. அதேசமயம் அந்த நிறுவனத்திலுள்ள குழுவினர் குடிசைவாழ் சிறார்களுக்கு ஏற்படும் எதிர்பார்த்திராத அசாதாரண பிரச்சனைகளைக் கையாள்வதிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

தற்சமயம், சென்னையிலுள்ள 5 குடிசைபகுதியில் உள்ள சிறார்களைக் கல்வி கற்பதற்கு வழிவகைகளைச் செய்து வருகிறது. வார முழுவதும் ஒழுங்கான நடைமுறைப் பயிற்சிகளான ஆங்கிலம் பேசுவதற்குண்டான பயிற்சிகள் சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் பற்றிய குறிப்புகள்,

முக்கியமாக கோவிட் (COVID) காலத்திற்குண்டான சுகாதார வழிமுறைகள், மற்றும் ஓவியக் கலைகதைகள் சொல்லுதல் மற்றும் சுயமாக நிற்பதற்குண்டான தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்கும் முறைகள் ஆகியவை நடைபெற்று வருகிறது.

அநேக சிறுவர்களுக்கு பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று படிப்பதற்குண்டான முனைப்பு இருப்பதில்லை, ஆகவே அவர்களுக்குத் தனி கவனம் செலுத்தி பள்ளியைவிட்டு இடையில் நிற்றலைக் கண்காணிக்கும் நிலைமையையும் செய்து வருகிறது.

மேலும் மொரார்ஜி என்னுடைய இந்த பணியில் ஓரளவு வெற்றியும், சிறார்களிடம் மாற்றங்கள் ஏற்படுத்தும் வழிமுறைகளையும் சிறப்பாக நடத்தி வருவதற்கு நான் CSIM அமைப்புக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். முன் அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள் மூலமும் செயல்படும் திறனாளிகளின் மூலமும் என்னுடைய தொண்டு நிறுவனத்தை நடத்தும் நிர்வாக அனுபவங்களை எனக்குள் ஏற்படுத்தி செயல்படச் செய்தது என்று கூறுகிறார்கள்.

மேலும் பெண் குழந்தைகள் இடையில் பள்ளியிலிருந்து விலகுதல் பருவ வயதிலுள்ள சிறார்களின் பிரச்சனைகள் ஆகியவை மிகப்பெரும் சவால்களாக இருக்கின்றன. தற்சமயம் இடை நிற்றல் குறைந்து வருகிறது. அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் Joint Commissioner (காவல்துறை) Mr. V.Balakrishnan, IPS ஆகியோர் செய்து வரும் உதவியால் 18 சிறார்களை கல்லூரிப் படிப்பில் சேர்க்க முடிந்தது என்றும் கூறுகிறார்.

தற்சமயம் Turning Point 20 பணியாளர்கள் Covid சார்ந்த சுகாதாரப் பணிகளை செய்து வருகிறார்கள்.

கணிணி மூலமாகக் கல்விக்கற்று வருகிறார்கள். ஊரடங்கு காலங்களில் அவர்களுக்கு கல்வி கற்பதிலுள்ள நாட்டம் குறைந்து வருவதால் Turning point குழுவினர் சிறார்களுக்கு விளையாட்டு போட்டிகள் வைத்தல் மற்றும் சில பயிற்சிகள் கொடுத்து ஊக்கப்படுத்தி வருகின்றனர் என்று மொரார்ஜி விவரிக்கிறார்.

இன்று வரை 500 சிறார்களுக்கு குறிப்பாக 5 குடிசைவாழ் பகுதியில் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம், அதிகமான சிறுவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற்றமடையும் வாய்ப்புகளும், வழிகாட்டுதல்களும் தேவைப்படுகின்றன. மேலும் அதிகமான குடிசைப் பகுதியில் வாழும் மற்ற சிறார்களுக்கும் தொடர்ந்து உதவிகளைச் செய்து முன்னேற்றச் செய்ய வேண்டும் என்ற எங்கள் கனவு இன்னும் தொடர்கிறது என்ற மொரார்ஜி உணர்ச்சியுடன் குறிப்பிடுகிறார்.

# 15. திரு. பிரபாகர்

## ஒன்று சேர்தல்- ஆர்வம் மற்றும் உறுதியான நிலைபாடு



நம் நாட்டின் தொலைதூர இடங்களிலெல்லாம் சமூக சேவைத் துறை தடைகளை எல்லாம் தாண்டி தெளிவுடனும், குறிப்பிட்டுச் சொல்லும்படியும் செயல்பாட்டுத் திறனுடனும் சிறந்து விளங்குகிறது. பலதரப்பட்ட சமூகங்களில் ஆர்வமுள்ள உறுதியான தனிப்பட்ட தன்னார்வலர்கள் விடாமுயற்சியுடன் ஈடுபடுவதைப் பார்க்கமுடிகிறது. சமூகச் சூழலில் தடைகள் இருந்தாலும் முடிந்தவரை தங்களால் இயன்ற தொண்டுகளைத் தேவைப்பட்டவர்களுக்கு உதவி அவர்களை முன்னேறச் செய்து வருவதைக் காண்கிறோம். அவர்களின் தனிப்பட்ட அனுபவங்கள் மூலம் பாடங்கள் மற்றும் முன்னேறிச் செல்வதிலுள்ள சிரமங்கள் நிதர்சனமாகத் தெரிய வருகிறது. இந்தச் சூழலில் தன்னார்வலர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவது என்பது அவசியமானதாகப்பட்டது.

இதன் மூலம் சமூகம், மனிதநேயம் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டு இருக்கும் வளங்களின் மூலம் மேலும் முன்னேறிச் செல்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கும் என்று சென்னையிலுள்ள அமைப்பின் நிறுவனர் ஜெ.பிரபாகரன் கூறுகிறார்.

JP என்று குறிப்பிட்டு அழைக்கப்படும் ஜெ.பிரபாகர் மிகவும் எளிமையான பின்னணியிலிருந்து வந்து ஓவியக் கலை பயில விரும்பும் கனவுடன் இருந்தார். தமிழ்நாட்டிலுள்ள ஊத்துக்கோட்டை என்னும் ஊரில் பள்ளிப் படிப்பை முடித்து 1973 ல் சென்னைக்கு வந்தார். மேற்கொண்டு படிக்க இயலாமல் போனதால், எண்ணூரிலுள்ள Ashok Leyland என்னும் தொழிற்சாலையில் சாதாரண கூலித் தொழிலாளியாகப் பணிபுரிந்து 29 வருடம் உழைத்து முன்னேறினார்.

சமூக சேவை செய்வதில் ஆர்வம் இருந்ததால் இவருடைய நண்பர்களுடன் சிறு குழுவாகச் சேர்ந்து பணிபுரியும் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள சிற்றூர்களில் தேவைப்படும் மக்களுக்குத் தொண்டாற்றி வந்தார். பிற்காப்பு இல்லங்கள், திக்கற்றோரின் ஆசிரமங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று மருத்துவ உதவிகளும் ரத்ததான முகாம்களும் நடத்தி வந்தார். சமூகத்திலுள்ள வித்தியாசமான இடங்களுக்குச் சென்று பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வந்ததில் அதிகமான அனுபவங்கள் ஏற்பட்டு மேலும் ஆர்வத்துடன் பெரிய அளவில் தொண்டுப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றும் சமூக சேவைகளில் ஊக்கத்துடன் ஈடுப்பட்டு தொண்டாற்ற வேண்டும் என்றும் தீர்மானித்தாகக் கூறினார்.

இவருடைய குழுவினரின் அமைப்பான நல்லோர் வட்டம் மூலம் மணலி எண்ணெய் சுத்திகரிப்பாலைக்கு

பக்கத்திலுள்ள தீயம்பாக்கம் என்னும் கிராமத்தில் நடைபெற்று வந்த கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலை எப்பாடு பட்டாவது கட்டுப்படுத்த வேண்டும் என்று உறுதி பூண்டார்.

கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலால் ஏற்படும் கெடுதலான விளைவுகளால் அங்குள்ள இளவயதினரின் எதிர்காலம் நாசமாகி விடும் என்று எண்ணி அங்கு சீர்திருத்தங்கள் செய்ய எண்ணினார்.

மஹராஷ்டிரா மாநிலத்தில் சீர்திருத்தம் செய்த அண்ணா ஹஜாரே என்பவரின் மூலம் ஊக்கம் கொண்டு அதன்படி மேற்கொண்ட தொழிலில் ஈடுபட்ட மக்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து திறம்பட செயலாற்றினார். அண்ணா ஹஜாரேயின் வழிகாட்டுதல்படி தொண்டாற்றியதில் சாராயம் காய்ச்சும் தொழில் அறவே நிறுத்தப்பட்டது. மேலும் தீயம்பாக்கம் கிராமத்திலும் அதன் அருகிலுள்ள சிற்றூர்களிலும் உள்ள சிறார்களுக்குத் தேவையான கல்வி அறிவை வழங்கும் பொருட்டு, பிரபாகர் குழுவின் விவேகானந்தா வித்யாலயா என்னும் பள்ளியில் இளவயதிரைச் சேர்த்து கல்வி அறிவை வளர்க்க அரும்பாடு பட்டனர்.

2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டுவரை ஆனந்த விகடன் பத்திரிக்கையில் ஓவியராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இந்தப்பணியில் ஈடுபட்டதால் கிட்டதட்ட 3000 ஓவியங்கள் மூலம் நாட்டின் தலைவர்கள் மற்றும் கோவில் சிற்பங்கள் ஆகிவவற்றைத் தீட்டும் அனுபவமும் இந்தியா முழுமைக்கும் சுற்றிப் பயணப்படும் வாய்ப்பு கிடைத்ததாகக் கூறுகிறார். சமூகசேவை செய்யவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து தனிப்பட்ட முறையில் இந்தத் துறையில் சாதிக்க

வேண்டும் என்று விரும்பினார். சமூகத்தில் அவரைச் சுற்றி நடக்கும் சமூகப் பணிகளில் வெவ்வேறு விதமான வரைமுறைகளைக் கண்டு தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களுடைய அனுபவங்களையும் கருத்துக்களையும் பற்றிய விவரங்களை அறியும்படி செய்வதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் விரும்பினார்.

சமூக சேவை என்பது விதவிதமான நடைமுறையில் வெவ்வேறு சூழ்நிலைகளில் நடைபெற்று வந்தாலும் அவை அனைத்தையும் ஒருங்கிணைப்பதன் மூலம் திறமைகளை ஆராய்ந்து கலந்துரையாடுவதன் மூலம் தொடர்புகள் ஏற்படுத்தினால் இந்தபணியில் மேலும் முன்னேறி கூட்டு முயற்சி மூலம் ஒரு பெரிய மலையையே நகர்த்த முடியும் என்று நம்பினார்.

2005 ஆம் வருடம் 100 தொண்டு நிறுவனங்களை எண்ணங்களின் சங்கமம் என்ற அமைப்பின் மூலம் ஒருங்கிணைத்து கருத்துப் பரிமாற்றங்களைத் தங்கள் அனுபவங்களின் மூலம் வெளிக்கொணரும்படி செய்தார். ஒவ்வொரு தொண்டு நிறுவனத்துக்கும் நேரில் சென்று ஆராய்ந்ததில், ஒரு அமைப்பு ஏற்படுத்தி இந்த முயற்சியில் மேலும் முன்னேறி சீரான வழிமுறைகளையும் தேவைப்படும் திட்டங்களையும் கடைப்பிடிப்பது எளிதாகும் என்று உறுதியாக எண்ணினார்.

ஆண்டுக்கு ஒருமுறை அனைவரும் சந்திப்பது என்பதைக் கட்டமைத்து அதன் மூலம், ஒவ்வொருவரின் தனித்திறமையும், ஊக்கமும், விடாமுயற்சியும் வெளிப்பட்டு திட்டமிட்ட நடைமுறைகளால் மேலும் முன்னேறிச் செல்ல முடிந்தது என்ற கூறுகிறார்.

நான் CSIM அமைப்பில் பங்கெடுத்ததன் மூலம் அதிகமான திறன் கொண்ட அறிவுள்ளவர்களின் பழக்கம் ஏற்பட்டது. 2007 ஆம் ஆண்டு (Networking and Development Centre for Service Organisation- NDSO) Trust ஆரம்பித்து ஒவ்வொரு வருடத்தின் முதல் ஞாயிறு 100 தொண்டு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து கலந்துரையாடினர். தற்சமயம் கடந்த 16 வருடங்களில் 1600 நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக் கூறினார். இந்தத் தொடர்பு அல்லது சங்கிலித் தொடர் இயற்கையாக நிகழ்ந்ததாகவும் கூறினார்.

சுகாதாரம், கல்வி, இயற்கை விவசாயம், சூழலியல் மேலாண்மை, கிராமப்புற வளர்ச்சி ஆகிய எல்லாத்துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டது. எந்தத் துறையும் விடுபட்டுப் போகாமல், அதிகமான தன்னார்வலர்களையும், தொண்டு நிறுவனங்களையும், ஒருசேர இணைத்து நல்ல சீரிய மாற்றங்களை ஏற்படுத்தி வளர்ந்து முன்னேறியது. இதில் CSIM அமைப்பின் வழிகாட்டுதல்கள் மூலம் அளப்பரிய உதவிகளைச் செய்ய முடிந்தது என்று கூறுகிறார்.

அதிகமான சவால்களை எதிர்கொண்டதை தங்களுடைய வலிமையையும், ஊக்கத்தையும் நிர்ணயம் செய்ய ஒரு வாய்ப்பாகக் கருதினார். 2015 ஆம் ஆண்டு சென்னையில் வெள்ளம் சூழ்ந்த பேரிடர் காலத்தில் கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழங்குடி மக்களுக்கு 150 வீடுகளும், 500 கழிப்பறைகளும் கட்டப்பட்டு NDSO அமைப்பின் மூலமும் அரசு மற்றும் ஒருங்கணைந்த தொண்டு நிறுவனங்களின் மூலமும் உதவி செய்ய முடிந்ததை நினைவு கூறுகிறார்.

மகாத்மா காந்தியின் பெயரில் கல்விக்கூடங்களை கடலூர் மாவட்டத்தில் 20 கிராமங்களில் பழங்குடியினருக்கு பள்ளிகளை அமைத்து கல்வியில் முன்னேறும் செய்தார். தர்மபுரி, பொள்ளாச்சி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 563 சிறார்கள் இந்த மையங்களின் மூலம் கல்வி பயின்று வருவதையும், மதிய உணவு அளித்ததையும் கொரோனா தொற்றுக் காலத்திலும் தொண்டாற்றியதையும் கூறுகிறார்.

மேலும் Confederation of Indian Industry (CII) செய்த உதவிகள் மூலம் NDSO 3 அதிநவீன படகுகளை அவர்களுக்கு அளித்து அம்மக்களை பொருளாதாரத்தில் மேம்பட செய்து வாழ்வாதாரமும் கிடைக்கச் செய்தது. 1000 குடும்பங்களுக்கு சூரிய சக்தி மூலம் எரிசக்தி உண்டாக்கி விளக்குகளை அளித்து அவர்கள் வாழ்வில் ஒளி ஊட்டியது. கடலூர் மாவட்டத்திலுள்ள தாழைநல்லூர் கிராமத்தை தத்தெடுத்து முன்மாதிரி கிராமமாக விளங்கச் செய்திருப்பதைக் குறிப்பிடுகிறார்.

மேலும் NDSO தனிப்பட்ட தன்னார்வலர்களையும் உண்மையான தொண்டு நிறுவனங்களையும் கண்டு அங்கீகரித்து பரிசுகளும், நற்சான்றிதழ்களும் ஆண்டுக்கு ஒருமுறை அளித்து கௌரவிக்கிறது.

மகாத்மா காந்தி, ஸ்வாமி விவேகானந்தா ஆகியோரின் பெயரில் தமிழ்நாடு கவர்னரின் முன்னிலையில் தன்னார்வலர்களை கௌரவிப்பதன் மூலம் அவர்களை சமூகத்திற்கு மேலும் தொண்டாற்றும்படி ஊக்கம் கொள்ளச் செய்கிறது. கோவிட் தொற்றுக் காலத்திலும் அதிகமான சவால்களை எதிர்கொள்ளும் வலிமையையும் NDSO அமைப்பு தனது முயற்சியால் தோற்றுவித்தது.

இளைய சமுதாயத்தினரிள் ஈடுபாடும், ஆர்வமும் தான் எங்களது வலிமை: இந்த அமைப்பு புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் முன்மாதிரி பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி குடிபராமத்துப் பணிகளை சிற்றுார்களில் பரவச் செய்யும் எண்ணத்துடன் 20 பஞ்சாயத்துத் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து மக்களுக்கு நல்ல எதிர்காலத்தை அளிக்கும் பணிகளை ஆர்வத்துடன் செய்ய விளைகிறது. நாங்கள் குழுவாக ஒருங்கிணைந்து இந்தக் கனவை நனவாக்குவோம் என்றும் உறுதியுடன் ஜெ.பிரபாகர் கூறுகிறார்.

# 16. திரு. ராதாகிருஷ்ணன்

## கைம்மாறு கருதாது பிறருக்கு உதவி செய்வது




குழந்தைகள் வளர்ப்பில், சுகாதாரம், சுத்தமாக இருத்தல் என்பது பற்றிய பாடங்கள் முக்கியமாகக் கருதப்படுகிறது. குழந்தைகள் வளர்த்த பின்பு இந்த சேவைகளை செய்வதில், செயல்படுத்துவதில் தடைகள் அதிகமாக எதிர்ப்படுவதாகத் தெரிய வருகிறது. சாலை விபத்துக்களில் நாம் இதை கண்கூடாகக் காணமுடிகிறது. விபத்துக்களில் சிக்கியவர்களைக் காப்பற்ற உதவ விரும்பினாலும் அதில் இருக்கும் சிக்கல்களையும், அதனால் உண்டாகும் விளைவுகளையும் கண்டு அஞ்சி பின்வாங்க நேர்கிறது. The Good Samaritan Law (கருணையுடன் உதவி செய்பவர்களுக்கான உரிமைகளுக்கான சட்டம்) ஏற்படுத்தப்பட்ட பின்னர், நிலைமை மாறிவருகிறது. மற்றவர்களுக்கு ஆபத்து சமயத்தில் உதவி செய்பவர்களை ஊக்கப்படுத்த சட்டம் இயற்ற வேண்டியள்ளது. மிகவும் வருத்தப்பட விஷயம் என்று தோழன் டிரஸ்ட் - ன் நிறுவனரான ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

இளவயதில் ராதாகிருஷ்ணன் அரசுப்பணியில் சேருவதற்கு விரும்பினார். மற்ற மனித உயிர்களுக்கு கைம்மாறு கருதாமல் உதவி செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தார். இவருடைய பெற்றோர்களுடைய மரணத்தினால், பள்ளிப்படிப்பை முடிப்பதற்காக, நிறைய பணிகளில் ஈடுப்பட்டு சிரமப்பட்டார்.

சவால்கள் நிறைந்த இளவயதில் மிகவும் சிரமத்துடன் பல எதிர்ப்புகளுக்கு இடையில் பட்டபடிப்பை முடித்தார். இவருடைய நண்பர் குழுமத்தின் மூலம் டிப்ளமோ படிக்கும் சமயம் இவர் சமூகத்திலுள்ள சூழலின் மூலம் சக மனிதர்களுக்கு உதவி செய்யும் நோக்கம், இவரிடம் மீண்டும் கிளர்ந்தெழுந்தது. இவர் செய்து வரும் பணிகளின் மூலம் கிடைத்த வருவாயுடன் இவரின் நண்பர்களும் அவர்களால் முடிந்த அளவு பண உதவிகள் செய்ததன் மூலமும் ஒரு நல்ல காரியத்திற்கு குழுவினரின் உதவிகள் மற்றும் நிதி உதவிகள் மூலமும் முயற்சி செய்த செயல் திட்டங்களின் மூலமும் இவருடைய உயரிய நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

Thozhan Trust ஆரம்பத்தில் 4 நண்பர்களுடன் ஆரம்பித்து திக்கற்ற முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்றவர்களின் இல்லங்கள் ஆகியவற்றிற்கு வாரந்தோறும் சென்று தேவையான உதவிகளைச் செய்ய திட்டமிட்டு நடைபெற்று வந்தது.

2007 ஆம் ஆண்டு இந்த அமைப்பு பதிவு செய்யப்பட்டு பலவிதமான சமூகப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது. 2013 ஆம் ஆண்டு இவரது குழுமம் Accident Free Nation (விபத்தில்லா சூழல் உள்ளநாடு) என்ற செயல்திட்டத்தின் மூலம் விபத்தில் சிக்கிய மனிதரைத்

தக்க தருணத்தில் உதவி காப்பாற்றுவது மிகவும் முக்கியமானது என்பதை மக்களுக்கு தெரிய வைத்தனர். நாங்கள் கல்லூரி மாணவன் ஒருவன் விபத்தில் சிக்கி இறந்ததைக் கண் கூடாக நேரில் பார்க்க நேரிட்டது என்று கூறுகிறார். மேலும் நாங்கள் விபத்து நடந்த சமயம் மக்கள் எதுவும் செய்யாமல் செயலற்று இருந்ததையும் கண்டு திகைத்தோம். அதே மக்கள் நேரில் விபத்து நடந்ததைக் கண்டு தங்களது நிலையில் இருந்து மாறியதையும் கண்டோம் என்று நினைவூட்டுகிறார்.

மக்களின் மனோநிலையை மாற்றுவது என்று தீர்மானித்து தோழன் Trust 2013 ஆம் ஆண்டு சென்னையில் மாம்பலத்தில் முக்கியமான சந்திப்பில் விழிப்புணர்வு இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தியது என்றும் குறிப்பிடுகிறார். வழியில் எதிர்பட்ட சிலர் ஆர்வத்துடன் உதவி செய்ய விரும்பியதை அறிந்த ராதாகிருஷ்ணன் அவர்களையும் தங்களுடைய குழுவில் சேர்த்தன் மூலம் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்பட்டு தற்சமயம் இவருடைய இயக்கத்தில் ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள் இந்த மாநிலத்தில் இருப்பதாகக் கூறி வியக்கிறார்.

தோழன் அமைப்பு வளர்ந்து அதிகமான வாகனப் போக்குவரத்து சந்திப்புகளில் பங்கெடுக்கின்றது. வாரத்தின் எல்லா நாட்களிலும் சென்னையில் 36 இடங்களில் விழிப்புணர்வு இயக்கத்தின் வழியாக அதிகமான மக்களையும் தன்னார்வலர்களையும் செயல்படச் செய்கிறது. பொது இடங்களான பூங்காக்கள் கடற்கரைகள் ஆகிய இடங்களிலும் செயல்பட செய்தார்.

தொடர்ந்து 2014, 2015, 2016 ஆகிய 3 ஆண்டுகளிலும் 100 போக்குவரத்து சந்திப்பில் ஒரே சமயத்தில்

தன்னார்வர்கள் மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு நடத்தியது மிகப்பெரிய சவாலான செயல் திட்டமாக தோழன் ட்ரஸ்ட பெருமையாகக் கருதுகிறது. மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய தோழன் குழுவினரின் பங்களிப்பால் Accident Free Nation என்னும் கனவு நனவாகியது. மேலும் 2016 மார்ச் மாதம் இயற்றிய Rights of Good Samaritan Law சட்டத்தின் மூலம் நற்கருணை தூ துவர்கள் (Samaritan) சிக்கலான தருணத்தில் உதவிகள் செய்து உயிரைக் காப்பாற்றியவர்களை கௌரவித்து மற்றும் அவர்களுக்கானஉரிமைகளையும் செயல்படுத்த முடிந்தது.

2017 ம் ஆண்டு முதல் தோழன் அமைப்பு அதிகமான தன்னார்வலர்களை இந்த செயலில் ஈடுபடவைக்க இந்தசட்டம் மேலும் உதவிகரமாக இருந்தது. சட்டத்தைப் பற்றிய முக்கியமான அம்சங்களை தோழன் அமைப்பு எடுத்துக் கூறி விபத்து நடந்ததும் செய்யப்பட வேண்டிய முதலுதவிகளையும் உடனடியாகச் செயல்படுத்தும் வழிமுறைகளையும் விவரித்து விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்கு அனுப்புவது போன்ற பயிற்சிகளையும் அளித்து வந்தது.. இது போன்ற பயிற்சிமுறைகளை 75 பூங்காக்களில் ஏற்பாடு செய்து மக்களுக்கு எடுத்துக் கூறியதன் மூலம் பல தடைகளைக் கடந்து முன்னேறியது. இதிலிருந்து உயிர் காக்கும் திறனில் ஆரம்பகால வழிகாட்டுமுறைகள் எவ்வாறு உதவுகிறது என்பது தெரியவந்தது.

ராதாகிருஷ்ணன் CSIM பற்றிக் கேள்விபட்டு தன்னுடைய அமைப்பின் செயல்திட்டத்திற்கு மேலும் ஊக்கம் கொடுக்கும் விதத்தில் உதவக் கூடும் என்று நம்பினார். நான் எதிர்பார்த்தற்கு அதிகமாக CSIM எனக்கு உதவியது. எனது ஆர்வமும், ஊக்கமும் இதனால் அதிகரித்தது.

தோழன் அமைப்பு நடத்துவதற்கு நிதிஆதாரங்களும் தேவைபட்டன.

மற்றவர்களுக்கு உதவ வேண்டும் அதுவும் ஆபத்தில் சிக்கியவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தொண்டுநிறுவனக் குழுவினர் போக்குவரத்துத் துறை மற்றும் அதில் சம்பந்தப்பட்ட ஆர்வலர்கள்,தோழன் அமைப்புக்கு மேலும் வலுசேர்த்தனர். இதன் மூலம் சமூகத்திலுள்ள மற்ற மனிதர்களையும் குடும்ப உறுப்பினர்களையும் ஈர்த்து பயனாளிகளுக்குத் தொண்டு செய்வது தொடர்ந்து நடந்து வந்தது.

வருடத்தில் 8000 ஆர்வலர்களை ராதாகிருஷ்னண் வழி நடத்தி தோழன் டிரஸ்ட் குழுவினருடன் சேர்ந்து செயல்பட்டு வருகிறார். 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதன் முதலாக கணிணி மூலம் விழிப்புணர்வு இயக்கத்தை இந்தியா முழுமையும் உள்ள தன்னார்வலர்களுக்காக (2800) சாலைவிதிகளும் அவற்றைக் கடைபிடிக்கும் முறைகளும் பற்றிய பயிற்சியை செயல்படுத்தினார். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், முதியவர்கள் ஆகிய அனைவரும் சாலை விபத்தில் சிக்கியவர்களை உடனடியாகக் காப்பாற்றுவதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இறுதியாக நான் என்னுடைய லட்சியத்தில் உறுதியாக இருந்து மக்களுக்கு தோழன் அமைப்பின் மீது நம்பிக்கை ஏற்படுத்தி பிறருக்கு உதவுவதால் (விபத்துக் காலத்தில்) ஏற்படும் சிக்கலுடன் கூடிய பயத்தையும் போக்கி மக்களை எதிர்கொள்ள வைத்ததில் பெருமைப்படுகிறேன் என்று கூறுகிறார்.

# 17. திரு. ரஹீம் சாயிக்

## சரியான பாதையில்



(ரயில் நிலையங்கள், எல்லா கோடை காலத்திலும், குடும்பங்கள் கொண்டாடும் இன்றியமையாத இடமாகக் காணப்படுகிறது.) இரயில் நிலையம் என்று நினைத்த மாத்திரத்திலேயே அதற்குண்டான ஓசைகளும் அனைத்து மொழிகளிலும் சேருமிடம், புறப்படுமிடம் சார்ந்த உத்தரவுகளும், பயணம் செய்பவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலும் மற்றும் டிக்கட் பரிசோதகர்களின் முகமும் தோன்றிவிடுகின்றது. அதேசமயம் அதிகமான சிறுவர்களையும் நடைமேடைகளில் ஓடியாடுவதையும் பார்க்க முடிகிறது. ஆவர்களுடன் பெற்றோர்கள் இல்லாததையும் பெற்றோர்கள் இல்லாமல் ஏன் தனியாக இங்கு தங்கியிருக்கிறார்கள்? என்ற கேள்வியும் எழுகிறது என்று திரு.ரஹிம்சாயிக் கூறுகிறார். பெங்களூரிலுள்ள Need Base India என்னும் நிறுவனத்தை ஆரம்பித்தவர் திரு.ரஹிம்சாயிக்.

ரஹீமின் தகப்பனார் இந்திய ரயில்வே அமைப்பில் பணிபுரிந்து வந்ததால் ரஹீமுக்கு இந்த சிறுவர்களைப் பற்றிய விவரமும் அவர்கள் வாழும் நிலையும் அதிகமாகத் தெரிய வந்தது. ஓவ்வொரு முறையும் நான் ரயில் நிலையத்தைக் கடக்கும் பொழுதும் சிறுவர்கள் ஓடியாடுவதைப்பார்க்க நேர்ந்தது. சிலசமயம் அவர்களுடன் சில நபர்களும், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் இருப்பதைக் காண முடிந்தது. இப்பொழுது அவர்கள் சிறுவர் நலம் சார்ந்த அலுவலர்கள் தான் என்பது புரிந்தது என்று ரஹீம் கூறுகிறார். குடும்பங்களை விட்டு ஏதோ காரணத்தால் ஓடிவந்து இரயில் நிலையங்களில் தஞ்சமடைந்த சிறுவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவியாக இருக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

கர்நாடக மாநிலத்தின் வட பகுதியிலுள்ள (Raichur) ராய்ச்சூர் என்னும் மாவட்டதில் பிறந்த ரஹீம் உயர்கல்வி பயின்று முடிந்ததும், தனியார் நிறுவனத்தில் பணிபுரிய விரும்பாமல் உள்ளூரிலுள்ள சக்தி என்னும் தொண்டு நிறுவனத்தில் இணைந்து, தெருவோரச் சிறுவர்கள் மற்றும் இரயில் நிலையத்தில் தஞ்சமடைந்த சிறுவர்கள் ஆகியோருக்கான உதவிகளைச் செய்ய விரும்பி அவர்களை மறுபடி குடும்பத்தினரோடு சேர்த்துவைக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். இந்த பணியைச் செய்வது அவருக்கு மிகவும் உற்சாகமளிக்கிறது என்றும் கூறுகிறார். சிறுவர்களின் வாழ்வுரிமை பற்றிய தெளிவு அவருக்கு இருந்ததால் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தாலும் குடும்பத்தினர் தங்களது குழந்தைகளைப் போதுமான அளவு கவனிக்காமல் அலட்சியமாக இருப்பதைக் கண்டு வருத்தமுற்றார். "நாங்கள் அவர்களைப் பாதுகாத்து வழிநடத்த முயற்சி செய்தாலும் அவர்கள் என்னை நம்பாமல் விலகிச் செல்வதைக் காணமுடிகிறது. அந்த

குடும்பத்தினர் வாழும் சூழலின் தாக்கங்களினால் குழந்தைகள் மீது தனிப்பட்ட அக்கறை எடுத்துச் செயல்பட முடியாமல் இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது என்று ரஹீம் குறிப்பிடுகிறார்.

குழந்தைப் பருவம் தான் ஒரு மனிதனின் மேம்பட்ட வாழ்வுக்கு அடிப்படையானது ஒருவனுடைய வாழ்வில் முடிவெடுக்கும் தீர்மானங்களை செயல்படுத்த முடியாமலும் இருக்கும் நிலைமை உண்டாகிறது. அதனாலேயே நாங்கள் அவர்களை கவனிக்காமல் விலகிச் செல்வது இயலாத காரியம் என்று ரஹீம் கூறுகிறார்.

10 வருட காலம் சக்தி அமைப்பில் பணியாற்றியதில் சிறுவர்கள் எந்தப் பின்னணியிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. கைவிடப்பட்ட குழந்தைகள்,பாலியல் தொழில் புரிபவர்களின் குழந்தைகள் மற்றும் பிச்சையெடுப்பவர்களின் குழந்தைகள், திக்கற்ற நிலையிலிருப்பவர்கள், குடும்பத்தினரால் சிறுமைப்படுத்தப்பட்ட குழந்தைகள் என பலவகைப் பட்ட சூழலுள்ள பின்னணியிலிருந்தும் வந்தவர்கள் மேலும் அவர்கள் வாழ்வில் மேம்பட்ட நிலையை அடைய வேண்டிய நிலை தேவை என்று உணர்ந்தார். அதற்கான பணியாக ரஹீம் மிகவும் விருப்பத்துடன் Need Base India என்னும் தொண்டு நிறுவனத்தை 2009 ஆம் ஆண்டு தொடங்கினார்.

நீண்ட நாட்களுக்கு இந்தச் சிறுவர்களைப் பாதுகாத்துப் பராமரிப்பது என்பது நடைமுறையில் சாத்தியப்படுவது சிரமம். மேலும் அதற்கான நிதிஆதாரத்தைத் திரட்டி இல்லங்களை அமைப்பது மற்றும் பராமரிப்பது ஆகிய செயல்பாடுகளுக்கு கால அவகாசம்

தேவைப்படும் என்பதால் நல்ல நிலைமையிலுள்ள அரசுப் பள்ளிகளில் அம்மாதிரியான குழந்தைகளைச் சேர்த்துவிட தீர்மானித்தார். பள்ளியில் குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், இலவசச் சீருடை, மதிய உணவு மற்றும் நல்ல தரமானக்கல்வி அதற்கேற்ற பயிற்சி வகுப்புகள் ஆகிய அனைத்தும் ஒருசேரக் கிடைப்பதால் அதன் நன்மையைக் கருதி பள்ளிக்கு அனுப்பப் பட்டனர். ரஹீம் ன் குழுவினர் அந்தக் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் கைவேலைபாடுகளையும் கற்றுக் கொடுத்து அவர்களுடைய தனிப்பட்ட திறமைகளையும் கவனித்து செயல்பட முடிந்தது. கடந்த 12 வருடங்களில் Need Base India என்னும் அமைப்பின் மூலம் ஆண் குழந்தைகளுக்கு 4 பெண் குழந்தைகளுக்கு 4 இல்லம் என்று 8 இல்லங்களை (6 வயது முதல் 18 வயதுவரை) மொத்தம் 500 சிறுவர்களுக்கான பணிகளைச் சீரமைத்தனர்.

மனதளவில் துன்பப்படும் இந்த உணர்வுமிக்க சிறுவர்களுக்கு உதவிடும் வழிமுறையாக இசை,நடனம் ஆகிய கலைகளில் அவர்கள் பங்கெடுப்பதன் மூலம் சமூகத்திலுள்ள மற்ற குழந்தைகளுடன் கலந்து பழகும் வாய்ப்பைரஹீம்ஏற்படுத்தினார்.இல்லத்தில்வளருவதனால் சமூகத்திலுள்ள மற்ற மனிதர்களோடு இசைந்து வாழ்வதும் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கலந்து உரையாடும் சந்தர்ப்பத்தை உண்டாக்கும்படி செய்தார். அப்பொழுது தான் சமூகத்துக்கும் அதைச் சார்ந்த மனிதருக்கும் இத்தகைய குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வு ஏற்படும் என்று நம்பினார். குழந்தைகளின் மனதிலும் இச்செயல்பாட்டின் மூலம் தன்னம்பிக்கையும் ஏற்படும் என்று கூறுகிறார்.

தற்சமயம் மொத்தம் 1900 குழந்தைகளுடனான Need Base India என்னும் அமைப்பின் வளர்ச்சி CSIM ல் ரஹீம் கற்றுக்கொண்ட பயிற்சியினால் விளைந்தது. முதலில் நான் CSIM அமைப்பை நடத்துபவர்களிடம் நோக்கங்களையும் பிரச்சனைகளையும் எடுத்துக் கூறுவேன். ஆவர்கள் உடனடியாக என்னுடைய நோக்கங்கள் லட்சியங்கள் நிறைவேறும்படியான உதவிகளை எடுத்துரைப்பார்கள். CSIM அமைப்பின் அறிவார்ந்த ஆலோசனைகளின் வாயிலாக இன்று எங்கள் Need Base India நிறுவனம் நான் எதிர்பார்த்ததை விடவும் வளர்ச்சியடைந்து இருப்பதை உணருகிறேன் என்றார்.

ஒவ்வொரு சிறுவனும் கல்வி கற்று பட்டம் பெற்று வாழ்க்கையில் ஒருபணியில் அமர்ந்து நல்ல குடிமகனாக, சுதந்திரமாக முன்னேறிய பின்பு அவர்கள் இல்லத்திலுள்ள மற்ற குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளை அளிக்க எண்ணி வருவதைப் பார்க்கும் பொழுது அவர்களின் பொறுப்புணர்ச்சியை எண்ணி நான் பெருமப்படுகிறேன். பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அவர்களால் முடிந்தவரை முயற்சிசெய்து உதவிகளை அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று ரஹீம் கூறுகிறார். சிறுவர்களை காப்பது என்னும் செயல்பாடு சமூகத்தின் முக்கியமான கடமை என்பது மிக சீக்கிரத்தில் தெரியவரும் என்றும் ரஹீம் உறுதிபடச் சொல்கிறார்.

# 18. திரு. சங்கர் மாட்டம்

## மருஉருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வைக் கட்டமைத்தல்



சமூக நலம் என்பது ஒரு வரையறைக்குட்பட்ட புரிந்துக் கொள்ள முடியாத சொற்றொடராக இருக்கிறது. தேவைப்படும் குழுவினருக்கான திட்டங்களையும் உதவிகளையும் எடுத்துச் செல்வது மிகவும் சிரமமானதாகக் கருதப்படும் காரணியாகவும் இருக்கிறது. தேவைகளையும் சவால்களையும் மிகக் குறுகிய அளவில் கவனிக்கும்படி செய்கின்றது என்று திரு.சங்கர் மாட்டம் கூறுகிறார். அவர் Sahara Social Development அமைப்பின் நிறுவனராகவும்,தலைவராகவும் தெலுங்கானா மாநிலத்தில் பணிபுரிகிறார்.

சமூக நலவாழ்வுத் திட்டத்தின் மூலம் இவர் பணிபுரிவதால் அவற்றைப் பெறுவதிலும் கொண்டுசேர்ப்பதிலும் இவருடைய தொண்டு கடையனுக்கும் கடைத்தேற்றுவதாக இருக்கிறது என்பதை Robert Charmless ன் கூற்றின் மூலம்

putting the last first (கடையனுக்கும் கடைத்தேற்றுவது) தெளிவுப்படுத்துகிறார்.

ஆந்திர மாநிலத்தில் சங்காரெட்டி மாவட்டத்தில் ஒருவிவசாயக் குடும்பத்தில் பிறந்த சங்கர் மட்டம் உயரிய நோக்கங்களும் திறன்களுக்கும் உள்ள இடைவெளியைப் பற்றி அறிந்திருக்கிறார். அரசின் சமூக நலப்பள்ளியில் ஆரம்பத்தில் படித்த பின்னர் மருத்துவ மேற்படிப்பைத் தொடர முடியாத காரணத்தால் "பிஸியோதெரபி" (Physiotherapy) பாடத்தைப் படித்து பட்டம் பெற்றிருக்கிறார்.

" பிஸியோதெரபி" மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வுக்கு ஒரு தடையாகவும் இருக்கிறது என்று உணர்ந்தார். மேலும் சிறிதும் பெரிதுமான தேவைகள் உடலளவிலும் மனதளவிலும் சமூகக் குழு அளவிலும் ஏற்படுவதையும் உணர்ந்தார். சில சம்பவங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வானது மருந்துகளாலும் பயிற்சி முறைகளாலும் குணமாக்கப்படாமல் இருக்கிறது. அதேசமயம் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளும் செயல்படுகின்றன என்பதும் தெரியவந்தது. ஆதலால் சமூகக் கட்டமைப்பின் மூலமே ஒவ்வொரு தடைகளையும் கடக்க வேண்டும் என்றும் உணர்ந்தார்.

மாற்றுத்திறனாளிகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல வசதியான முறையில் போக்குவரத்து ஏற்பாடுகள் குறைவாக இருப்பதாகக் கருதினார். பணத்தட்டுபாடு ஏழ்மை நிலை மற்றும் போக்குவரத்து வசதிக் குறைவு ஆகியவை மாற்றுத்திறனாளிகளுக்குத் தொழில்முறை சிகிச்சைகளுக்குத் தடைக்கற்களாக இருப்பதையும் அறிந்துகொண்டார். மேலும் கடைக்கோடியில் இருப்பவருக்கும் கிராமபுறங்களில்

வசிப்பவர்களுக்கும் சிகிச்சை முறை எட்டாக்கனியாக இருக்கிறது என்றும் கூறுகிறார். மருத்துவமும் மருந்துகளும் சிகிச்சைமுறைகளும் நகர்புற மருத்துவமனைகளிலேயே குறிப்பிடும்படி இருக்கிறது என்றும் கூறுகிறார். இவை எல்லாவற்றையும் பூரணமாக அறிந்து சில திட்டங்களை வகுத்தார்.

முதலாவதாக மாற்றுததிறனாளிகளின் மறுவாழ்வு முறைக்கு தாய்மார்களைத் தயார் செய்ய முடிவெடுத்து MARA என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஏனெனில் சமூகச் சூழலின் தடைகளை ஒரு தாயால் மட்டுமே எளிதில் புரிந்துகொள்ள முடியும் என்று நம்பினார்.

பொதுசுகாதாரம், மனோதத்துவம் ஆகிய இரண்டு பட்டப்படிப்புகளையும் சங்கர் கற்றுத் தேர்ந்தார். தாய்மார்கள் குடும்பத்திற்கே அச்சாணி போன்றவர்கள். எத்தனையோ தடைகளைக் கடந்து வந்தவர்கள், தாய்மார்களே என்று தீர்மானித்து தெலுங்கானாவில் 4 மாவட்டங்களில் உள்ள 2500 தாய்மார்களைக் குழுவாக அமைத்து பயிற்சிகள் மேற்கொண்டார்.

இந்த பயிற்சி பற்றிய ஆய்வு மேற்கொண்டதில் 100 தாய்மார்களில் 21 தாய்மார்கள் மட்டுமே மறுவாழ்வு மையத்தின் மூலம் பயனடைந்ததாகத் தெரிந்தது. ஒருவகையில் இந்த ஆய்வு ஏமாற்றமளித்தாலும் மேற்கொண்டு ஊக்கத்துடன் ஒவ்வொரு நாளும் பணியாற்ற வேண்டும் என்று தீர்மானித்தது. இவற்றைப் புரிந்துக்கொண்ட பின்னர் அதிகமான சவால்களையும் வினாக்களையும் எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் நான் மிகவும் ஊக்கத்துடனும் விடா முயற்சியுடனும் இந்த வேலையில் ஈடுபட்டேன் என்று சங்கர் தெரிவிக்கிறார்.

பின்னர் சஹாரா மறுவாழ்வு மையத்தில் தாய்மார்களை ஒருங்கிணைத்து சிறுவர்களைத் தயார் செய்ய ஆரம்பித்ததில் இத்திட்டமும் தோல்வியில் முடிந்தது. கலந்தாய்வு முறையும் பயிற்சிகளும் முதல் மாதத்தில் 15 நாட்களும் பின்னர் மாதத்திற்கு 2 முறைகளும் முயலும்படி திட்டமிடப்பட்டது. இந்த முறையில் தாய்மார்களுக்கு அதிகமான பொறுப்புகள் மற்றும் அவர்களுடைய மற்ற குழந்தைகளை கவனித்தல் மற்றும் அன்றாட குடும்பத்தைச் சீரமைப்பது ஆகிய வேலை பலுவால் அதிகமான வேலை சுமையை அவர்கள் ஏற்கும்படி நேரிட்டது.

இவற்றிலிருந்து நிலைமையை சரிவர புரிந்து கொண்டபின்னர் சங்கர் 2015 ஆம் ஆண்டு "ஆரம்ப மறுவாழ்வமையம்" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். திறமை வாய்ந்த குழுவினருடனும் மருத்துவர்களுடனும் கிராமங்களுக்குச் சென்று மருத்துவ முகாம்கள் நடத்திவந்தார். இவ்வாறு நடத்துவதன் மூலம் சிறுசிறு தடைகளையும் தொடர் கண்காணிப்புகள் மூலம் கடந்துவந்தார். பிரதம மந்திரியின் பாரதிய ஜன் அவ்ஸ திகேந்திரம் (Bharathiya Jan Aushadi Kendra) என்ற அமைப்பின் மூலம் மருத்துவ உதவியும் மருந்துகளும் கிராமத்திலுள்ள மக்களுக்கு எளிதில் கிடைக்கும்படி செய்தார்.

ஐஹதராபாத் ஸாங்கிரெட்டி மெஷ்பூப் நகர் ஆகிய 3 தெலுங்கானா மாவட்ட மையங்களில் திட்டமிட்டப் பயிற்சிகளை மாற்றுத் திறனாளிகளுக்கு வருடம் முழுவதும் நடத்தும்படியான திட்டத்தை மேற்கொண்டார். போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்தி தாய்மார்கள் அவர்களுடைய சிறார்களின் முன்னேற்றத்தையும் கலந்தாய்வு மூலம் வெளிப்படுத்தித் திட்டமிட்டு விரிவாக வரையறை செய்து நடைமுறைப்படுத்தினார்.

அடிப்படைத் தன்னார்வ தொண்டு நிறுவனரான சங்கர் துளியும் சோர்வடையாமல் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்காகத் திட்டமிட்டு பாடுபட்டார். இந்த சிகிச்சை முறையில் சங்கர் அயராது பாடுபட்டதால் இவர் இந்தத்துறையில் மதிப்புமிக்கத் தலைவராக விளங்கினார்.

மிகச்சரியான வினாக்களையும் கேள்விகளையும் அவர் கற்ற கல்விபடிப்பு அவருக்குள் எழுப்பியது. அதே சமயம் அந்த வினாக்களுக்கு விடையளிக்கும் விதமாக தடைக்கற்களையும் தாண்டி வர முடிந்ததாகச் சங்கர் கூறுகிறார். சரியான தருணத்தில் CSIM நிறுவனத்தின் அறிமுகம் ஏற்பட்டது. CSIM என்னை சரியாக வழிநடத்தி புதிய பொறுப்புகளையும் சவால்களையும் சந்திக்கும் தைரியத்தை மேலும் ஊக்கப்படுத்தி எனக்கு வழிகாட்டியாக இருந்ததை மிகவும் பெருமையோடு தெரிவிக்கிறார். மேலும் சங்கர் தெலுங்கானா அரசின் மாற்றுத்திறனாளி மறுவாழ்வு மையத்தின் ஆலோசனைக்குழுவில் (Member of the Advisory Board of Disability Rehabilitation to Government of Telengana) ஒரு உறுப்பினராக இருக்கிறார்.

# 19. திருமிகு. சீதா தேவி

## ஏழ்மை நிலையில் கிடைத்த அனுபவ பாடங்கள்



தற்போதைய சூழலில் அதிகமான மக்கள் தங்கள் வாழ்விற்கான ஆதாரத்தைத் தொலைத்திருக்கிறார்கள். (வாகன ஓட்டிகள், வழிகாட்டிகள் மற்றும் உணவகங்கள் என்ற அனைத்தும் வேலையில்லாமல் போனது). இந்த சூழலின் விளைவுக்கு முடிவே தென்படவில்லை என்று DARA HOUT – CEO, Phare circus - கூறுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள அனைத்து வீதிகளைப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு சமூக பொருளாதாராக் கூட்டமைப்பும் அதிகமான மாற்றங்களால், வாழ்க்கைத் தரம் பற்றிய குறிப்பைத் தீர்மானிக்கிறது என்று தெரிய வருகிறது. ” கண்ணுக்குத் தெரியாத சில காரணிகள் நகரங்கள் மற்றும் கிராமங்களில் அப்பப்பட்டமாகத் தெரிகிறது. வித்தியாசமான பார்வை (முன்னோக்கு) மூலம் நுண்மேலாண்மை பற்றிய தெளிவும் இங்கே தெரிகிறது.

கடும் போட்டிகள் நிலவுவதால் இருப்பதால் உயர்ந்ததை சிலர் தங்களுக்கானதாக் கொள்வதால் ஏற்றத்தாழ்வுகள் உலகளாவி இருப்பதை உணர முடிகிறது என்று சீதாதேவி கூறுகிறார்.

சென்னையில் Street Vision Social Charitable Trust நிறுவனர் சீதாதேவி தன்னளவில் வீதியோரச் சிறுமியாக வளர்ந்து, அந்த வாழ்க்கைமுறை பற்றிய எல்லாவித சிரமங்களையும் அனுபவித்திருக்கிறார். அவருடைய தந்தையார் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் சுமை தூக்குபவராகவும், தாயார் 6 சிறுகுழந்தைகளுடன் வீட்டுவேலைகள் செய்து சம்பாதிக்கும் நிலைமையில் இருந்து வந்தனர். தந்தை கொண்டுவரும் சம்பாதியத்தில் ஒருநாளில் ஒருவேளை மட்டுமே உணவு கிடைத்து அதை எதிர்பார்த்தே வாழ்ந்திருக்கின்றார். காலைச் சிற்றுண்டி என்பதே அரிது, கல்வி கற்பது என்பதை நினைத்துப் பார்க்க முடியாத கனவு, எதிர்காலம் பற்றிய இருண்ட நிலை என்று சீதா தேவி நினைவு கூறுகிறார். இந்த கடினமான சூழ்நிலையில் வளர்ந்தால் தான்பட்ட துன்பம் இனிவரும் தலைமுறை வீதியோரச் சிறார்களுக்கு நேரக் கூடாது என்று உறுதி கொண்டார்.

சில நன்கொடையாளர்கள் தன்னார்வலர்கள் மூலம் சீதா தேவி பட்டப்படிப்பு படித்து முடித்தார். கல்வி பயிலும் பொழுதே வீதியோரச் சிறுவர்களை ஒருங்கிணைத்து விளையாட்டுகளில் ஈடுபடுத்தி நல்வழி காட்டி வந்தார். அவர்களை கல்வி கற்பதற்கு உண்டான வழிமுறைகளைக் கைவிடாமல் மெரினா கடற்கரைஅருகிலுள்ள கண்ணகி சிலைக்குப் பக்கம் சிறார்களைச் சிறுகுழுக்களாகப் பிரித்து அடிப்படை நன்னடத்தைகளை எடுத்துக் கூறி அரசுப் பள்ளிகளில் அவர்களைச் சேர்த்து விடா முயற்சியுடன்

கிட்டத்தட்ட 2000 சிறார்களைக் கல்வி கற்க வைத்தார். இடைப்பட்டு நின்றுவிடாமல் கல்வியில் மேலும் தொடர்ந்து ஈடுபட பக்க பலமாகவும் இருந்தார்.

பள்ளியிலிருந்து இடையில் நின்று மறுபடி வீதியோரம் சென்று சுதந்திரமாகத் திரிய சிறார்கள் விரும்பினாலும் கல்வி கற்று முன்னேறுவதுதான் அவர்களுடைய வாழ்வு மேம்பட உதவியாக இருக்கும் என்று சீதாதேவி கருதினார். அவர்களுடைய அடிப்படை உரிமைகள் பறிபோகாமல் இருக்க கல்வி கற்றலே சிறந்தது என்றும் கூறுகிறார்.

2002 ஆம் ஆண்டு தன்னொடு ஒத்த மனமுள்ள குழுவினராலும் சில தொண்டு நிறுவனங்களின் உதவிகளாலும் சொந்தமாக Street Vision Social Charitable Trust என்ற அமைப்பை நிறுவினார். தனக்கு ஏற்பட்ட முன் அனுபவம் மூலம் இந்த அமைப்பில் குடிசைவாழ் சிறார்கள் வீதியோரச் சிறார்கள் ஆகியோருக்கு மாலை நேர இலவச வகுப்புகள் எடுத்து 8 குடிசைப் பகுதிகளிலுள்ள 3000 சிறார்களை உற்சாகப்படுத்தி கல்வி கற்கும்படி செய்தார்.

சென்னையில் உள்ள 42610 தெருக்களில் உள்ள சிறார்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்ததில் சில குழுவினருக்கு வித்தியாசமான தனிப்பட்ட தேவைகளும் இருந்தது தெரியவந்தது. கல்வி கற்பது மட்டுமல்ல சமூக ஏற்றதாழ்வுகள், குடிசைப் பகுதிகளில் வாழும் சிறார்களின் வாழ்க்கை முறைகள் நிதர்சனமாகத் தெரிந்தன. ஆதலால் கல்வி அளிப்பதைவிட அதிகமான கவனத்தை மற்றைய விஷயங்களில் செலுத்த முடிவுசெய்ய நேர்ந்தது.

உதாரணமாக ஜிப்ஸி குழுவினரின் குழந்தைகள் எச்.ஐ.வி (HIV) நோயாலும் பிச்சை எடுக்கும் சிறார்கள், புற்றுநோயாலும் அவதிப்பட்டு கொண்டிருந்ததைக் காண

முடிந்தது. அவர்களுக்கும் உதவிகள் தேவைப்பட்டன. எப்போதோ ஒருமுறை அவர்களுக்கு அளிக்கும் அன்னதானத்தினால் அவர்கள் உடலும், மனமும் வளர்ச்சி அடைவதில்லை. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக உறுதியான செயல்திட்டம் அளிப்பதற்கான தீர்மானங்களை நாங்கள் எடுக்க நேரிட்டது. அதற்காக நாங்கள் சென்னைக்கு அருகில் ரெட்ஹில்ஸ் (Redhills) எனப்படும் இடத்தில் கானகுளம் என்னும் கிராமத்தில் 2 ஜிப்ஸி குழுவினரின் குடியிருப்பை தத்தெடுத்து அவர்களுக்கு வசிப்பிடம், கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை அளிக்கத் தீர்மானித்து செயல்படுத்தி வந்தோம் என்று சீதா தேவி கூறினார். மேலும் 8 குடிசைப் பகுதிகளிலுள்ள தொழுநோயாளிகள், திருநங்கைகள், கைவிடப்பட்ட முதியோர் மற்றும் சிறார்களை அணுகி அரவணைத்து, அவர்களைத் தனிப்பட்ட முறையில் கவனித்து உணவு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தோம். இதன் மூலம் அவர்களைப் பற்றிய எண்ணங்களில் மாற்றங்களை உண்டாக்கி வாழும் முறையில் மதிப்புமிக்க வளமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்று நம்பினோம்.

சீதா தேவி குழந்தைகளின் மன உணர்வுகள் பற்றிய (child psychology) படிப்பை முடித்து முன்பை விட ஊக்கத்துடன் பணியாற்ற ஆரம்பித்தார். மேலும் சீதா தேவி நானும் வீதியோரத்தில் வசிக்கும் குடும்பப் பின்னணியிலிருந்து வந்ததால் அச்சிறார்களிகன் பழக்கவழக்கங்கள் மற்றும் எண்ணங்கள் பற்றி நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. மற்றவர்களின் பார்வையில் அச்சிறார்களைப் பற்றிய தாழ்வான அபிபிராயங்கள் சமூக முத்திரைகள் ஆகியவற்றிலிருந்து விடுபட வேண்டும் மற்றும் அவர்களின் எதிர்காலம் விடிவெள்ளியாக இருக்கவேண்டும் என்றும்

விரும்புவதாக் கூறினார். பெண்களுக்கு கைவேலைகளும் திறன் பயிற்சிகளும் அதிகமாக நடத்தி வந்தார்.

தங்களது முயற்சிகளாலும் அனுபவங்களாலும் Street Vision அமைப்பு முன்பைவிட வேகமாக வளர்ந்து ஆந்திர மாநிலத்திலுள்ள இருக்கம் என்னும் தீவிலுள்ள வாழ்க்கைத் தரத்தில் தாழ்வுற்ற குடும்பங்களைச் சந்தித்து 300 பழங்குடியின குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு உடை அளித்து விழிப்புணர்வையும் Street Vision இயக்கத்தின் மூலம் ஏற்படுத்தினார்.

தற்செயலாக CSIM அமைப்பின் அறிமுகம் கிடைத்ததும் அவருடைய பணிகளில் மேலும் தீவிரம் காட்ட முடிந்தது. அவருடைய வாழ்வில் CSIM அமைப்பு ஒரு ஆச்சரியகரமான மாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறுகிறார். ஆதலால் நான் திட்டமிட்ட வழிமுறைகளை வகுத்து பயனாளிகளுடான தொடர்பை வலுப்படுத்தி அவர்களுக்கு மிக நெருக்கமாக இருப்பதை உணர்ந்தேன். பெண்களின் சமூக வலிமையை உணர்ந்து அந்த குழுக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியதில் வலிமை மிக்க சமூகத்தைக் காண முடிந்தது. CSIM அமைப்பில் பங்கு கொண்டதனால் சமுதாயத்தின் ஒருங்கிணைந்த வலிமையை அனைத்துக் கோணங்களிலிருந்தும் பார்க்க முடிந்தது. கொரானா தொற்றுக் காலத்தில் களப்பணியின் வலிமை அதிகமாகக் காணப்பட்டது.

120 தொண்டு நிறுவனங்களில், நிவாரணப் பணிகள் நடந்து வந்தன. Street Vision அமைப்பும் சென்னை மாநகராட்சியின் உதவியுடன் அந்தப்பணியில் முழு மூச்சுடன் செயல்பட்டது. குடிசைப் பகுதி பயனாளிகளுக்கான செய்த களப்பணி ஆற்றியதற்காக 2016 ல் சென்னை சமூக

நலப்பள்ளி அவருக்கு சிறந்த பெண்மணி (வடசென்னை) விருது வழங்கியது. 2019 ஆண்டு தமிழ்நாட்டு ஆளுநரால் இவருக்கு வழங்கப்பட்டது. இந்த களப்பணிக்காக சீதாதேவிக்கு அன்பும் அமைதி விருது Care India Netwrok மூலம் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. 2019 ஆண்டு இளம் சாதனையாளருக்கான காந்தி விருது தமிழக ஆளுநரால் வழங்கப்பட்டது. அனைத்துத் தடைகளையும் வெற்றிக்கரமாகக் கடந்து வந்து, தன்னுடைய லட்சியத்திலும் கொள்கையிலும் முன்னேறியதை மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகிறார்.

சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகள் மட்டுமல்ல மற்ற திக்கற்ற முதியோர் தெருவோரச் சிறார்கள், நாடோடிகள், பழங்குடியினர் ஆகியோருக்கு அடைக்கலமாக தங்குமிடம் (இல்லம்) அமைக்கவும் எண்ணுகிறார்.

Street Vision சிறார்களுக்கு வாழ்வளிக்கும் பணியுடன் நிறுத்திவிடாமல் அவர்களின் இறப்பிலும் கௌரவமான நிகழ்வுடன் மதிப்புமிக்கதாக இருக்க வேண்டும் என்று விரும்பியது. யாரும் இல்லாமல் இறப்பது என்பது இவர்களின் வாழ்க்கையில் இடம்பெறக் கூடாது என்ற எண்ணத்தில் தங்குவதற்கு இல்லங்கள் அமைத்து சமூக மற்றும் மனநலம் கருணை சார்ந்த சூழலுடன் அவர்களைக் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியுடன் சிறுவர் இல்லம் திறக்கப்போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

# 20. திருமிகு. செந்தமிழ் செல்வி

## சிறப்பு கவனம் செலுத்தி நட்புடன் வளர்க்கப்படும் குழந்தைகளின் இல்லம்



சமுதாயத்தில் பெற்றோர்களின் பொறுப்பும், தீவிரமான கவனிப்பும் குழந்தைகள் நல்ல முறையில் வளர்த்தெடுத்தலை கட்டமைக்கின்றது. என்னுடைய இரண்டு (special Children) மாற்றுத்திறனாளி குழந்தைகளை வளர்க்கும் பொறுப்புள்ள பெற்றோராக இருக்கவேண்டி நேர்ந்தது என்று பி.செந்தமிழ்செல்வி கூறுகிறார். இவர் குமரன் சிறப்புபள்ளி - எண்ணூர் அமைப்பின் நிறுவன முதல்வருமாக இருக்கிறார்.

சிறப்புகவனம் செலுத்தவேண்டிய குழந்தைகளுக்காக தேவையான உதவிகளைச் செய்வதில் மிகவும் பொறுமையும் விடாமுயற்சியும், உறுதியாகவும், இருந்து அவர்களுடைய வளர்ப்பில் அக்கறை கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் அக்குழந்தைகளின் தேவைகளைப் புரிந்துகொண்டு அக்கறையுடன் தனிப்பட்டகவனம் செலுத்தி வந்தார்.

செல்வியின் முதல் பையனுக்கு (Autistic) மன இறுக்கம் மற்றும் இரண்டாவது மகனுக்கு (General palsy) பெருமூளைவாதம் ஏற்பட்டு ஆரம்பத்தில் இந்த இரண்டு விதமான நோய்களை ஏதாவது ஒரு வழிமுறையில் சிகிச்சை செய்துவிடலாம் என்று எண்ணியிருந்தார்.

இரண்டாவது மகனுக்கு முறையான சிகிச்சை நடக்கும் சமயம் முதல் மகனுக்கு (Autism) நோய் பற்றிய தெளிவும் ஏற்பட்டது. இப்பொழுதுதான் மேற்கண்ட நோய் பற்றிய முழு விவரத்தையும் அவர் அறிந்துக் கொண்டதாகக் கூறினார். சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது போன்ற சிறார்களை வளர்ப்பதில் ஏகப்பட்ட சிரமங்களைப் பெற்றோர்கள் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகக் கூறுகிறார்.

தனிக்கவனம் தேவைப்படும் சிறார்களுக்கு அவர்கள் வீடுகளுக்கு அருகிலேயே சென்று செய்முறைப் பயிற்சிகளை அளிக்க வேண்டிய தேவை அவசியம் என்றும் கருதினார். அதனால் மற்ற குழந்தைகளுடன் பழகும் தன்மையும் ஏற்படும் என்றும் எண்ணினார். இதில் சிறப்பாகப் பயிற்சி எடுத்து Special Education (சிறப்புபயிற்சியாளர்) ஆக முடிவெடுத்து Kumaran Special School என்னும் பகல் நேர மையத்தை (Day care centre) அமைப்பை 2002 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் சிறார்களுக்காக ஆரம்பித்தார். 5 குழந்தைகளுடன் ஆரம்பித்த இந்த மையத்தில் 65 சிறார்கள் தற்சமயம் இருப்பதாகக் கூறுகிறார்.

அனைத்து வயதிலும் உள்ள அச்சிறார்களை பொதுவான சமூகச் சூழலில் கலந்து பழகும்படியான பயிற்சிமுறைகளும் மற்றும் கலை கைத்திறன் ஆகியவற்றில் செய்முறைப் பயிற்சியும் இந்த அமைப்பு மூலம் கற்றுக் கொடுக்கப்பட்டப்படுகிறது. முதலாவதாக அவர்களின் வயது வாரியான முன்னேற்றத்தைக் கண்காணித்து அவர்களுடைய திறமைக்கேற்ற செயல்களைச் சிறிது சிறிதாகக் கற்றுக் கொடுத்து வருகிறிது. ஒவ்வொரு சிறுவருக்கும் வித்தியாசமான திறமை அமைந்திருப்பதால் தியானம் மூச்சுப் பயிற்சி யோகாசனம், இசைமுறை, மற்றவர்களுடன் பழகுதல், உடல்நலம் பேணுதல் மற்றும் செய்முறைபயிற்சிகள் என்று வெவ்வேறான அணுகுமுறையுடன் அச்சிறார்களுக்கு தனிப்பட்டமுறையில் கற்றுக் கொடுத்து ஊக்குவிக்கிறது. இப்பயிற்சி முறைகளைக் கவனித்து கற்றுக் கொடுக்க உறுதியான மேற்பார்வையுடன் கூடிய வழிமுறை தேவைப்படுகிறது.

இதற்காக நாங்கள், அவர்களுடைய சமூகச் சூழலையும் பெற்றோர்களையும் இணைத்து திட்டங்களை செயல்படுத்தி, அவர்களை வெளியுலக வாழ்க்கையைப் பற்றி அனுபவ பூர்வமாக உணரவேண்டும். இதுவரை 225 சிறார்களுக்கான பயிற்சிகளை குமரன் பள்ளி நடைமுறைப்படுதியிருக்கிறது. மேலும் அவர்களை விட்டிலிருந்து அழைத்துவந்து பயிற்சிகள் கொடுத்து முடித்த பின்னர் மறுபடி அவர்களுடைய வீட்டிலேயே கொண்டு சேர்ப்பதையும் கடமையாகச் செய்து அவர்களுடைய பெற்றோர்களின் சிரமத்தைக் குறைக்கும் உதவியையும் இந்த அமைப்பு செய்து வருகிறது. மேலும் அறுவை சிகிச்சை தேவைப்படும் பொழுது, கூடவே இருந்து

கண்காணித்து, தேவையான சக்கர நாற்காலி மற்றும் உபகரணங்கள் கருவிகைள் அளிக்கவும் உதவுகிறது.

இந்தக் குழந்தைகளின் பெற்றோர்களால் தான், தேவைகளையும், நடைமுறைப் பழக்கங்களையும் புரிந்துகொண்டு செயலாற்றமுடிகிறது. குமரன் பள்ளி அமைப்பின் வலிமையே பெற்றோர்கள் தான். அவர்கள் தெரிவிக்கும் அனுபவங்கள் மூலம் கிடைக்கும் தரவுகள், தகவல்கள் ஆகியவை முக்கியமாகக் கருதப்படுகிறது. கூட்டு முயற்சியால், இச்சிறுவர்கள் பயிற்சிகளில் ஈடுபட்டு மற்றவர்களுடன் தொடர்புகொள்ளமுடிகிறது.

CSIM அமைப்பு என்னுடைய திறமைகளை மேலும் ஊக்குவித்து, மனநலம் குன்றிய சிறார்களை சீர்படுத்தி, செம்மையாக்க உதவிகரமாக இருந்தது என்பது உண்மை. நம் சமுதாயத்தில் உள்ள மக்களுக்கு மிகப் பெரிய கடமை இருக்கிறது. ஆரம்பம் முதல் சமூகச் சூழலையும் இந்தச் சிறார்களையும் ஒருங்கிணைத்து, பணி செய்வதால், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு செயலாற்ற முடிகிறது. CSIM அமைப்பு இந்த முக்கியமான மேற்கூறிய செயலைச் செய்வதற்கு உந்துதலாக இருந்து எனக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்தியது என்று செல்வி கூறுகிறார்.

சமூகத்திலுள்ளவர்கள், இந்தச் சிறார்களின் முயற்சிகளைப் புரிந்துகொண்டு முன்னேறுவரைக் கண்டு கொண்டு தெளிவு பெற்றால், சமூக ஒருங்கிணைப்பு இயற்கையாகவே அமைந்துவிடும். சொல்வது சுலபம், விடா முயற்சியுடன் ஆண்டுக் கணக்கில் செயல்பட்டால் மட்டுமே வெற்றி கிட்டும். CSIM அமைப்பு மேலே குறிப்பிட்ட,தீர்க்கமான எண்ணத்தை எனக்குள் ஏற்படுத்தியது. வழிகாட்டியாகவும் இருந்தது. அதனால்தான் இப்பணியில் முன்னேறவும் முடிந்தது.

மெழுகுவர்த்திகள் செய்வது பாய்முடைதல், சிறிய உபகரணங்களைக் கைத்திறனுடன் செய்வது, சிறிய விளக்குகள் மற்றும் பினாயில் தயாரித்தல், ஊதுபத்திகளை அட்டைப் பெட்டியில் இடுவது, ஆகிய சிறு கைவேலைகளை இந்த அமைப்பின் மூலம் கற்றுத் தரமுடிந்தது. பேனா தயாரிக்கும் தொழிலையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்துவருகிறது. சரியான தொழில் நுட்பத்திற்காக காத்திருப்பதாகக் கூறுகிறார் செல்வி.

நிதி மற்றும் பணம் சேமிப்பு பற்றிய அறிவு, அவர்களுக்கு சிறிது தெரிந்தால் அவர்களால் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும், இருக்க முடியும் என்ற உறுதியாக நம்புகிறார். ஒவ்வொரு முன்னேற்றமடைந்த சிறுவனிடமும் நான் என் மற்றொரு மகனைப் பார்க்கிறேன். இதனால் எனக்கு மேலும் ஊக்கமும், ஆர்வமும் உண்டாகிறது.. எங்களுடைய அமைப்பின் மூலம் நாங்கள் செய்யும் பணிகள் எங்களை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த நம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தி, என்னை நல்ல முடிவை நோக்கி பயணப்பட வைத்ததில் CSIM அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது என்று சொல்லி மனம் திறந்து கூறுகிறார்.

# 21. திரு. செந்தில்

## களங்கம் - ஒரு பலதரப்பட்ட நிகழ்வு



சமூக சேவை என்பது பலருக்கு புதிரானது. மனிதருக்கு நேரிடும் பிரச்சனைகளை ஆர்வத்துடன் களைய முற்படும் பொழுது தொழில் முறை பயிற்சியும் வளங்களை மேற்பார்வையிடும் தேவைகளும் அதிகரிப்பதை உணர முடிகிறது. உதாரணத்திற்கு உடல்நிலையைக் கருத்தில் கொண்டால் சரியான சமயத்தில் சரியான திட்டமிடலும், வழிமுறைகளும் சமூப்பணியாளர்களால் மட்டுமே தேவைப்படுபவர்களுக்கு அளிக்க முடியும். அர்ப்பணிப்புடன் கூடிய மனிதரால் மட்டுமே தேவைப்படும் நோயாளிகளுக்கு உதவ முடியும். இந்த இருவிதமான சேவைகளையும் ஒன்றிணைத்து கட்டமைத்தால் மட்டுமே எங்களால் அவர்களின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர முடிந்தது என்று Child Trust ன் நிறுவனரான திரு.செந்தில் உறுதியாகக் கூறுகிறார்.

இளைய தலைமுறையினரும் சமூக மேம்பாட்டுக்கான முயற்சிகளை பொது நலத்திற்காக செயல்படுத்த

ஆர்வத்துடன் இருந்தனர். இதனால் சமூக மேம்பாட்டுக்-கான பணிகளில் இயற்கையாகவே எனக்கு ஊக்கமும் ஆர்வமும் உண்டாயிற்று என்று மேலும் கூறுகிறார்.

சென்னையில் MSW பட்டம் பெற்ற பின்பு பணியில் சேரும் எண்ணத்தில் இருந்தார். நண்பர்களின் தொடர்பால் இவருக்கு மனிதவளங்களைப் பற்றிய சிந்தனையில் சுவாரஸ்யமும் ஆர்வமும் ஏற்பட்டன. சென்னை மாநகராட்சியில் எச்ஐவி- (HIV) எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநலன் பற்றிய கருத்துக்களை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டதன் மூலம் நோயினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் மற்றும் பெற்றோர்களின் தேவைகள் வெளிப்பட்டன.

20 வருடங்களுக்கு முன்பு இந்த நோய்வாய்ப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகள் களங்கப்படுத்துவதால் ஏற்படும் சிரமங்கள் வேறு மாதிரி இருந்த நிலைமை தற்சமயம் மாறியிருக்கிறது. எச்.ஐ.வி எயிட்ஸ் பாதித்த பெற்றோர்களின் குழந்தை ஒதுக்கப்படுவது எதனால்? அந்த குழந்தையை ஒதுக்காமல் காரணங்களைத் தேடி அதற்குத் தீர்வு காணவேண்டும். நம் சமூகத்தில் இவ்வாறு குழந்தைகளை ஒதுக்கிவைப்பது சகஜமான நிகழ்வாக இருக்கிறது என்று செந்தில் வியப்புடன் கூறுகிறார்.

இரண்டு வருடங்கள் பணிகளில் ஈடுபட்ட பின்னர் செந்தில் இந்த வகைக் குழந்தைகளுக்கான மையத்தில் (Residential Home for Children) அவர்களின் நலனுக்கான பணியில் சேர்ந்தார். இந்த மையம் அவருக்கு இத்தகைய குழந்தைகளுக்கான அணுமுறைகளை கையாள்வதற்குத் தயார்படுத்தியது. குடும்பத்தினரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சிறுவர்கள் மன ரீதியான பாதிப்பு அடைவதால் அந்த

நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் பணி மிகவும் சவால் நிறைந்தது. அதே சமயம் அந்த பணியில் ஈடுபடுவது தான் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஒரு குழந்தை துன்பப்படுவது மற்ற குழந்தைகளையும் அந்த நிலைமைக்குத் தள்ளப்படுகின்றது. அதேசமயம் அக்குழந்தைகள் ஒருவருக்கொருவர் உதவியாகவும் துணையாகவும் இருக்கும் நிலைமையும் தொடர்கிறது. மையத்தின் பொறுப்பு இந்த உணர்ச்சிகரமான சூழலைக் கையாண்டு மேற்பார்வையிடுவதில் அதிகமாகச் செயல்பட நேரிடுகிறது. மையம் அவர்களுக்கானது என்று விவரிக்கிறார்.

கைவிடப்பட்ட சிறுவர்களின் தேவைகளைக் கண்டுபிடித்து அதற்கு ஏற்ற மாதிரியான புதுமையான வழிமுறைகளையும் திட்டங்களையும் செயல்படுத்த எண்ணினார். மேலும் செந்தில் Family planning Association of India என்னும் அமைப்பில் அடிப்படையான பணியில் ஈடுபட்டு இருந்ததால் வெளிமாநிலங்களிலிருந்து வந்திருக்கும் கூலித் தொழிலாளர்களுக்கு எச்ஐவி எயிட்ஸ் பற்றிய அறிவை புகட்டி வந்தார்.

சென்னைக்கு வந்த பின்னர் CSIM அமைப்பைப் பற்றி கேள்விப்பட்டு அவர்கள் செயல்படுத்தும் பயிற்சி வகுப்பில் சேரும்படி நேரிட்டது. முழு நேரப் பணியில் ஈடுபட்டு வருவதற்கு முன்னர் CSIM அமைப்பு மூலம் அதிகமான சமூக ஆர்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனம் சார்ந்தவர்களுடன் கலந்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. எல்லோருடைய எண்ணங்களையும் லட்சியங்களையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. நான் எதை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதையும் எனக்கு உணர்த்தியது.

பலவிதமான பார்வைகள் அணுகுமுறைகள் மூலம் ஒரு சூழலைக் கையாளவேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஒரு சமூகப் பணியாளருக்கு மற்றவர்களுக்கு ஒத்துபோவதால் அதை ஏற்றுக் கொண்டு துரிதமாக திட்டமிட்டு செயல்படுவதுதான் சிறந்தது என்று தெளிவு ஏற்பட்டது.

நாம் எல்லோரும் இந்த நோயைப்பற்றிய பலதரப்பட்டநேர்மறையான கருத்துக்களையும் களங்கம் ஏற்படுத்தும் துன்பங்களையும் கண்டு பழகிவிட்டோம். ஏச்.ஐ.வி எயிட்ஸ் நோயின் மீது ஏற்படுத்தப்படும் களங்கத்தால் அதைத் தீர்க்கும் வழிமுறைகளையும் திட்டங்களையும் வகுக்க முடிகிறது என்று செந்தில் கருதுகிறார். அதே களங்கம் (Stigma) மூலம் தான் விழிப்புணர்வையும் அதற்குண்டான தீர்வுகளையும் செயல்படுத்த முடிகிறது. ஏச்.ஐ.வி எயிட்ஸ் பாதித்தவர்களின் சிரமங்கள் மற்றும் அவர்களுக்கான தேவைகளைப் புரிந்துக் கொள்ள இம்மாதிரி அவர்களை சமூகம் ஒதுக்கிய செயல் தான் எங்களுக்கு அவர்களுக்கான பணிகளையும் உதவிகளையும் அதிகமாக செயல்பட காரணமாக இருந்தது. மேலும் குறிப்பிட்ட மாற்றங்களைச் செயல்படுத்தவும் முடிந்தது. கவனித்து செயல்படுவதுதான் சரியான வழி என்று புன்னகையுடன் செந்தில் தெரிவிக்கிறார்.

CSIM அமைப்பு மட்டுமே இந்த நேர்மறையான கருத்தை எனக்குள் ஏற்படுத்தியது. ஒவ்வொரு தனிமனிதனின் தனிப்பட்ட முயற்சியும் விவாதிக்கப்பட்டு சரியான தருணத்தில் செயல்பட உதவியாக CSIM அமைப்பின் மூலமாகத்தான் தெரிய வந்தது. ஒரு நிகழ்வையும் சம்பவத்தையும் காரண காரியத்துடன் ஆராய்ந்து பணிகளில் ஈடுபடுவதால் முன்னேறிச் செல்லமுடிகிறது. தீவிரமாக சிந்திப்பதின் மூலமே வேண்டிய மாற்றங்களைக்

கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தையும் CSIM அமைப்பு ஏற்படுத்தியது.

செந்தில் CHILD TRUST என்னும் எச்.ஐ.வி எயிட்ஸ் பாதித்த பெற்றோர்களுக்கான அறக்கட்டளையை 2005 ஆம் வருடம் நிறுவினார். செந்தில் தன்னுடைய அனுபவங்கள் மூலம் சின்னச் சின்ன விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி சிறுவர்கள் தங்களுடைய மாற்றத்துடன் கூடிய இருப்பை உணரச் செய்தார். ஆரம்பத்தில் 3 சிறுவர்களுடன் இல்லத்தை நிறுவி தற்சமயம் 22 சிறுவர்களுக்கான இல்லமாக மேம்படுத்தினார்.

35 சிறுவர்கள் பள்ளிப்படிப்பை முடித்து தற்சமயம் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒவ்வொரு சிறுவனிடமும் வெற்றிகரமான முன்னேற்றத்திற்கு ஏற்ற திறமைகள் இருக்கின்றன என்று கூறுகிறார். அவர்களுக்கு வாய்ப்பும் இடமும் கிடைப்பதுதான் முக்கியம் என்றும் கூறுகிறார். சிறுவர்களுக்கான இல்லத்தைத் தவிர CHILD TRUST தற்சமயம் எச்.ஐ.வி பாதித்த பெற்றோர்களையும் ஒருங்கிணைக்க செயல்பட தீர்மானித்திருக்கிறது. 2005 ஆம் ஆண்டு இந்த செயல்பாட்டுத் திட்டத்தை ஆரம்பித்து தற்சமயம் 600 குடும்பத்தினரையும் எச்.ஐ.வி எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வைப் புரிய வைத்திருக்கிறது. இந்த செயலின் மூலமாக சென்னையை அடுத்த திருவள்ளூர் மாவட்டத்தில் 2000 குடும்பத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பெண் குழந்தைகளின் துன்பம் சார்ந்த நிலைமை தெரியவந்தது. இந்த நிலைமையை சரி செய்வதற்காக ஒரு பெண் குழந்தைக்கு பாதுகாப்பு கொடுத்து காப்பது என்ற திட்டத்தை ஆரம்பித்து தற்சமயம் 128 பெண் குழந்தைகள் பயன்பெற்றிருக்கின்றனர் என்று விவரிக்கிறார்.

ஒரு சிறுவனுக்கு ஒரு நன்கொடையாளர் என்ற திட்டத்தால் அச்சிறுவனின் தேவைகள் அவனுக்கான இலட்சியங்கள் ஆகியவற்றில் செந்தில் குழுவினர் செயல்படத் தொடங்கினர். சிறுவர்களுக்கு வழிகாட்டுதல் அவர்களுடைய கைவேலைத் திறனை வளர்த்தல் அச்சிறுவர்களை எதிர்கால வாழ்வு ஆதாரத்துக்கான திட்டமிடுதல் ஆகியவற்றில் வெற்றிகரமாக ஈடுபடுத்தி பெண் குழந்தைகளுக்கான திறன் பயிற்சி மையத்தையும் ஏற்படுத்தியது.

செந்தில் மேலும் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த அனுபவம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் மூலம் கிடைத்த பயிற்சி ஆகியவை இந்தப் பணியில் மேலும் ஆர்வத்துடன் உழைக்க விரும்பினேன் என்றும் குறிப்பிடுகிறார். செயல்பாடுகளில் சின்ன சின்ன தடைகள் இருக்கலாம். உண்மையான அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிகளைச் செய்தால் வெற்றி நிச்சயம் என்றும் கூறுகிறார்.

கல்வித் தரத்தில் ஏற்றத் தாழ்வுகள், விழிப்புணர்வு இல்லாமை பாரபட்சமான போக்கு ஆகியவை நம் நாட்டில் இருந்தாலும் அதிலிருந்து நன்கு மீண்டுவருவதும் காணப்படுகிறது. மனிதவளத்தில் பயிற்சி பெற்ற செந்தில் தான் ஏற்றுக் கொண்ட பணியிலேயே முழு கவனத்தையும் செலுத்தி பணிகளைச் செய்ததில் திருப்திகரமாக இருப்பதாகக் கூறுகிறார்.

தற்போது 44 வயதைக் கடக்கும் செந்தில் தன்னுடைய லட்சியமும் நோக்கமும் சரியான தருணத்தில் சரியான முறையில் எச்.ஐ.வி பாதித்த சிறுவர்களை முன்னேற்றும் முயற்சியில் ஈடுபட்டதை மிகவும் திருப்திகரமாக

உணர்வதாகவும் கூறுகிறார். இந்த சிறார்கள் கல்வியில் முன்னேறி வாழ்வாதாரமும் கிடைக்கப் பெற்று தங்களுடைய சுய அடையாளத்துடனும் தன்னம்பிக்கையுடனும் இருப்பதை எண்ணி நானும் ஒருவகையில் இதற்கு உதவியாக இருந்திருக்கிறேன் என்று பெருமிதம் அடைகிறேன் என உற்சாகமாகக் குறிப்பிடுகிறார்.

# 22. திருமிகு. விஜி

## ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் துஷ்பிரயோகம்



சமூகத்தில் பாலினம் பற்றிய புரிதல் சரிவர ஏற்படவில்லை. சமத்துவத்திற்கும் தனி தன்மைக்கும் இடையில் பாலினம் பற்றிய குறியீடுகள் புதிரான அடையாளமாக இருக்கிறது. இந்த குறிப்பு விவரங்கள் எவ்வளவு முக்கியமானவை? என்னை போன்ற திருநங்கைகளுக்கு ஏற்பட்ட சமூகத்தடைகள் எண்ணிலடங்காதவை. விழிப்புணர்வு இல்லாததால் எங்கள் நிலைமைக்கான உண்மை தன்மை பற்றிய புரிதல் தெரியாமல் போயிற்று. விழிப்புணர்வு மட்டும் தான் ஒரே வழிமுறை. விழிப்புணர்வுடன் கூடிய புரிதல் தான் நம்மை பகுத்தறிவுடன் கூடிய முடிவெடுக்க வைக்கும். சமூகத்தில் எங்களைத் தாக்கும் தவறானக் கருத்துகளையும் தூற்றுதல்களையும் ஏற்றுக்கொள்வதுதான் எங்கள் வாழ்வாகப் போனது என்று விஜி கூறுகிறார். விஜி தூத்துக்குடி ஊரிலுள்ள அன்பு அறகட்டளை என்றதொண்டு நிறுவனத்தின் நிறுவனர் ஆவார்.

மேலும் அவர் கூறுவது தான் ஒரு வித்தியாசமான பாலினத்தை சார்ந்திருப்பதாக அந்த நிலைப் பற்றிய தெளிவு இல்லாமல் அந்த நிலையில் இருப்பதை விரும்பாமல் இருக்கும் ஒரு திருநங்கை என்ன முடிவு எடுத்திருப்பார்? வாழ்க்கையில் பெரிய ஏமாற்றம் அடைந்ததை எண்ணி சமூகத்தை விட்டு ஓடிப்போகலாமா? என்ற முடிவு எடுக்கலாம்.

ஆனால் என் தந்தை என் நிலையைப்பற்றி புரிந்துக் கொண்டு விழிப்புணர்வுடன் இருந்து பாலினம் ஒரு முத்திரை இல்லை என்பதைப் புரிய வைத்தார். என்னுடைய தந்தை சமூகத்தில் உருவங்கள் பரிணாம மாற்றங்கள் அடைவது சகஜம், அதேசமயம் சுயமாக முடிவெடுக்கும் திறமையும் அதை நடைமுறைப்படுத்த எத்தனை தடைகள் இருந்தாலும், விடாமுயற்சியுடன் அதைக் கடந்து செல்வது தான் ஓரே இலக்கு என்றும் கூறி என்னை ஊக்கப்படுத்தினார்.

முரம்பன் என்னும் சிறிய எளிய கிராமத்தின் பிண்ணியில் வளர்ந்த விஜி அவருடைய உருவமாற்றங்கள் மூலம் மிகுந்த கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளானார். மேலும் அவர் என்னடைய பெற்றோர் மிகவும் வருத்தப்பட்டனர். உறவினர்களும் ஒதுங்கிவிட்டனர். சில சமயம் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணமும் தோன்றலாயிற்று. ஆனால் என்னடைய தந்தை என்பக்கம் கூடவே இருந்து என்னை படிப்பில் சிறந்து விளங்கும்படி செய்தார். இத்தனை சிரமங்களுக்கிடையே எனக்கு அடிப்படைக் கல்வி அளித்து என்னை சுய மரியாதையுடன் ஆளாக்கியதில் அவருக்கு பெரும் பங்கு உண்டு. என்னிடம் அவர் காட்டிய அன்பு தான் எனது தற்போதைய வாழ்வுக்கு அஸ்திவாரமாக அமைந்தது என்ற விஜி கூறுகிறார்.

ஆங்கில இலக்கியத்தில் பட்டபடிப்பு முடித்த பின்னர் விஜி சென்னைக்கு வந்து ஏதாவது பணியில் அமர்ந்து வேலை செய்ய விரும்பி வாய்ப்புகளைத் தேடினார். போகிற இடங்களில் அதிகமான கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானார். சில நண்பர்கள் மற்றும் நல்ல அன்பர்கள் மூலமாக தைரியமாக ஏற்றுக் கொள்வதன் மூலம் சிரமங்களைக் கடந்தார். அதிகமான தொண்டு நிறுவனங்களில் அடிப்படைப் பணிகளையும் கல்வியைக் கற்றுக் கொடுப்பதன் வாயிலாக மனதிற்கு திருப்தி தரும்படியான வேலைகளில் ஈடுபட்டார்.

கிடைத்த அலுவலங்களின் மூலம் விஜி தங்களது தனி தன்மையையும் திறமையையும் இழந்து வருந்தும் மற்ற திருநங்கைகளுக்கு முன் மாதிரியாக விளங்கினார்.

திருநங்கைகள் எதற்காக பாலியியல் தொழிலில் ஈடுபட வேண்டும்? அவர்களால் ஏன் இந்த சமூகத்தில் சாதாரண மனிதர்களைப் போல வாழ முடிவதில்லை? அவர்களால் ஏன் சமூகத்தில் மதிப்பான இடங்களிலும் பணியிலும் சேர்ந்து வாழ்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன? என்று மிகவும் வருத்தத்துடன் வினவுகிறார். South India Positive Network என்னும் அமைப்பில் சமூகப் பணி பற்றிய படிப்பைத் தொடர முடியாமல் போயிற்று. சில முக்கியமான கல்விக்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெறாமையால் அவர் உயர்கல்வியில் முதுநிலைப் படிப்பில் டிப்ளமோ படிக்கும்படி நேர்ந்தது. CSIM என்னும் அமைப்பில் கல்வியைத் தொடர்ந்தார். CSIM என்னும் அமைப்பில் கல்வியைத் தொடருவதன் மூலம் அவருக்கு அதிகமான பயன்கள் கிட்டியதாகக் கூறுகிறார்.

விஜி ”என்னுடைய அடிப்படையுடன் கூடிய அனுபவங்களின் மூலம் தொண்டு நிறுவனங்களை

ஒருங்கிணைத்து அவர்களின் செலவினங்களையும் கணக்கெடுக்கும்படியான திறமை CSIM மூலம்தான் எனக்குக் கிட்டியது” என்றார். மேலும் விஜி Madras Diocese Society யில் முதன் முதலாக திட்டச் செயலளாராகச் சேர்ந்தார். இந்த பணியில் இந்தியா முழுமையும் பயணம் செய்து தன்னுடைய ஆற்றலை நிரூபித்தார். இவ்வாறு செல்லும் சமயம் அதிகமான திருநங்கையர் தென்னிந்தியாவிலிருந்து சென்று பரவியிருப்பதாகக் கண்டுபிடித்தார். இதன் பின்னர் அனைத்து திருநங்கையரையும் ஒருங்கிணைத்து அவர்களின் குடும்பத்தில் சேர்த்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தார்.

திக்கற்ற கைவிடப்பட்ட சிறுவர்கள், பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்காக 2007 ஆம் ஆண்டு அன்பு அறக்கட்டளை என்னும் தொண்டு செய்யும் அமைப்பை நிறுவினார். இந்த நிறுவனத்தின் மூலம் திருநங்கையர்களின் தகவல் குறிப்புகள் சரியான விவரங்கள் அடங்கிய ஆவணங்களைத் தயார் செய்து அரசின் நலத்திட்ட உதவிகள் திருநங்கையருக்கு சரியான முறையில் கிடைக்கும்படி செய்தார்.

தற்சமயம் தூத்துக்குடி மாவட்டதில் மட்டும் 90 சதவிகித திருநங்கையர் அவர்களின் குடும்பங்களோடு இணைந்திருப்பதாகக் கூறுகிறார். விஜியும் அவரின் தந்தையும் மேற்கொண்ட பெருமுயற்சியால் சாதிக்க முடிந்ததைப் பெருமையாக எண்ணுகிறார். குடும்பம் என்னும் அமைப்பைத் தவிர வேறு எந்த ஒரு நிறுவனம் மூலமும் செயல்படுத்த முடியாது என்று திட்டவட்டமாக நம்பினார். விஜி தன்னுடைய சுவீகாரக் குழந்தைகளான 4 திருநங்கையருடன் வாழ்க்கையில் முன்னேறியதைக்

கண்ட பின்னர் மற்றவர்களுக்கும் தாங்கள் எல்லா விதமான தடைகளையும் நடைமுறைகளையும் கடந்து தங்களுடைய லட்சியங்களை நோக்கி பயணிக்க செய்து முன்னேற முடியும் என்ற தைரியமும் ஊக்கமும் ஏற்பட்டன.

தமிழக அரசின் திருநங்கையர் நலத்திட்டத்துறையில் கலந்துரையாடுவதன் மூலம் திருநங்கையருக்கு மனதளவில் உடலளவில் விழிப்புணர்வை உண்டாக்க முடிந்தது. விஜி 2012 ஆண்டு சட்டத்துறையில் லோக் அதாலத் (Lok Adalat) என்னும் சட்ட அமைப்பில் அங்கத்தினராக இருந்தார். மேற்கொண்டு சட்டம் பற்றிய படிப்பைப் படிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால் ஆந்திர மாநில பல்கலைகழகத்தில் சேர்ந்து படிக்க வாய்ப்பு கிட்டியது.

இங்கேயும் அவருக்கு சிக்கல்களும் தடைகளும் மனதளவில் துன்புறுத்தப்படுவதும் தொடர்ந்தன. எல்லாவற்றையும் கடந்து சட்டப் படிப்பை படித்து பட்டம் பெற்றார். தமிழ்நாடு புதுச்சேரி பார்கவுன்சில் (Bar Council) பெயரை பதிவு செய்து மதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

விஜி வக்கீலாகவும், கல்விமானாகவும், மனநல ஆலோசகராகவும், பதிப்பாளராகவும் முக்கியமாக ஒரு தாயாராகவும் இருந்து அவருடைய குடும்பத்திலுள்ள எல்லா திருநங்கை மகள்களையும் ஊக்கப்படுத்தினார். எத்தனையோ தடைகளையும் சவால்களையும் கேலி கிண்டல்களையும் கடந்து அவளின் தகப்பனார் கொடுத்த அறிவுரைகளான சுயமரியாதையையும், எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வதிலும் முனைப்புக் காட்டி சிறந்து விளங்கினார். உறவுகளும் நண்பர்களும் மற்றும் சமூக

அக்கறை உள்ளவர்களும் உறுதுணையாக இருந்ததால் தான் திருநங்கைகளுக்கு தங்களுடைய திறமையைவெளிக் கொண்டுவர முடியும். என்னடைய குடும்பத்தினரைப் போல மற்ற திருநங்கைகளின் குடும்பங்களும் தடைகளைக் கடந்து வர உறுதுணையாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். மேலும் என்னுடைய எல்லா விதமான வெற்றிகளையும் முன்னேற்றங்களையும் என் தகப்பனாருக்குக் காணிக்கையாகச் சமர்பிக்கின்றேன். நான் இன்று அடைந்திருக்கும் நிலைமைக்கு என் தகப்பனாரின் இன்சொற்களும் உறுதுணையுமே காரணமாகும் என்று உறுதியாகக் கூறுகிறார்.



எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும் விளிம்பு நிலை மக்கள் இருந்துக்கொண்டுதான் இருக்கிறார்கள், அரசாங்கங்கள் மட்டுமே இவர்களை காப்பாற்ற முடியாது. சமுதாய அக்கறை கொண்ட நல்ல உள்ளங்களும் சேர்ந்து தான் இதை செய்ய முடியும். அதற்கு வழிகாட்டும் CSIM நிறுவனம் உருவாக்கிய இந்த சமுதாய உதவியாளர்கள் இன்னும் அதிகமாக உருவாகி கொண்டு வருகிறார்கள். "நல்லவர் வாழும் புதிய சமுதாயம் நிச்சயம் ஒரு நாள் உருவாகும்" என்ற பாடல் வரிகளின் நம்பிக்கையின் விடிவெள்ளியே இத்தொகுப்பு.

**Dr. C. குமார் பாபு MD; DPM; Ph.D; FIPS**


CSIM

to learn • to heal • to raise

**Centre for Social Initiative & Management**

**391/1, Venkatachalapathi Nagar Alapakkam, Chennai - 600116.**

044 42805365 chennai@csim.in www.csim.in